


அறைவு 02 இயம் 33 April 05 - April 11, 2014
உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்
மலைமுரசு
MALAIMURASU
Registered as a newspaper in Sri Lanka
பக்கங்கள் : 16 விலை : 30.00 பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்



# கிழக்கிலும் தேடுதல் தொடங்கியது



(வைப்பகப் படங்கள்)

## "மக்களைப் பதற்றத்திற்கு உள்ளாக்கும் முயற்சி" அரியநேத்திரன்



விடுதலைப் புலிச் சந்தேகநபர்களைத் தேடும் நடவடிக்கைகள் கிழக்கிலும் ஆரம்பமாகியுள்ளன.

வடக்கு கிழக்கில் விடுதலைப் புலிகள் மீண்டும் உருவாகின்றார்கள் என்ற சந்தேகம் வலுத்ததை அடுத்து அவ்வமைப்பை மீண்டும் உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்கள் என்ற சந்தேகத்தின் பெயரில் நால்வரின் படங்களைப் பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டுள்ளது.

அவர்களைத் தேடும் பணிகளையும், அவர்களுடன் தொடர்புடையவர்களைக் கைது செய்யும் நடவடிக்கைகளையும் வடக்கில் முன்னெடுத்து வந்த படையினர் தற்போது கிழக்குப் பகுதிகளிலும் தேடுதல் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

அண்மையில் கிரான், கன்னன்குடா, பாண்டிருப்பு, சித்தாண்டி ஆகிய பிரதேசங்களில் திடீரென வீடுகளுக்குச் சென்ற படையினர் வீட்டில் வதிபவர்களை.....

13

## 8000 ரூபா விலைபோன 4 மாதப் பெண் சிசு



தனது மூன்றாவது பெண்குழந்தையைப் பணத்திற்கு விற்ற குற்றச்சாட்டில் தாயொருவர் கைதாகியுள்ளார்.

இச்சம்பவம் கிழக்கில் கல்குடாத் தொகுதியில் இடம்பெற்றுள்ளது.

வறுமை காரணமாக தனது மூன்றாவது பெண் குழந்தையை விற்க முனைந்த தாயையும், அக்குழந்தையை எட்டாயிரம் ரூபா செலுத்திப் பெற்றுக்கொண்ட

13

## வாராந்த வட்டிக்குத் தடை



நுண்நிதிக் கடன் கொடுப்பனவுகள் தொடர்பாகக் கடும் சட்ட திட்டங்களை மட்டக்களப்பு மாவட்டச் செயலகம் மாவட்ட அளவில் விதித்துள்ளது.

அதனடிப்படையில் வாராந்தம் வட்டி வசூலிக்கும் நடவடிக்கைகள் யாவும் நிறுத்தப்பட வேண்டும் என்ற கட்டளையும் இடப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட மக்களை மேலும் வறுமை....

13

## 25 வருடங்களின் பின் விடுதலை

பாலத்தோப்பூர் இராணுவ முகாமினுள் அடைபட்டிருந்த பாலத்தடிச்சேனை ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயமானது அம்முகாமின் இராணுவக் கட்டளை அதிகாரியினால் அம்மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை மூதூர் இந்துக் குருமார் சங்கத்தினரை அழைத்த மேற்படி இராணுவ அதிகாரி கோயிலை அவர்களிடம் .......

13

## சி.வி யின் கத்தியால் அவருக்கே குத்து



வடமாகாணச் செயலாளராக இருக்கும் விஜயலட்சுமிக்கு முதலமைச்சர் ஒரு சுற்றுநிருபம் கூட அனுப்பமுடியாதவாறு உயர்நீதிமன்றம் இடைக்கால தடையைப் பிறப்பித்துள்ளது. நீதியரசரான விக்னேஸ்வரனுக்கு அவரின் கத்தியால் அவருக்கே குத்தப்பட்டுள்ளது என முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சரும் தற்போதைய சனாதிபதி ஆலோசகருமான சிவனேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

வடமாகாணசபை முதலமைச்சர் விக்னேஸ்வரன் வயதில் முதிர்ந்தவர். வயதில் அவரைப் பார்த்தால் எனக்கு அண்ணன், முதலமைச்சராக பார்த்தால் அவர் எனக்கு தம்பி. இதனை

13

MUFEEDHAS®
CREATIVE FASHION WEAR DEALER
Email: info_mufeedhas@yahoo.com
Accepted all cards
BRANCHES:
MUFEEDHAS LADIES AVENUE
NO: 13, 3RD CROSS STREET,
TRINCOMALEE.
TEL: 026 22227440, MOBILE: 077 0798227
FAX: 026 2220440
MUFEEDHAS PLUS
NO: 125, N.C. ROAD,
TRINCOMALEE.
TEL: 026 2224429
MOBILE: 077 1880565
MUFEEDHAS TEXTILE
NO: 45, MAIN STREET,
BATTICALOA.
TEL: 065 2223616
MOBILE: 077 5757949
EXPRESS FASHION
NO-56, 2ND CROSS STREET,
COLOMBO 11.
TEL: 011 2399185 MOBILE: 077 8469339



உங்களுக்குத் தேவையான அனைத்து
ஆடைத்தெரிவுகளையும் நியாயமான
விலையில் பெற்றுக்கொள்ள
விசாலமான காட்சி அறையில் வந்து

STUDY & WORK
UK - PART TIME JOB, Payment in Installments
USA /CANADA - PART TIME JOB, PR, Tuition fee after visa
JAPAN - PART TIME JOB, PR, Tuition fee after visa
FRANCE/SWITZ - PART TIME JOB+ IELTS+ WORK PERMIT
LATVIA - A/L + SCHENEGEN Visa &Lower Cost +Part Time
RUSSIA - NO SPONSOR + NO IELTS+ Credit Transfer To Europe
ITALY - A/L Must + Less Cost + Work +Limited Seats
SINGAPORE / MALAYSIA - No IELTS & Lower Cost
STUDY MEDICNE IN RUSSIA, BELARUS, UKRAINE & GEORGIA @LOWER COST
100% scholarship
OTHER SERVICES - Vist Visa , dependant Visa
Contact : 0778438403
READ International
No: 201-1/1A, Galle Road, Dehiwala.( Opposite to the HNB)
read.international@ymail.com
*CONDITION APPLIES

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை
malaimurasu@hotmail.com 075-4252042

# புதிய தடைகள்...

புலம் பெயர் நாடுகளில் இயங்கும் பதினாறு சர்வதேசத் தமிழர் அமைப்புக்களைத் தடைசெய்து இலங்கை அரசு தனது பதிலடி நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது.

ஜெனீவாவில் பிரேரணை முன்வைக்கப்பட முன்னரே இலங்கை தனது அதிருப்தியையும் அதற்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகளையும் சூசகமாக சர்வதேச அரங்கில் இலங்கை தெரிவித்திருந்தது.

பிரேரணை முன்வைக்கப்பட்டு வெற்றியடைந்துள்ள நிலையில் அரசின் அதிரடி அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இந்தத்தடையால் பல்வேறு முனைகளில் அரசு தந்திரோபாய யுத்தத்தை ஆரம்பித்துள்ளது எனலாம்.

வெளிநாட்டிலுள்ள தடைசெய்யப்பட்ட சர்வதேச அமைப்புக்களுடன் சர்வதேச நாடுகள் தொடர்புகளை ஏற்படுத்துவது ஐநாவில் கொண்டு வரப்பட்ட பிரேரணையொன்றின் மூலம் தடுக்கப்படுகின்றது. இப் பிரேரணை இரட்டைக் கோபுரத் தாக்குதலை அடுத்து அமெரிக்காவால் முன்வைக்கப்பட்ட பிரேரணையாகும். பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என்ற இப் பிரேரணையால் அரசொன்றால் பயங்கரவாதத்தை ஊக்குவிக்கும் அமைப்புக்களாக இனங்காணப்பட்டு தடைசெய்யும் அமைப்புக்களுடன் ஏனைய சர்வதேச நாடுகள் உறவுகளைப் பேணுவது தடுக்கப்பட்டுள்ளது.

இதனால் தடைசெய்யப்பட்ட புலம் பெயர் அமைப்புக்களுடன் இனி உலக நாடுகள் தொடர்புகளை ஏற்படுத்துவதற்குப் பெரும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளன.

உள்நாட்டிலுள்ள தமிழ் மக்கள் இத் தடைகளின் ஊடாக பல பிரச்சனைகளை எதிர்கொள்வர். சொல்லப்பட்ட அந்தப் பதினாறு அமைப்புக்களில் சில வடக்கிலும் கிழக்கிலும் கல்விக்கான உதவிகளையும், வாழ்வாதார உதவிகளையும் வழங்கி வருகின்றது. அவ்வாறான உதவிகளை இனிப் பெற்றுக்கொள்வது இலங்கையில் சட்டவிரோதமானதாகி விடும்.

அத்துடன் அவ்வாறான அமைப்புககளினால் ஒழுங்குபடுத்தப்பட்ட எதிர்ப்பார்ப்பாட்டங்கள், அரசியல் செயற்பாடுகள் போன்றவற்றில் கலந்துகொண்டுள்ள மானமுள்ள தமிழர்களின் இலங்கை வாழ் உறவினர்களின் வாழ்க்கை பெருங் கேள்விக்குறியாகப் போய்விடும்.

வெளிநாட்டில் வெளிப்படையாக நிகழ்த்தப்படும் இலங்கை அரசிற்கு எதிரான செயற்பாடுகளுக்கு வருகை தருவோரை அரசு இங்கிருந்தபடியே மிகக் குறைத்துவிடும்.

அடுத்து உள்நாட்டிலுள்ள தமிழரைக் கைது செய்யும் தடையற்ற அதிகாரத்தை அரசின் கைகளுக்கு இந்தத் தடை வழங்கியுள்ளது.

சந்தேகத்திற்கிடமான ஒருவரைக் கைது செய்ய வேண்டுமாயின் அவருக்கும் மேற்சொன்ன அமைப்புக்களுக்கும் நிழல் தொடர்புகள் இருப்பதாகச் சொல்வதன் ஊடாக அவரைக் கைது செய்து சிறையிடும் அதிகாரத்தை அரச எந்திரம் பெற்றுக் கொண்டுள்ளது.

ஆக மொத்தம் புலம் பெயர் அமைப்புக்களின் மீதான தடையானது ஒட்டுமொத்தத் தமிழரையும் பாதிக்கும் ஓர் தடையாகவே இருக்கப்போகின்றது. அந்தத் தடை தொடர்பான தெளிவும் அறிவும் மக்கள் அனைவரையும் சென்றடைய வேண்டியது காலத்தின் தேவையே.

அறிவுடைய அனைவரும் இத்தடை பற்றி அயலவருடன் கலந்தாலோசிப்பதன் ஊடாக தடை தொடர்பான தெளிவை அனைவருக்கும் வழங்க முடியும்... செய்வோமா?

# கிழக்கில் உணவுப் போசாக்குத் துறை அமைச்சர்

(ஹரன்)
ஆலையடிவேம்பு பிரதேச நன்நீர் மீன்பிடிப்பாளர்களின் தேவைகளை கண்டறிந்து அவற்றிற்கான தீர்வினை பெற்றுக்கொடுகுமுகமாக அண்மையில் பனங்காடு மீனவர் சங்கம் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்விற்கு வருகை தந்த சிரேஷ்ட உணவு போசாக்குத்துறை அமைச்சர் பி.தயாரெத்ன உரையாற்றுவதனையும் அருகில் அமைச்சரின் செயலாளர் சுனில் மற்றும் கலந்து கொண்ட மீனவர்களில் ஒருபகுதியினரையும் படத்தில் காணலாம்





# மட்டு-தமிழ்ச்சங்கத் தலைவராக திரு.எதிர்மன்னசிங்கம்

## முன்னாள் கலை பண்பாட்டுப் பணிப்பாளர்

மட்டக்களப்பு தமிழ்ச் சங்கத்தின் 2014 ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாக சபை உறுப்பினர்களின் தெரிவு கல்லடியில் உள்ள தமிழ் சங்கக் காணியின் தற்காலிக கட்டிடத்தில் கடந்த 29ம் திகதி நடைபெற்றது.

2013 ஆம் ஆண்டிற்கான தலைவர் பேராசிரியர் மா. செல்வராசா தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் நடப்பு ஆண்டிற்கான புதிய நிர்வாக அங்கத்தினர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர்- கலாபூசணம் செ. எதிர்மன்னசிங்கம், செயலாளர்- செ. தபராசா, பொருளாளர்- வி. ரஞ்சிதமூர்த்தி, நிதிச்செயலாளர்- சா. சிவலிங்கம், உபதலைவர்கள்- கலாபூசணம் - பூ. ம. செல்லத்துரை, வே. தவராசா, சைவப்புலவர் சிவானந்தஜோதி ஞானசூரியம், உபசெயலாளர்கள்- த. இன்பராசா, சுந்தரமதி வேதநாயகம், காப்பாளர்கள்- பேராசிரியர். சி. மௌனகுரு, பேராசிரியர். மா. செல்வராசா, நேசம்மா செபரெத்தினம் ஆகியோர் தெரிவாகியுள்ளனர்.

# சிறுமியை வல்லுறவு புரிந்த இளைஞன் கைது

பத்துவயதுச் சிறுமியைத் தனது பலாத்காரத்திற்கு பலியாக்கிய பதினெட்டு வயதிளைஞன் காத்தான் குடியில் கைதாகியுள்ளார்.

புதிய காத்தான் குடியைச் சேர்ந்த இவ்விளைஞன் பாலமுனைப் பிரதேசத்தில் உள்ள சிறுமியொருவரை வன்புணர்ந்ததுடன் மற்றொரு சிறுமியையும் தனது இச்சைக்குப் பலியாக்க முனைந்துள்ளார்.

அதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளை அடுத்து காத்தான்குடி காவல்துறையினர் இளைஞனைக் கைது செய்ததுடன் பாதிக்கப்பட்ட சிறுமிகளை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சைகளுக்காக அனுமதித்துள்ளனர்.

# புல்லுமலையில் யானை தாக்கிப் பெண் பலி


மட்டக்களப்பு மாவட்டத்தின் செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவில் பெரியபுல்லுமலை பகுதியில் நேற்று புதன்கிழமை இரவு யானை தாக்கியதன் காரணமாக பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்றிரவு 12.30 மணியளவில் பெரியபுல்லுமலை, மாந்தோட்டம் பகுதியில் உள்ள வீட்டிலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும், இதன்போது மூன்று பிள்ளைகளின் தாயான தர்மலிங்கம் தவமணி (56வயது) என்ற பெண்ணே உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீட்டில் பலகாரம் செய்து கொண்டிருந்த போது யானையொன்று வளவினுள் நுழைவதினைக் கண்டு ஓடிய போது குறித்த பெண்ணை யானை தாக்கியதாக உயிரிழந்தவரின் கணவர் தெரிவித்தார்.

தான் தனது பிள்ளைகளை அழைத்துக்கொண்டு ஓடிய நிலையில் பின்னால் ஓடி வந்த தனது மனைவியை யானை தாக்கியதாகவும், யானையினை தடுக்க பல பிரயத்தனங்களை மேற்கொண்ட போதும் தனது மனைவியை காப்பாற்ற முடியவில்லையெனவும் தெரிவித்தார்.

# தமிழ்மணி ந. பாலேஸ்வரி அவர்களின் நினைவுப் பேருரை




திருகோணமலையின் முதற் பெண் எழுத்தாளராகிய அமரர். தமிழ்மணி. ந.பாலேஸ்வரி அவர்களிற்கான அஞ்சலி நிகழ்வும். நினைவுப்பேருரையும் 2014.03.30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 04.00 மணிக்கு தி / ஸ்ரீசண்முகா இந்து மகளிர் கல்லூரியில் பாடசாலையின் அதிபர் திருமதி.எஸ்.ஜெயபாலன் தலைமையில் நடைபெற்றது.




இவர் 12 நாவல்களையும் . சுமார் 200க்கும் மேற்பட்ட சிறுகதைகளையும் எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது. நிகழ்வின் பிரதம விருந்தினராக திருமலை நகரபிதா திரு.ந.செல்வராசா அவர்கள் கலந்து கொணடார். நினைவுப்பேருரையை திருமலை நவம் அவர்கள் நிகழ்த்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாபெரும் எடுப்பில் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கை

மட்டு மாநகர ஆணையாளர் திரு.மா.உதயகுமார் அவர்களின் ஏற்பாட்டில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலக உத்தியோகத்தர்கள், மண்முனை வடக்கு பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், காவல்துறை மற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், வீதி அபிவிருத்தி அதிகார சபை, வரியிறுப்பாளர் சங்கம் மற்றும் பொது அமைப்புகள் இணைந்து 31.03.2014 காலை 7.00 மணிக்கு சமய சமூகப் பிரமுகர்களின் பிரசன்னத்துடன் சிவானந்தா மைதானத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டது.

நாவற்குடா பொதுச் சுகாதார பரிசோதகர் பகுதியில் உள்ள கல்லடி உப்போடை, நொச்சிமுனை, நாவற்குடா, மஞ்சந்தொடுவாய் ஆகிய பகுதிகள் 08 வலயங்களாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு வலயத்திற்கும் 15 பேர் அடங்கிய குழுக்கள் வீடு வீடாக பரிசோதித்ததுடன் 20 திண்மக் கழிவகற்றும் வாகனங்களுடன் 225 தொழிலாளிகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டனர். பொது இடங்கள் மாநகர சபையினரால் துப்பரவு செய்யப்பட்டன.

2000ற்கும் மேற்பட்ட வீடுகளில் களப்பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதுடன் இதில் டெங்கு நுளம்புக் குடம்பிகள் அவதானிக்கப்பட்டு 47 குடியிருப்பாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கையும் எடுக்கப்பட்டது. மேலும் 100ற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு அறிவித்தலுடன் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதுடன் ஏனையோருக்கும் டெங்கு தடுப்பு நடவடிக்கை தொடர்பான ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

மேலும் டெங்கு நுளம்பு பரவக்கூடிய நிலையில் கவனிப்பாரற்று இருந்து அடையாளம் காணபட்ட 24 வெற்றுக்காணிகள் மாநகர சபையினால் பொறுப்பெற்கப்பட்டு "இக்காணி மட்.மாநகர சபைக்குச் சொந்தமானது" எனும் பெயர்ப் பலகை நாட்டப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென தெரிவிக்கப்பட்டது.

மேலும், வீதிகளில் திரிந்த பொது மக்களுக்கு இடையூறு விளைவிக்கக்கூடிய கட்டாகலி மாடுகள் மாநகர சபை ஊழியர்களினால் பிடித்துக் கட்டப்பட்டது.

இறுதியாக மேற்படி நிகழ்வில் கலந்துகொண்ட அனைவரும் மாலை 5.00 மணியளவில் சிவானந்தா மைதானத்தில் ஒன்று கூடியதுடன் மாநகர ஆணையாளர் திரு.மா.உதயகுமார் அவர்களால் இந்நிகழ்விற்கு கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்ததுடன் அவர்களை கௌரவித்து சான்றிதழ்களும் வழங்கி வைத்தார்.

# புத்தாண்டுப் பரிசு போலி நாணயத்தாள்கள்

5000 ரூபா, 1000 ரூபா போலி நாணயத்தாள்களின் புழக்கம் அதிகமாக வுள்ளதால் புத்தாண்டு காலத்தில் பொதுமக்கள் மிக மிக அவதானமாக இருக்க வேண்டும் என காவல்துறைத் தலைமையகம் பொதுமக்களை கேட்டுக் கொள்கிறது.

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு அனைத்து பகுதிகளிலும் விற்பனை களை கட்டியுள்ளதால் போலி நாணயத்தாள்களை புழக்கத்தில் விடக் கூடிய ஆபத்துகள் உள்ளன. ஏற்கனவே, கைப்பற்றப்பட்ட போலி நாணயத்தாள்கள் சில புழக்கத்தில் விடப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன.

# ஆங்கிலப் பத்திரிகைகள் மீதான பார்வை

## பயிற்சியின் போது பெண்களைப் பொல்லால் அடித்த இராணுவத்தினர் இராணுவ நீதிமன்றில்

இராணுவப் பயிற்சி வழங்கும் போது பெண் இராணுவத்தினரைச் சரமாரியாகத் தாக்கிய ஒளிப்பேழை வலைப்பின்னல் ஊடாக வெளியானதைத் தொடர்ந்து அவ்வாறு இம்சித்த இராணுவ வீரர்களை இராணுவ நீதிமன்றில் நிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அவ்வொளிப்பேழையில் இம்சைப் படுத்தும் இராணுவத்தினரின் முகங்கள் மிகத் தெளிவாகத் தெரிந்ததால் அவர்கள் யாரென அடையாளம் காணப்பட்டுள்ளதாக பிரிகேடியர் வணிகசுந்தர தெரிவித்துள்ளார்.

இராணுவ நடத்தை விதிகளை மீறியுள்ள அவர்களின் மீது கடும் நடவடிக்கை எடுக்கும் உத்தரவை இராணுவத் தளபதி வழங்கியிருப்பது குறிப்பிடத் தக்கது. (சண்டே லீடர்)

## வாகன வரிப்பத்திரங்கள் மீது சுங்கத்திற்குக் கூடுதல் அதிகாரம்

வாகன அனுமதிப்பத்திரங்களில் இறக்குமதி செய்யப்படும் வாகனங்களின் பெறுமதியை தமது அளவீட்டின் அடிப்படையில் மதிப்பிடுவதற்கு சுங்கத் திணைக்களத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

வாகன அனுமதிப்பத்திரங்களைக் கொண்டு இறக்குமதி செய்யப்படும் வாகனங்களின் உச்சப் பெறுமதி 35,000 அமெரிக்க டொலர்களை விஞ்சக் கூடாது என ஏற்கனவே மட்டம் நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

எனினும் அப் பெறுமதியை விட கூடிய பெறுமதிகளைக் கொண்ட வாகனங்கள் கூட பத்திரம் மூலமாக இறக்குமதி செய்யப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டிருந்தது.

அவ்வாகனங்கள் தொடர்பாக சுங்கத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களில் வாகனத்தின் பெறுமதி 35,000 அமெரிக்க டொலர் உச்ச மட்டத்திலேயே காட்டப்பட்டிருந்தமையும் அதனை விஞ்சிய தொகை இருட்டடிக்கப்பட்டிருந்தமையும் விசாரணைகள் மூலம் தெரியவந்ததை அடுத்து நிதி அமைச்சு சுங்கத் திணைக்களத்திற்கு இந்த அனுமதியை வழங்கியுள்ளது.

## குறைக்கப்பட்ட தொழில் வாய்ப்புக்கள்

தென்கொரியா இலங்கைக்கு வழங்கி வந்த வருடாந்த வேலைவாய்ப்புத் தொகை குறைக்கப்பட்டுள்ளது.

அதன்படி 2014ம் ஆண்டுக்கு 900 மீன்பிடி வேலை வாய்ப்புக்களையும் 100 கட்டுமாணத்துறை வேலை வாய்ப்புக் களையும் மட்டுமே தென்கொரியா இலங்கைக்க வழங்கியுள்ளது.

கடந்த வருடம் இந்தக் கோட்டா 4500 தொழில் வாய்ப்புக்களாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வடக்கு கிழக்கில் இடைக்கால நிர்வாகம்

அமெரிக்காவும் அதன் ஆதரவு நாடுகளும் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவந்துள்ள பிரேரணையின் பின்னணியில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இடைக்கால நிர்வாகமொன்றை ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையில் உருவாக்க முயற்சிப்பதாக அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

இதற்கு வலுச்சேர்க்கும் முகமாக இலங்கையில் இருந்து அம்மையார் சந்திரிக்காவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் விடுத்துவரும் அறிவித்தல்கள் காரணமாக இருக்கின்றன என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## துருக்கியின் தடை சட்டவிரோதமானது

துருக்கியில் சமூக இணையத் தளமான ட்விட்டர் தடை செய்யப்பட்டமை சட்ட விரோதமானது என அந்த நாட்டின் அரசியலமைப்பு நீதிமன்றம் தீர்பளித்துள்ளது.

மக்களின் கருத்து வெளியிடும் சுதந்திரம் மற்றும் தனி உரிமைகளை மீறும் வகையில் இந்த தடை அமைந்துள்ளதாக நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த தடையை நீக்குமாறு நாட்டின் ஊடக ஒழுங்குபடுத்தும் பிரிவிற்கும் அரசாங்கத்திற்கும் துருக்கி உயர் நீதிமன்றம் அறிவித்தல் அனுப்பியுள்ளது. (டேர்கி டைம்ஸ்)

## வெற்றிகர முன்னேற்றத்தை பின்தள்ளும் சில சர்வதேச நாடுகள்

சுதந்திரமாகவும் சுயாதீனமாகவும் நாட்டையும் மக்களையும் முன்னேற்றி வருவதைப் பொறுக்காத நாடுகளே எமது முன்னேற்றத்தை பின்நோக்கித் தள்ள முயற்சிக்கின்றன என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் தெரிவித்தார்.

எத்தகைய சவால்களை எதிர்கொள்ள நேர்ந்தாலும் வெற்றிகொண்ட சுதந்திரத்தை பின் தள்ள இடமளிக்கப் போவதில்லை என குறிப்பிட்ட ஜனாதிபதி, ஜப்பான் போன்ற நாடுகள் எமது முன்னேற்றத்துக்குப் பங்களிப்புச் செய்து வருகையில் வேறு சில சர்வதேச நாடுகள் எமது வெற்றிகரமான முன்னேற்றத்தை பின்தள்ளும் நடவடிக்கைகளையே மேற்கொண்டு வருகின்றன எனவும் தெரிவித்தார். (மிரர்)

## பல மில்லியன் செலவில் எண்ணை வினியோகக் குழாய்கள்

இலங்கையின் நிர்மாணிக்கப்படவுள்ள நிலத்தடி எண்ணை வினியோகக் குழாய் நிர்மாணப் பணிக்கு அமெரிக்கக் கம்பனியொன்று தெரிவாகியுள்ளது.

பல பில்லியன் ரூபா செலவில் உருவாக்கப்பட்வுள்ள இந் நிலத்தடி வினியோகக் குழாய் கொழும்பு கப்பல்துறையில் இருந்து கொலன்னாவை எண்ணைச் சுத்திகரிப்பு நிலையம் வரை இடப்படவுள்ளது.

கப்பலில் கொண்டு வரப்படும் மசகு என்னைணைக் நிலத்தடிக் குழாய்களின் மூலம் நேரடியாக கொலன்னாவை எண்ணைக் குதங்களுக்கு வினியோகிக்கவே இத்திட்டம் உதவிபுரியவுள்ளது.

இத் திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு 6500 மில்லியன் இலங்கை ரூபாய்கள் ஆகும்.

தற்போதுள்ள குழாய்கள் சுமார் 40 வருடங்களுக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்டவை. அவை வெடிப்புக்களைக் கொண்டிருப்பதால் முழ அளவில் கப்பலில் கொண்டு வரப்படும் மசகு எண்ணையை சுத்திகரிப்பு நிலையத்திற்குப் பெற்றுக்கொள்ள முடியாதிருப்பதாக பெற்றோலியத் துறை பிரதானி தெரிவித்துள்ளார்.

புதிய குழாய்கள் மூலம் 45000 மெட்ரிக் தொன் மசகு எண்ணையை 2 நாட்களுள் இறக்கிக் கொள்ள முடியுமாம்.

(டைம்ஸ்)

## காசுத்தாள்கள் பிளாத்திக்கில் - இந்தியா அச்சிட முடிவு

இந்தியாவில் நாணயத் தாள்களை காகிதத்தில் அச்சடிப்பதைத் தவிர்த்து பிளாஸ்டிக் இழைகளில் அச்சடிக்க ரிசர்வ் வங்கி 2010ஆம் ஆண்டு தொடக்கத்தில் முடிவு செய்திருந்தது.

இந்த் பிளாஸ்டிக் நாணயத் தாள்களை இந்தியா முழுவதும் ஒரே சமயத்தில் வெளியிடாமல், சோதனை முயற்சியாக சில நகரங்களில் மட்டும் செயற்படுத்த ரிசர்வ் வங்கி திட்டமிட்டுள்ளது.

முதற்கட்டமாக 10 ஷரூபாய் நாணயத் தாள்களை அச்சடிக்க உள்ளது.


பிளாஸ்டிக் நாணயத் தாள்கள் முதன் முதலில் 1968ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவில் அச்சடிக்கப்பட்டன.

அவுஸ்திரேலியாவைத் தொடர்ந்து கனடா, சிங்கப்பூர் போன்ற நாடுகளும் பிளாஸ்டிக் நாணயத் தாள்களைப் பயன்படுத்த ஆரம்பித்தன. இவை தவிர, உலகின் 30 நாடுகள் பிளாஸ்டிக் நாணயத் தாள்களைப் பயன்படுத்தி வருகின்றன. இவற்றைப் பயன்படுத்தும் பெரும்பாலான நாடுகள் குளிர் பிரதேசங்களாகும். இந்நிலையில், ஆசியாவின் தட்பவெப்ப நிலைக்கு பிளாஸ்டிக் நாணயத் தாள்கள் தாக்குப்பிடிக்குமா என்பதையும் சோதித்து அறிய வேண்டியுள்ளது. (ஹிந்து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# -ஜெனீவாவின் பின்னரான ஆப்பு-

-ராஜா பரமேஸ்வரி-



அண்மையில் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ அரசாங்கத்திற்கு எதிராக ஜநாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் பூரித்து நின்ற உலகத் தமிழருக்கு மகிந்த அரசாங்கம் வைத்திருக்கும் ராஜதந்திர ரீதியான மிகப்பெரிய ஆப்பில் இருந்து புலம்பெயர் தமிழர்களும், அவர்களுடைய வாழ்வுடன் பின்னிப் பிணைந்த தாயக உறவுகளும் மீள முடியுமா? முள்ளிவாய்க்காலில் மூழ்கித் தவழ்ந்து தவழ்ந்து எழுந்து நிற்க முற்பட்டவேளை மீண்டும் ஒரு பலமான தாக்குதலை மிகவும் நுட்பமாக நடாத்தியிருக்கிறது இலங்கை அரசாங்கம்.

இந்தத் தடையால் புலம்பெயர் அமைப்புகளுக்கு எந்தப் பாதிப்பும் இல்லை என அந்த அமைப்புக்கள் மார்தட்டிக்கொள்ளலாம். மீசையில் மண் பிடிக்கவில்லை எனக் கூறலாம்... ஆனால் இலங்கை அரசால் திட்டமிட்டு அடிக்கப்பட்ட இந்த ஆப்பை எப்படி புலம்பெயர் மற்றும் தாயக அமைப்புக்கள், தமிழ் மக்கள் எதிர்கொள்ளப் போகிறார்கள்? என்பதிலேயே ஈழத் தமிழ் மக்களின் எதிர்காலம் குறித்த பல விடயங்கள் தங்கி உள்ளன.

உலக அளவில் பரந்திருக்கும் 16 அமைப்புக்களைப் பெயரிட்டு, அந்த அமைப்புக்களுடனோ அல்லது அவற்றின் தலைமைத்துவங்களுடனோ, உறுப்பினர்களுடனோ தொடர்பு வைத்திருப்பது பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தவறானதாகும் என இலங்கை அரசு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

குறிப்பாக ஐ.நா பாதுகாப்புச் சபைக்கு அமெரிக்காவினால் 28.9.2001ல் கொண்டுவரப்பட்ட பிரேரணை எண் 1373 மூலமாக இந்த நகர்வு மேற்கொள்ளப்பட்டு உள்ளது.

இரட்டை கோபுரங்கள் மீதான தாக்குதலை அடுத்து ஐ.நா பாதுகாப்பு சபையில் அமெரிக்கா சமர்ப்பித்த இந்தப் பிரேரணை, வெளிநாடுகளில் இருந்து இயங்கும் தீவிரவாத அமைப்புக்களையும் அவற்றிற்கு துணைபுரியும் அமைப்புக்களையும் தடை செய்யும் அதிகாரம் கொண்டது.

இதன்மூலமாகவே விடுதலைப்புலிகள் அமைப்பு தடை செய்யப்பட்டதுடன் அதன் துணை அமைப்புக்கள் சிலவும் தடைசெய்யப்பட்டன. அது மட்டும் அல்லாது அவ் அமைப்புக்களின் பல மில்லியன் பெறுமதியான அசையும், அசையாச் சொத்துக்களும் முடக்கப்பட்டன.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்க தலைமையிலான அரசாங்கத்தில் வெளிநாட்டு அமைச்சராக இருந்த லக்ஸ்மன் கதிர்காமர் அமெரிக்காவினால் கொண்டுவரப்பட்ட அந்த பிரேரணையைச் சாதகமாகப் பயன்படுத்தி விடுதலைப் புலிகளை உலக அளவில் பிரதான நாடுகளில் தடைசெய்ய முழுமூச்சாகச் செயற்பட்டார்.

அமெரிக்காவினால் கொண்டுவரப்பட்ட இந்தப் பிரேரணையின் மூலமாகவே அமெரிக்காவினால் தனக்கெதிராகக் கொண்டுவரப்பட்ட தீர்மானத்திற்குப் பழிவாங்கும் துரும்பாக இலங்கை மீண்டும் கையில் எடுத்து உள்ளது. இதன் மூலம் இப்போ எஞ்சியிருக்கும் புலம்பெயர் அமைப்புக்களையும் முடக்கத் துணிந்திருக்கின்றது. இந்த நடவடிக்கையின் மூலம் இலங்கை அரசாங்கம் தனக்கெதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு மிகப் பெரும் அதிர்வாக இதனை மேற்கொள்ள முற்படுகிறது.

ஐ.நா பாதுகாப்பு சபைக்கு அமெரிக்காவினால் 28.9.2001ல் கொண்டுவரப்பட்ட பிரேரணை எண் 1373 மூலமாக இவ்வாறான தடை ஒன்றைக் கொண்டு வருவதற்கு, இலங்கை அரசாங்கம் பாராளுமன்றத்தில் கூட விவாதத்தையோ, அனுமதியையோ பெறத் தேவையில்லை. வெளிநாட்டு அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தனது அமைச்சின் ஊடாக வர்த்தமானி அறிவிப்பின் மூலம் தடையை நடைமுறைப்படுத்த முடியும்.

இந்த வர்த்தமானி அறிவிப்பின் ஊடாக தடை அமுலுக்கு வந்தால், இலங்கை அரசாங்கத்திற்கு எதிராகப் பிரேரணையைக் கொண்டு வருவதற்கு எந்த நாடுகள் அனுசரணை வழங்கியிருந்தனவோ அந்த நாடுகள் சிக்கலான சூழலுக்குள் அகப்படுவது தவிர்க்க முடியாது.

காரணம் ஜநா மனித உரிமைகள் அமைப்பின் ஊடாக சர்வதேச விசாரணையை இலங்கை தனது எல்லைக்குள் அனுமதிக்காத வரை இலங்கையின் ஆட்புல எல்லைகளுக்கு அப்பால் உலக நாடு ஒன்றிலோ அல்லது பலவற்றிலோதான் விசாரணைப் பொறிமுறையை ஆரம்பிக்க வேண்டும்.

அவ்வாறாயின் அந்த விசாரணைப் பொறிமுறைக்கான பிரதான சாட்சியங்களை இனம் கண்டு, ஒருங்கமைத்து வழங்கும் ஆற்றல் புலம்பெயர் அமைப்புகளுக்கே உண்டு. எனினும் இலங்கை அரசாங்கத்தால் பயங்கரவாதத்தை ஊக்குவிக்கும் அமைப்புக்களாக இனம் காணப்பட்டு தடை செய்யப்பட்ட அமைப்புக்களுடன் ஐநாவின் எண் 1373 பிரேரணையை ஏற்றுக் கொண்ட நாடுகள் எப்படி உறவுகளைப் பேண முடியும்? இதற்கு மிக முக்கிய உதாரணமாக எனக்கு நினைவில் வருவது, 2002ல் ஆரம்பிக்கப்பட்ட விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளின் போது புலிகளின் தடை தற்காலிகமாக இலங்கை அரசாங்கத்தால் நீக்கப்பட்டு இருந்தது. எனினும் இந்தக் காலப் பகுதியில், இணைத் தலைமை நாடுகளால் அமெரிக்காவில் ஏற்பாடு செய்யப்பட்ட இலங்கைக்கு நிதி வழங்கும் நாடுகளின்

## "ஐந்து பொறிகளில் சிக்கித் தவிக்குமா சர்வதேசப் புலம் பெயர் அமைப்புக்கள்?"

கூட்டத்தில், இலங்கை அரசாங்கத்துடன் சம பலத்தில் பேச்சுவாத்தையில் ஈடுபட்ட விடுதலைப் புலிகளையும் அழைக்க வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது. எனினும் அமெரிக்க அதனை பலமாக நிராகரித்தது. தனது தடைப் பட்டியலில் உள்ள அமைப்பொன்றை உத்தியோகபூர்வ பேச்சில் கலந்துகொள்ள அமெரிக்காவுக்கு அழைக்க முடியாதென்ற முடிவில் அந்நாட்டு அரசாங்கம் இறுக்கமாக இருந்தது.

இவை யாவற்றையும் தாண்டி அவ்வாறு உறவுகளை பேணினாலும் தடைசெய்யப்பட்ட அமைப்புக்கள் அல்லது அவர்களின் ஆதரவாளர்கள், உறுப்பினர்கள் வழங்கும் சாட்சியங்களை அடிப்படையாகக் கொண்டு ஒரு இறைமையும், தன்னாதிக்கமும் கொண்ட நாட்டின் மீது எப்படி நடவடிக்கை எடுக்க முடியும்? என்ற கேள்விகள் இலங்கைக்கு ஆதரவான நாடுகளால் முன்வைக்க முடியும். அதனை அமெரிக்க, பிரித்தானிய தலைமையிலான நாடுகள் எவ்வாறு எதிர்கொள்வது?

இவற்றையும் மேவி இலங்கை அரசாங்கத்தால் பட்டியலிடப்பட்ட இந்த அமைப்புக்களின் தடையை அமெரிக்கா தலைமையிலான நாடுகள் பகிரங்கமாக நிராகரிக்கவோ அல்லது கண்டிக்கவோ துணிவார்களா?

அதற்கு அப்பாலும் இலங்கைக்கு எதிரான பிரேரணையை முன்னின்று வலியுறுத்தி பரவலாக வேலை செய்த சர்வதேச மன்னிப்புச் சபை, மனித உரிமைகளுக்கான கண்காணிப்பகம் உள்ளிட்ட சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்கள் இந்த தடையை பகிரங்கமாக கண்டிப்பார்களா? என்ற கேள்விகள் தொடராக எழுகின்றன...

இது இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட ஜெனீவாத் தீர்மானத்திற்கு இலங்கை வைத்த முதலாவது பொறி.

**இரண்டாவது பொறி...**

இலங்கை அரசாங்கத்தால் பட்டியலிடப்பட்ட அமைப்புக்கள் பலவே இலங்கைக்கு எதிரான போர்க் குற்ற விசாரணைக்கான தகவல்கள், ஆவணங்கள், சாட்சிகள், ஒலி, ஒளிப் பேழைகள் உள்ளிட்ட ஆதாரங்களை சர்வதேச அளவில் மனித உரிமைகள் அமைப்புக்கள், ஊடகங்களுக்கு வழங்கி இருந்தன. எனினும் இனிவரும் நாட்களில் வர்த்தமானி வெளியீட்டின் பின் இந்த அமைப்புக்களுடனோ அல்லது அவற்றின் உறுப்பினர்களுடனோ தொடர்பு வைத்திருப்பவர்கள் மீது தேசத் துரோகக் குற்றச்சாட்டு சுமத்தப்படுமாயின் சர்வதேச விசாரணை என்று ஒன்று வரும் போது ஈழத்தில் இருப்பவர்களுடன் இந்த அமைப்புக்கள் எப்படி உறவைப் பேணமுடியும்? போர்காலத்தின் போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்களை, அதற்கான ஆதராங்களை எவ்வாறு பெறமுடியும்? யார் அதற்கு துணிவார்கள்?

**மூன்றாவது பொறி...**

இலங்கை அரசாங்கத்தால் பெயரிடப்பட்டு தடைசெய்யப்படும் அமைப்புக்களின் பட்டியல் வர்த்தமானியில் வெளிவந்த பின், இலங்கையின் களச் சூழலில் தற்போது முன்னிலைப்படுத்தப்படும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகிய பிரதான கட்சிகளுடன் தமிழ் மக்களின் பிரச்சனைகள் குறித்து விவாதிக்கவோ, கருத்தறியவோ, தமது எண்ணங்கள் கோரிக்கைகளை தெரியப்படுத்தவோ முடியுமா? இலங்கையின் 6ஆவது திருத்தச் சட்டத்தை ஏற்று பாராளுமன்றிலும், உள்ளூராட்சி மாகாண சபைகளிலும் சத்தியப் பிரமாணத்தை மேற்கொண்ட பிரதிநிதிகள் தடைக்குப் பின் புலம்பெயர் அமைப்புக்களுடன் தொடர்பை பேண முடியுமா? புலம்பெயர் நாடுகளில் இடம்பெறும் கூட்டங்கள், கருத்தரங்குகள், ஒன்றுகூடல்கள், போராட்டங்களில் ஈழத்தில் தொழிற்படும் அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொள்ள முடியுமா? அதற்கு எவரும் இனித் துணிவார்களா? தேர்தல்கள் வரும்போது புலம்பெயர் அமைப்புக்கள் மக்களின் பேருதவியே கட்சிகளின் அரசியற் செயற்பாடுகளுக்கு உந்து சக்தியை கொடுத்திருந்தன. தடைக்குப் பின் இவை சாத்தியமா?

**நான்காவது பொறி...**

புலம்பெயர் அமைப்புக்களின் செயற்பாட்டாளர்கள் என இலங்கைப் படைப் புலனாய்வாளர்களால் ஏற்கனவே இனம் காணப்பட்டவர்கள், இனிவரும் நாட்களில் இனம் காணப்படுபவர்களின் நேரடி உறவினர்களுடன் பேணப்படும் தனிப்பட்ட குடும்ப உறவுகளை இலங்கைப் படைப்புலனாய்வாளர்கள் எவ்வாறு நோக்குவர்? இந்தக் கட்டுரை எழுதிக் கொண்டு இருக்கும் போதே 61 வயதுடைய கரவெட்டியைச் சேர்ந்த பெண் புலம்பெயர் செயல்பாட்டாளர்களுடன் தொடர்புபடுத்தப்பட்டு பயங்கரவாத புலனாய்வுப் பிரிவால் கைது செய்யப்பட்டதாக செய்தி வெளியாகி இருக்கிறது.. ஆயின் தடை கொண்டுவரப்பட்டால் தாயக்கத்தில் நேரடி உறவினர்களைக் கொண்ட எவரும் புலம்பெயர் செயற்பாடுகளில் தம்மை ஈடுபடுத்துவார்களா?

**5ஆவது பொறி**

புலம்பெயர் அமைப்புக்களின் மீது தடை ஏற்படுத்தப்பட்டால், புலம்பெயர் நாடுகளில் வசிப்பவர்கள் தமது தாய், தந்தை சகோதரர்களுக்கு அனுப்பப்படும் பெருந்தொகையான பணத்தைக் காரணம் காட்டிக் கூட இலங்கை அரசாங்கத்தால் எவரையும் கைது செய்ய முடியும். காரணம் தடைசெய்யப்பட்ட அமைப்புக்களுடன் தொடர்புடையவரால் அனுப்பப்பட்ட பணம் என இதற்கு பொய்காரணங்கள் கூற முடியும்.. தவிரவும் ஆலயங்கள், பாடசாலைகள், சனசமூக நிலையங்கள், பழைய மாணவர் சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், சிறுவர் முதியோர் நல இல்லங்கள் உள்ளிட்ட பொது அமைப்புகளுக்கு புலம்பெயர் அமைப்புக்கள் எவ்வாறு உதவுவது? இதன் மூலம் வடக்கு கிழக்கில் புலம்பெயர் உறவுகளால் மேற்கொள்ளப்படும் அனைத்து உதவிகள், அபிவிருத்திகள், சமூகப் பணிகள் யாவும் நிறுத்தப்படும் அபாயம் ஏற்பட மாட்டாதா?

குறிப்பாக புலம்பெயர் அமைப்புக்களின் மீதான இந்தத் தடை, கடந்த இரு தசாப்தங்களுக்கு மேலாக வடகிழக்கை தாங்கி நின்ற புலம்பெயர்ந்த மக்களின் பொருளாதார உதவிகளுக்கு விழுந்த மாபெரும் அடி என்பதோடு, முழுக்க முழுக்க இலங்கை அரசாங்க உதவிகளையே நம்பிவாழும் சமூகமாக ஈழத் தமிழச் சமூகம் மாற்றப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது....

இப்போ இலங்கை அரசாங்கத்திற்கு பொருளாதாரத் தடை விதிக்கக் கோரியநிலை போய் வடக்கு கிழக்கிற்கு பொருளாதாரத் தடை விதிக்கும் நிலையல்லோ ஏற்பட்டு இருக்கிறது.

ஆயின் சொந்தச் சகோதரர்கள் துன்பத்தில் சாதல் கண்டும் சிந்தை இரங்க முடியாத நிலைக்கு புலம்பெயர்ந்தவர்களைத் தள்ளும் இலங்கை அரசாங்கத்தின் இந்தப் பாரிய நகர்விற்கு எதிராக என்ன செய்யப் போகிறது புலம்பெயர் சமூகம் ?

நன்றி - குளோபல் தமிழ்ச் செய்திகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்படியும் ஓர் அற்புதமான தந்தை !!

இலங்கையில் தமிழர்கள் சிறுபான்மையினராக வாழ்ந்தாலும், நாடு தழுவிய வகையில் அன்று எங்கும் அவர்கள் வயாபித்திருந்தனர். சகல மாவட்டங்களுக்கும் சென்று தங்கள் கடமைகளை புரியக்கூடிய சூழலும் இருந்தது. அவ்வாறே முஸ்லீம் மக்களும் சகல இடங்களிலும் தத்தமது வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தனர். ஆனால் பெரும்பான்மையினரான சிங்கள மக்கள் வடமாகாணம் போன்ற தமிழ்ப் பிரதேசங்களுக்கு செல்லவோ அல்லது நிரந்தரமாக குடியேறுவதற்கு தயக்கம் காட்டினர்.

அன்றைய மகாவலி அபிவிருத்தித் திட்டத்தையடுத்து சிங்கள மக்கள் தமிழ்ப் பகுதிகளில் விவசாயத்தின் நிமித்தம் குடியேறினர். 1983ம் ஆண்டு இடம்பெற்ற உக்கிரமமான இனக்கலவரத்தின் பின் சிங்க பகுதிகளில் நிரந்தர வசிப்பிடத்தைக் கொண்ட தமிழ் மக்கள் தத்தமது சொந்தத்தமிழ்ப் பிரதேசத்துக்கு திரும்பிச் சென்று அங்கு குடியேறத்தொடங்கினர். அன்று தமிழ் மக்களின் தொழில், வர்த்தக நடவடிக்கைகள் ஆகியன் காரணமாகவே சிங்கள மக்கள் தமிழ்ப் பகுதிகளை நாடிச் சென்றிருந்தனர். அன்று தொட்டு திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்கள் தமிழ்ப் பகுதிகளில் இடம்பெற்றிருந்ததையும் சுட்டிக்காட்டாமல் இருக்கமுடியாது.



முப்பது வருட கால யுத்த மேகங்கள் முற்றாக கடந்ததையடுத்து எவரும் நாட்டின் எந்தவொரு மூலை முடுக்கிற்கும் சென்று வரக்கூடிய சூழல் இன்று அமைந்துள்ளதை சகலரும் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். எது என்னவாக இருந்தாலும் தமிழ் மக்கள் பிரதேச வாரியாக தங்களை வகைப்படுத்திக் கொண்டுள்ளதையும் குறிப்பிட்டே ஆக வேண்டும்.

வடக்குத் தமிழர்கள், கிழக்குத் தமிழர்கள் மலைநாட்டுத் தமிழர்கள், யாழ்ப்பாணத்துத் தமிழர்கள், வன்னித் தமிழர்கள், தீவுத் தமிழர்கள் என்றெல்லாம் கூறுபடுத்தப்பட்டுள்ளனர்.

அவர் வட மாகாணத்தை சார்ந்தவர், பண்டத் தரிப்பை பிறப்பிடமாகக் கொண்டு தொழிலின் நிமித்தம் ஹட்டன் பகுதியில் நீண்ட காலம் தமது குடும்பத்தினருடன் வாழ்ந்து வந்தவர். சைவ ஆலயங்களுக்கு மலர்மாலை தயாரித்து விநியோகிப்பதே அவரின் சுய தொழிலாக இருந்தது.

1983ஆம் ஆண்டு இனக்கலவரத்தின் பின்னர் நிரந்தர வசிப்பிடமாக ஹட்டன் பகுதிணை கைவிட்டு சொந்தப் பிரப்பிடமான பண்டத்தரிப்புக்கு செல்ல நேர்ந்தது. அன்றைய சூழல் அவருக்கு மட்டும் மட்டுப்படுத்தப்படடடதாக இருக்கவில்லை. பாதிக்கப்பட்ட அச்சுறுத்தப்பட்ட அனைத்து தமிழ் மக்களும் சிங்கள பகுதிகளில் இருந்து உடன் வெளியேறினர்.

சொத்து சுகத்தை இழந்தாலும் தத்தமது சொந்த பூமிக்கு வந்து விட்டோம் என்ற சந்தோசம் அன்று பாதிக்கப்பட்டவர்கள் மத்தியில் காணப்பட்டது. பூ மாலைகள் கட்டும் தொழில் அவரது பூர்வீகத் தொழில். அதில் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டே தனது இரு ஆண்பிள்ளைகளைக் கொண்ட குடும்பத்தை நடாத்திவந்தார்.

எப்படியோ இரு பிள்ளைகளையும் தன்னால் இயன்ற அளவுக்கு கற்பித்து பெரியவர்களாக்கி விட்டார். இருப்பினும் அவர்களுக்கு நல்லதொரு எதிர்காலத்தை கட்டியெழுப்புவதற்காகவே மூத்தவனை கனடாவுக்கும், இளையவனை சுவீசுக்கும் அனுப்பிவைத்தார். இனக்கலவரத்தின் பின் பல ஐரோப்பியநாடுகள் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் மீது அனுதாபம் கொண்டு அங்கு அகதி அந்தஸ்து அளிக்க முன்வந்தன.



தனக்கு சீதனமாக தரப்பட்ட வீட்டையும், பத்துப் பரப்பு காணியையும், அடகு வைத்தே பிள்ளைகளை அவர் வெளிநாடு அனுப்பினார். எப்பொழுதும் பாசத்திற்கு கட்டுப்பட்ட பிள்ளைகள் பெற்றோரை மதிப்பவர்களாகவும், அளவுக்கு மேல் பெற்றோர் மீது பாசமாகவும் இருப்பதைக் காணலாம். ஆனால் அவர்கள் எதிர்கொள்ளும் புதிய சூழல்களும், அமைகின்ற சந்தர்ப்பங்களும், சில வேளைகளில் அவர்களை தவறான வழிக்கு இட்டுச் செல்வதை தடுக்கமுடியாது.

ஆரம்பத்தில் அவரின் பிள்ளைகள் மாதா, மாதம் வீட்டுச் செலவுக்கு பணம் அனுப்பிக் கொண்டே வந்தனர். ஆனால் தாயாரின் இறப்புக்குப் பின் அவர்கள் அறவே பணம் அனுப்புவதை நிறுத்திக் கொண்டனர். தகப்பனார் கூட பணவிடயத்தில் அவர்களை க்டாயப்படுத்த விரும்பவில்லை. காரணம் தற்பொழுது அவர் ஒரு தனிநபர். அவருக்கேன் அவ்வளவு பணம்?

மேலும் அவர்களுக்காக அடகு வைத்த அந்த பூர்வீக ஆதனத்தை மீட்காததினால் அது அறுதியாகப் போய்விட்டது. பிள்ளைகள் அது தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்காது அசட்டையாக இருந்து விட்டார்களே! என்பது தான் அவருக்குள்ள ஒரே ஒரு கவலை. மற்றும்படி அவர் பிள்ளைகளிடம் இருந்து எதையும் எதிர்பார்க்கவில்லை. அவர் உழைப்பது அவருக்கு அன்று போதுமானதாக இருந்தது.

மழைக்குக் கூட ஒதுங்க அவரின் சொந்த ஊரான பண்டத்தரிப்பில் ஓர் இடமும் இல்லாத பட்சத்தில் தொடர்ந்தும் அங்கு வாழ அவர் விரும்பவில்லை. அவருக்கு தெரியாத ஊர்களா? கலவரத்திற்கு முன் எத்தனையோ இடங்களுக்குச் சென்று வந்தவர். அவரின் உள்ளத்திலும் உடலிலும் நல்ல வலிமை என்றும் இருந்தது. அதனால் அவர் நீர்கொழும்புக்கு பெட்டி படுக்கையுடன் புறப்பட்டுச் சென்றார்.

அங்கு பல சைவ ஆலயங்கள் சிறப்பாக இயங்கிக் கொண்டிருந்தன. அதில் ஓர் ஆலயம் அவருக்கு புகலிடம் வழங்கியது. பரிபாலன சபையினர் அவரைப் போன்ற ஒருவரையே ஆலயப்பணிகளுக்காக தேடிக்கொண்டிருந்த சமயம், அவரும் அங்கு போய் சேர்ந்து கொண்டமை அவர்களுக்கு பெரும் மகிழ்ச்சியைக் கொடுத்தது.

இறைவன் ஒரு கதவை இழுத்து மூடியாலும் அவன் எப்பொழுதும் மறு கதவை திறக்க மறந்துவிடவில்லை. அந்தப் பெரியவர் தற்பொழுது சரியான இடத்திற்கே வந்து சேர்ந்துள்ளார். அந்த ஆலயத்தில் அவரும் ஒரு பணியாளரே. ஒரு வருடத்தின் பின்னர் குறித்த ஆலயத்தின் வருடாந்த உற்சவம் அன்று மிக சிறப்பாக இடம்பெற்ற வேளையில் இரவு பகல் பாராது அயராது உழைத்ததின் காரணமாக அவரின் மார்பு வீங்கி மூச்சுவிட திணறியதால் அவர் உடனடியாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு அங்கு அவசர சிகிச்சைப் பிரிவில் விசேட சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார்.

அவர் எதற்கும் கவலைப்படவில்லை. முதலாவதாக இறைவன் பேரிலும் அடுத்து ஆலயத்தின் சக சகோதர பணியாளர்கள் பேரிலும் நம்பிக்கை வைத்தார். ஓரிரு வாரங்களுக்குள் அவர் முற்றாக குணமடைந்து மீண்டும் அந்த ஆலயப் பணியில் தன்னை உட்படுத்திக் கொண்டார்.

அந்த ஆலயத்தினுள் மடமொன்றில் அவருக்கு சகல வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருந்தது. அந்த சுற்றுவட்டாரத்திலுள்ள அனைத்து சைவ ஆலயங்களின் மலர் மாலைத் தேவைகளை அவர் பூர்த்தி செய்து கொடுத்து வந்தார். வெளிநாட்டிலுள்ள பிள்ளைகள் தன்னை அடியோடு மறந்ததையிட்டு அவர் எள்ளளவும் கவலை கொள்ளத் தேவையில்லை. பிள்ளைகளைவிட அங்குள்ளவர்கள் அவரை அன்பாக கவனித்து வந்தார்கள்.

**...நாட்டு நடப்பு...**

வயது செல்லச் செல்ல அவரின் ஆரோக்கிய நிலையிலும் தடுமாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. சில மாதங்களுக்குப்பின் அவர் மீண்டும் சுகயீனமுற்றார். தான் ஒரு வேளை இறந்தால் தனது உடலை நீர்கொழும்பிலே புதைக்கும்படியும், தனது ஊரில் எவருக்கும் தகவல் கொடுக்க வேண்டாம் எனவும் நிர்வாகத்திடம் கேட்டுக்கொண்டார்.

அவர் அன்று நிர்வாகத் தலைவரிடம் பேசிக் கொண்டிருந்த வேளையில் வெளிநாட்டிலிருந்து இலங்கைக்கு வந்த ஒருவர் அப்பெரியவரின் பெயரிடப்பட்ட கடித உறையொன்றை கொண்டு வந்து கொடுத்திருந்தார். பெரியவர் வந்தவரிடம் சகலவற்றையும் விசாரித்து விட்டு அக்கடித உறையை பிரித்துப் பார்த்தார். அங்கு ஐந்து இலட்சம் ரூபாவுக்கான காசோலை இருந்தது. அவர் தலைவரைப் பார்த்து 'ஐயா இதை எங்கட ஆலயக்கணக்கில் வைப்புச் செய்யுங்கள்' என்றார்.

பிள்ளைகள் தனக்குச் செய்த தவறுகளுக்கு அத ஒரு பிராயச்சித்தமாகவும், அவர்களுக்கு ஒரு புண்ணியமாகவும் இருக்கட்டும் என்றே அப்படிக் கூறினார். எப்படியோ பெரியவர் இருக்கும் இடத்தை அறிந்து அந்த காசோலையை அவரின் பிள்ளைகள் இலங்கைக்கு வரும் ஒருவரூடாக அனுப்பி வைத்திருந்தனர். உண்மையான பாசத்தைத்தான் அவர் பிள்ளைகளிடமிருந்து எதிர்பார்த்தாரே தவிர, அந்த ஐந்து இலட்சத்தை அல்ல. அந்த காசோலையை வந்தவர் மூலம் திருப்பி அனுப்பினால் பிள்ளைகள் கவலைப்படுவார்கள் என்பதனை அவர் மனதில் கொள்ளாமல் அல்ல, ஓரிரு மாதங்களுக்குப் பின் அவர் நிரந்தரமாக இரு கண்களையும் இறுக்கி மூடிக்கொண்டார். இறுதிச் சடங்கில் கலந்து கொள்ளக்கூட பிள்ளைகளுக்குக் கொடுத்து வைக்கவில்லை.



**- பாலையூற்றான் -**

## ஐபொன் ஏற்படுத்திய விபரீதம்

இங்கிலாந்தில் உள்ள Dover, Kenva என்ற நகரில் 16 வயது Ella-Anne Birchenough என்ற பெண் நடந்து சென்ற போது எதிர்பாராத விதமாக அவருடைய ஐபோன் பாதாள வடிகாலில் விழுந்துவிட்டது. இதனால் அதிர்ச்சி அடைந்த அவர், வடிகாலின் மூடியை எடுத்துவிட்டு, உள்ளே இறங்கி ஐபோனை எடுக்க முயற்சித்தார்.

அவர் சற்று பருமனாக இருந்ததால் சிறிய வடிகாலில் சிக்கிக்கொண்டு மேலே வர முடியாமலும், உள்ளே இறங்க முடியாமலும் தவித்துக் கொண்டிருந்தார். உடனடியாக சம்பவ இடத்திற்கு வந்த மீட்புப்படையினர் அந்த இளம் பெண்ணை தூக்கி மேலே வருவதற்கு உதவி செய்ததோடு, அவருடைய ஐபோனையும் எடுத்து கொடுத்தனர்.



## தந்தையைக் காப்பாற்றிய பாலகன்

கனடாவின் Oshawa நகரில் Tony Caprio என்பவர் தனது வீட்டில் கடந்த ஞாயிறு அன்று மதிய உணவை தயார் செய்து கொண்டிருந்த போது அவருக்கு திடீரென மாரடைப்பு ஏற்பட்டு மயங்கி விழுந்தார். வீட்டில் அவருடைய மனைவி இல்லை. எட்டு வயது மகன் மட்டுமே இருந்தான். தந்தை ம்யங்கி விழுந்ததும் சிறிதும் பதட்டம் அடையாத அந்த சிறுவன், 911 என்ற எண்ணிற்கு போன் செய்து, தந்தை திடீரென மயங்கி விழுந்துவிட்டதாகவும், உடனடியாக ஆம்புலன்ஸை அனுப்பவும் கோரிக்கை விடுத்தான். இதனையடுத்து தந்தை சரியான நேரத்தில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதால் உயிர் பிழைத்தார்.



## அதிசயம் ஆனால் உண்மை

இங்கிலாந்து நாட்டில் உள்ள Dover, Kent என்ற பகுதியை சேர்ந்த 20 வயது பெண் ஒருவர், கடுமையான முதுகு வலி காரணமாக சிகிச்சை மேற்கொள்ள . மருத்துவமனைக்கு சென்றார். அங்கு அவர் முதுகுவலிக்கு சிகிச்சை எடுத்த பின்னர் வீடு திரும்பினார். அடுத்த அரைமணி நேரத்தில் அவருக்கு கடுமையான வயிற்று வலி ஏற்பட்டது. பீரியட் நேரம் என்பதால்தான் வயிறு வலிப்பதாக நினைத்து உடனடியாக மீண்டும் மருத்துவமனைக்கு சென்றார். மருத்துவர்கள் அவருடைய வயிற்றை சோதனை செய்துகொண்டிருந்தபோது திடீரென அவருடைய வயிற்றில் இருந்து ஒரு ஆண் குழந்தை வெளியே வந்ததால் Sophie Aldridge உள்பட மருத்துவர்கள் அனைவரும் கடும் அதிர்ச்சி அடைந்தனர். இது குறித்து தனக்கு எதுவும் தெரியவில்லை என்றும். மாதந்தோறும் தவறாமல் மதவிலக்கு இருந்தது என்றும் கூறுகின்றார் அப்பெண்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் அருமைப் பாட்டி


"ஹலோ ! கைலாஷ் இருக்காரா ?" நாங்க சங்கரா ஹோம்ல இருந்து பேசறோம் . "மேடம்..! நான் ஒரு மீட்டிங்ல இருக்கேன் .அரைமணி நேரத்துல கூப்பிடறேன்!"
"சார் ! முக்கியமான விஷயம் !"
"மேடம் ! நானே கொஞ்ச நேரத்துல கால் பண்றேன் !" கட் பண்ணி விட்டான்.
மீட்டிங் முடியவே இரண்டு மணி நேரத்திற்கும் மேலாகிவிட்டது. ஹாலை விட்டு வெளியே வந்த கைலாஷ் அந்த நம்பருக்கு கால் பண்ணினான். 'ஹலோ ! நான் கைலாஷ் பேசறேன் !"
"சார் உங்க போனுக்காக எவ்வளவு நேரம் வெயிட் பண்ணினோம்? இங்க உங்க அம்மா மரகதம் ரொம்ப சீரியஸா இருக்காங்க ...! அவங்க பேத்தி நெனப்பாவே இருக்காங்க! எட்டு வருஷம் ஆச்சு! ஒரு தடவ கூட யாரும் வந்து எட்டிப் பாத்ததில்ல. இப்ப ஃபைனல் ஸ்டேஜ்ல இருக்காங்க.உடனே வாங்க ...!"
"மேடம் ...ப்ளீஸ்! தப்பா எடுத்துக்காதீங்க... நான் இப்ப சென்னைல இல்ல. நானும் என் வைஃபும் கான்பரன்சுக்காக



சிங்கப்பூர் வந்திருக்கோம் ...வெரி அர்ஜண்ட் ... நாங்க இப்ப உடனே வரமுடியாது ... எவ்வளவு செலவானாலும் பரவாயில்ல ... நீங்களே பாத்துக்குங்க ... நான் அனுப்பிடறேன் ...! என் பொண்ணு அனுவுக்கு எக்ஸாம் .. அதனால அவ வரல. அவள சர்வண்ட் கிட்ட தான் விட்டுட்டு வந்திருக்கோம்... என் சிட்டுவேஷன புரிஞ்சுக்கோங்க...!"
பதிலுக்கு காத்திராமல் மொபைல கட் பண்ணி விட்டான்.
பாகீரதிக்கு பகீரென்றது .
"பெத்த தாய் உசுரு ஊசலாடுது! வருசத்துக்கு ஒரு தடவ மொத்தமா பணம் கட்டிட்டா போதுமா? ஏன்னு கூட கேட்கல...! கடைசி கட்டத்துல கூட மூஞ்சில முழிக்கலன்னா இவனெல்லாம் என்ன பிள்ளை?" கோபம் வந்தது.
நேரே மரகதம் படுத்திருந்த கட்டிலருகில் சென்றாள். கால் கைகள் அசைவற்று இருந்தது. வாய் மட்டும் அனு அனு என்று முணுமுணுப்பது தெரிந்தது . பாகீரதிக்கு நெஞ்சம் கசிந்தது .
"இந்த ஹோமுக்கு வந்த நாள்ல இருந்து போன வாரம் வரைக்கும் எப்படி சுறுசுறுப்பா வளைய வந்தாங்க ...! அன்பா பேசி எல்லார் மனசிலயும் இடம்பிடிச்சாங்க ...! ஹோம்ல மகன் சேர்த்துட்டானேங்ற வருத்தத்தை கொஞ்சம்கூட முகத்துல காட்டிக்க மாட்டாங்களே ! யாராவது அவங்க பிள்ளைய குறை சொன்னாலும் விட்டுக் கொடுக்க மாட்டாங்களே ! என் புள்ள என்ன அம்போன்னு நடுரோட்டுலயா போட்டுட்டான்... பணம் கட்டிதானே இந்த ஹோம்ல சேர்த்திருக்கான்? எனக்கு இங்க என்ன குறைச்சல்? நான் மட்டும் தனியாவா இருக்கேன்? எத்தனைபேர் இருக்கோம்..... மனசார பேச, தாயம் விளையாட, ஸ்லோகம் சொல்லன்னு என் பொழுது நல்லாதானே போகுது? என் பிள்ள எங்க இருந்தாலும் நல்லா இருக்கணும் "..... என்பாங்களே ..... பாகீரதி கண்கள் கலங்கியது .
மகன் கல்யாண நாள். பிறந்த நாள், பேத்தி பிறந்த நாள் என்று எல்லா விசேஷ நாட்களிலும் ஹோமில் உள்ள பிள்ளையாருக்கு அர்ச்சனை பண்ணி மகன் நலனுக்குப் பிரார்த்திக்கும் உள்ளம் இன்று கட்டையாய் கட்டிலில் ...!!
பாகீரதி மற்ற எல்லோரையும் கூப்பிட்டு ..." மரகதம்மாவோட கடைசி ஆசையை நிறைவேத்த முடியாம போயிடும் போலிருக்கே !" என்று கண்ணீர் வடித்தாள் .
உடனே ஜானகி பாட்டி " நீ ஏம்மா கலங்குறே...? அவங்க வீடு அண்ணாநகர் டவர் பக்கத்துலதான் இருக்கு! அவங்க பேத்தி அனு ஷோபா கான்வெண்ட்ல தான் படிக்கிறா! பாகீ! நாம ஏம்மா அந்த கைலாச கேக்கணும்? நேரா ஸ்கூல்ல போயி அனுவ கூட்டிட்டு வந்து ஒரு தடவ காட்டிடலாம்.... மரகதம் ஆத்மாவாவது நிம்மதியா பிரியும்!"
"அது தப்பில்லையா?"
"எதும்மா தப்பு? குத்துக்கல்லு மாதிரி இருந்துட்டு பெத்த தாய ஹோம்ல விட்டது தப்பில்லையா?" "ச்சே...! இப்படி பிள்ளய பெத்ததுக்கு மலடியாவே இருந்திருக்கலாம் ...!!"
" நாளைக்கு இவனுக்கு என்ன கதியோ?"
ஒவ்வொருவரும் தங்கள் ஆதங்கத்தை கொட்டித் தீர்த்தனர்.
"சரி சரி ! யாரும் கவலப்படாதீங்க ...! ஷோபா ஸ்கூல் பிரின்சிபால் எனக்கு நல்லா தெரியும்! நான் நிலமைய எடுத்து சொல்லி அனுவ இங்க அனுப்ப முடியுமானு கேக்குறேன்!"
"பாகீ! நீ போன்ல பேசறதவிட நேர்ல போயி விளக்கமா சொல்லி அனுவ கையோட அழச்சிட்டு வாம்மா!" –ஜானகி பாட்டி சொல்ல "சரிம்மா! எனக்கும் அதுதான் சரியாப் படுது...!"
பாகீரதி அனு படிக்கும் ஸ்கூலுக்கு கிளம்பினாள். பிரின்சிபால் ராதா ரூமுக்குள் நுழைந்தாள்.
"வணக்கம் மேடம்! என் பேரு பாகீரதி! சங்கரா ஹோம் நிர்வாகி. உங்க ஸ்கூல்ல நைன்த் ஸ்டாண்டர்ட் படிக்கிற அனுவோட பாட்டி எங்க ஹோம்லதான் இருக்காங்க! இப்ப அவங்க மரணப் படுக்கைல இருக்காங்க. எட்டு வருசத்துக்கு முன்னாடி அனுவோட அப்பா காசநோயால பாதிக்கப் பட்ட மரகதம்மாவை எங்க ஹோம்ல கொண்டுவந்து சேர்த்தாரு... இன்னைக்கு வரைக்கும் யாரும் வந்து பாத்ததில்ல... மொத்தமா வருசத்துக்கு ஒரு தடவ பணம் கட்டிடுவாரு.... இந்த சூழ்நிலைல கைலாசுக்கு போன் பண்ணினேன். அவரு சிங்கப்பூர்ல இருக்காராம். இப்ப உடனே வரமுடியாதாம். நாலஞ்சு நாள் ஆகுமாம் ... அனு மட்டும் அவங்க வீட்ல வேலக்காரம்மாவோட தனியாதான் இருக்காளாம்... மரகதாம்மா ரெண்டு நாளா அனு அனுன்னு புலம்பிக்கிட்டே இருக்காங்க! நீங்க அனுமதிச்சா அனுவ கூட்டிட்டு போயி அவ பாட்டிய காட்டுவேன்.ப்ளீஸ் ! கூட்டிட்டு போக அனுமதிப்பீங்களா ?"
கையெடுத்து கும்பிட்டாள் பாகீரதி .
ராதாவின் உள்ளம் இளகி விட்டது .
"நீங்க கவலைப்படாதீங்க! நானே அனு கிட்ட பக்குவமா பேசி உங்கக்கூட அனுப்பறேன் !"
"அனு! இவங்க உங்க பாட்டி இருக்கிற ஹோமின் நிர்வாகி! உங்க பாட்டி ரொம்ப சீரியஸா இருக்காங்களாம்! உன்ன பாக்கணும்னு ரொம்ப ஆசப்படறாங்களாம்...! நீ இவங்க கூட போயிட்டு வந்துடும்மா...!
"ஓ.கே .மேம் ...!"
மரகதம்மாவைப் பற்றி போகும் வழியில் சொல்லிக்கொண்டே வந்த பாகீரதி "ஏம்மா அனு ! இதுவரை உங்க பாட்டிய பாக்கணும். பேசணும்னு நினைச்சதே இல்லையா ?"



"எங்க மம்மி டாடி பாட்டிய பத்தி என் கிட்ட பேசினதே இல்ல மேடம் ...!"
அதற்கு மேலும் பாகீரதி அனுவிடம் ஒன்றும் கேட்கவில்லை :ஹோமை அடைந்தனர் . அனு அனு அனு என்று முனகியவாறு கிழிந்த நாராய் கட்டிலில் கிடந்த மரகதத்தைப் பார்த்தபோது அனுவுக்கு என்னவோ செய்தது.
அனுவைப்போலவே எடுப்பான நாசி ... அதே ஒற்றை நாடி ! அமைதியாகப் பார்த்தாள். பாட்டின்னு கூப்பிடும்மா ... கையைப் பிடிச்சிக்கோம்மா....! பயப்படாதே ... .பாட்டின்னு கூப்பிடும்மா எல்லோரும் சொல்ல ... .கட்டிலில் அருகில் அமர்ந்தவள் பாட்டி கையை எடுத்து தன் கையோடு சேர்த்து பிடித்து மெல்ல பாட்டி, பாட்டி என கூப்பிட்டாள்.
கண்களில் தாரை தாரையாக கண்ணீர்!
"பாட்டி ! பாட்டி ! அவளையுமறியாமல் கூப்பிட்டுக் கொண்டே இருந்தாள். திடீரென மரகதம்மாவின் மூடிய விழி திறந்து அனுவையே பார்த்துக் கொண்டிருந்தது. கண்ணின் ஓரம் நீர் கசிந்து கொண்டே இருந்தது .
"பாட்டி ...! பாட்டி ...! பாட்டி ....! பாட்டி ...! நான் அனு பாட்டி ! கண்ண திறந்து பாருங்க பாட்டி ....! வாங்க நம்ம வீட்டுக்கு போலாம் பாட்டி ....!" கதறினாள் அனு !
மரகதம்மாவின் இதழோரம் புன்னகை கீற்று ! இமை மெல்ல மெல்ல மூடிக்கொண்டது ."ஐயோ ! மரகதம்மா போயிட்டாங்க ....!" பாகீரதி சொல்ல .... சுத்தி நின்ற அத்தனை பேரும் அழ, அனுவும் 'ஓ' வெனக் கதறினாள் .
பாகீரதி கைலாசுக்கு போன் செய்ய ஸ்விட்ச் ஆஃப் செய்யப்பட்டிருந்தது.
இதற்கு மேல் தாமதிக்க வேண்டாம் என்று கருதிய ஹோம் நிர்வாகம் எல்லா ஏற்பாடுகளையும் செய்தது. மரகதம்மாவின் இறுதி சடங்கிற்கான வேலைகள் மும்முரமாய் நடைபெற்றன. அனுவை சமாதானப்படுத்த யாராலும் முடியவில்லை. அப்பா அம்மா மேல் அவளுக்கு கோபம் கொப்பளித்தது.
எல்லா சாஸ்திரங்களும் முடிந்து வேனில் சடலத்தை ஏற்றியதும் கடைசியாக அனு, பாட்டியை முத்தமிட்ட காட்சி ஹோமில் எல்லார் கண்களையும் குளமாக்கியது . பெசன்ட் நகர் மின்மயானத்தில் தகனம் செய்யப்பட்ட அஸ்தி மண் கலயத்தில் வைக்கப்பட்டு பூஜைகள் நடந்தேறியது "அனு ! வீட்டுக்கு கிளம்பும்மா ! நான் கொண்டு விட்டுடறேன் ....!"
பாகீரதி கூப்பிட, "நான் வரல ...இங்கேயே இருக்கேன்...!"
"தப்பும்மா ....உங்க வீட்டுல தேடுவாங்க ...!"
"எனக்கு அங்க யார் இருக்கா ...? வேலக்காரம்மா தானே ...! தேடினா தேடிக்கட்டும் ...!! என்னை எங்க அப்பா அம்மா தேடிட்டு வரட்டும் ...!" அழுகையை அடக்க முடியாமல் குமுறினாள் அனு !
வீட்டில் ஸ்கூலில் இருந்து அனு வராததால் பயந்து எல்லா இடங்களிலும் தேடி பார்த்து விட்டு வந்த கமலம் கைலாசுக்கு போன் பண்ண ஸ்விட்ச் ஆஃப்ல இருந்தது. வெகு நேரம் கழித்து லைன் கிடைத்தது .
"ஹலோ ! ஐயா ! எத்தனை தடவை போன் பண்ணினேன் ...எடுக்கவே இல்லையே ...இப்படி ஆஃப் பண்ணி வச்சுட்டீங்களே ... அழுதபடி சொல்ல ..."என்னாச்சு ? ஏன் அழறே.....! "
"ஐயா நம்ம அனு ஸ்கூல் முடிஞ்சி வீட்டுக்கே வரலையா ...... எங்கல்லாமோ தேடிட்டேன் .... அனு ஃப்ரெண்ட் வீட்டுக்கும் போயி பாத்திட்டு வந்துட்டேன் ....எனக்கு ரொம்ப பயமாயிருக்கு .... யாராவது அனுவ ...கமலம் சொல்லச் சொல்ல கைலாசுக்கு தலையை சுற்றியது. துடிதுடித்து விட்டான் .
டிக்கெட்டை கான்செல் செய்து விட்டு அப்போதே கிளம்பி விட்டனர் கைலாசும் அவன் மனைவியும்! வீடு வந்து சேரும் போது
நள்ளிரவைத் தாண்டிவிட்டது .
கதவை தட்ட கமலம் திறந்து விட்டாள்.
அழுதபடி உள்ளே வர..... ஹாலில் அனு தூங்காமல் சோபாவில் வெறித்தபடி அமர்ந்திருக்க .... அவள் அருகில் மண் கலயம் ....!!
"அனு! எங்கம்மா போனே? என்ன ஆச்சும்மா? நாங்க துடிச்சுபோயிட்டோம்...!" அம்மா கட்டிக் கொள்ள ....
தட்டி விட்டவள்.... "நான் எங்க போனா உங்களுக்கென்ன....? யார் எப்படி போனாதான் உங்களுக்கென்ன......? உங்களுக்கு உங்க வேலைதானே முக்கியம் ....!" கண்ணீர் ஆறாய் ஓடியது...!!
"அனும்மா!.... ஏண்டா இப்படியெல்லாம் பேசறே? உனக்கு என்ன ஆச்சும்மா...?" தலையைக் கோதி வாஞ்சையுடன் கேட்கிறாள் அம்மா.
"இது என்னம்மா மண்சட்டி பக்கத்துல ...?"...கைலாஷ் கேட்க, "இது என் பாட்டி ! என்னையே நெனச்சி நெனைச்சி உருகி உருகி உசிர விட்ட என் பாட்டியோட அஸ்த்தி ...!!"
திக்கென்றது கைலாசுக்கு ....! காலையில் வந்த போன் ஞாபகத்துக்கு வந்தது ....ஏதோ நடந்து விட்டது என்பதை உணர்ந்தவன் முகத்தில் ஈயாடவில்லை . மண்டையில் சம்மட்டியால் அடித்தாற்போல் உணர்வு !
"டாடி ! என்ன மாதிரியே இருக்கிற உங்கம்மாவ உதறித்தள்ளின உங்களால என்ன உதறித் தள்ள எவ்வளவு நேரம் ஆகும் ?"
"எனக்கு என் பாட்டி வேணும் ....! வாங்கிக் கொடுக்க முடியுமா உங்களால?" வெறி பிடித்தவள் போல் கத்தினாள் ....ஓவென்று அழுதாள்.
"அனும்மா அப்பா ஒண்ணும் சும்மா விடல....உங்க பாட்டிக்கு டிபி நோய் இருந்தது ... அவங்கள பாத்துக்க முடியாததால பணம் கட்டி அங்க சேத்தாங்கம்மா.... வந்து பாத்துக்கலாம்னு நெனச்சா ...."!



அப்பா! இனிமேல் ஸ்கூல் லீவுன்னா நான் இங்க இருக்கவே மாட்டேன். பாட்டி இருந்த இடத்துல தான் இருப்பேன். எனக்கு ஒரு பாட்டியில்ல..... நெறையா பாட்டீங்க இருக்காங்க..... குலுங்கி குலுங்கி அழுகிறாள்.
பெற்ற தாயை கடைசியா ஒரு தடவைகூட பார்க்க நினைக்காத கைலாஷின் இதயத்தை ஈட்டியால் பிளந்தது போல் இருந்தது அனுவின் வார்த்தைகள் ....! மகளின் முன் கூனி குறுகி நின்றான்.
அவன் விழிகளிலும் வெள்ளப்பெருக்கு...... நொறுங்கிய இதயத்தோடு அஸ்தி கலசத்தையே உற்று நோக்கி கண்ணீரால் நனைத்தான். "நீ என்னை பார்க்க வராவிட்டாலும். மகனே.......! நான் உன்னை பார்க்க வந்துட்டேன் பாத்தியா....!!" என்று கேட்பது போல் இருந்தது.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிமுரசு

## கைலை மலை ஈசன் திருத்தலம்

தேவாரப் பாடல் பெற்ற
திருத்தலம்
தெட்சண கைலாயம் ஆன
அருட்தலம்!

கோணேசர் குடி கொண்ட
திருத்தலம்
கோணமாமலையான
அருட்தலம்!

சிவ புண்ணிய பூமியான
திருத்தலம்
பாவநாச தீர்த்தம் பரவும்
அருட்தலம்!

அகந்தை கொண்ட இராவணன்
ஆணவத்தை
அடக்கி அருள் புரிந்த
சிவத்தலம்!
நல்லடியார் குறை தீர்க்கும்
திருத்தலம்
பொல்லாதோர் திமிர் அடக்கும்
புகழ் பூத்த சிவத்தலம்!

## வேண்டும் ! !

தமிழும் சுவையும் போல்-
திருமண
தம்பதிகள் சேர வேண்டும்
அமுதும் தேனும் போல்-
தாம்பத்திய
வாழ்க்கை அமைய வேண்டும்!

நகமும் சதையும் போல்-
காதலர்கள்
நட்பு வளர வேண்டும்
சுக துக்கம் எதுவரினும் தூய
நட்பு தொடர வேண்டும்

வள்ளுவன் வாசுகி போல்
தம்பதிகள்
மனையறம் காக்க வேண்டும்
அள்ள அள்ளக் குறையாத-
அன்பு
அமுத சுரபியாய் பெருக
வேண்டும்!

சைவமும் தமிழுமோங்க- தமிழர்
தழிழ்ப் பண்பாட்டை வளர்க்க
வேண்டும்
வையகம் புகழ கவரி மானாக

கவிக்குயிலன்
சேனையூர் மூதூர் - கிழக்கு

## - கொலைகாரன்



நான்
கொலைகாரன்
எனக்கு
பணம் தரும்
அரசியல்
வாதிகளும்
அக்கிரமம்
செய்யத்
தூண்டும்
அரசாளும் மன்னர்களும்
என்
வாழ்க்கையாளர்கள்!
எனது
கூர்வாளுக்கும்
துப்பாக்கியின்
ரவைகளுககும்
பலியானோர்
கனபேர்
அவர்களில்
அப்பாவிற்கு
அரசனிற்கு
எதிராய்
எழுத்தாணி
தூக்கிய
செய்தியாளன்
கப்பம்
கொடுக்க
வணிகன்
என
நீண்டு
செல்லும் ...
என் மூலம்
எமனை
பார்த்தவர்களது
எண்ணிக்கை
நான் செய்வது
அநியாயம்
தெரிந்தும்
செய்கிறேன்
ஒருவேளை
நான்
திருந்திவிட்டால்
துப்பாக்கியின்
ரவைகளுக்கு
என்னுடலும்
பலிக்கடா
ஆக்கப்படலாம்
பத்தோடு
பதினொன்றாய்!!

அன்புவழிபுரம் ச.திருச்செந்தூரன்
திருகோணமலை

## முப்பதே

- தாமரைத்தீவான் -
ஈச்சந்தீவு கிண்ணியா

வளர்பிறைபோல் வளருதே,
வாசிப்பூக்கம் ஊட்டுதே!
களமும் காட்டி வருகுதே,
காட்டுவார் தம் ஆற்றலே!

சின்னச் சின்னச் செய்திகள்,
திருக்குறளைப் போன்றவை!
முன்னும் பின்னும் உண்டடா,
"முரசு" வண்ணப் படமடா!

சனி பிறக்க இதழ் வரும்,
தாங்கி ஈரெண் பக்கமே!
இனி இருந்து கற்பதே,
எமது வேலை - வேறேது!

முந்த வேண்டும் - முப்பதே!
முடிந்துவிட்டால் மூச்செழும்!
பிந்தினால் கை வெறுமையே!
பேரிழப்பு நெஞ்சிலே!



# கோணேசர் கல்வெட்டு

பாகம் - 01

ஈழத்து இலக்கிய வரலாற்றின் தொடக்க காலமாக அமைவது யாழ்ப்பாணத் தமிழ் வேந்தர்கள் என அழைக்கப்பட்ட ஆரியச் சக்கரவர்த்திகள் காலமாகும். இவர்கள் கி.பி 17 ஆம் நூற்றாண்டின் முற்பகுதி வரை யாழ்ப்பாணத்தை மையப்படுத்தி தமது ஆணையைச் செலுத்தியுள்ளனர். யாழ்ப்பாண மன்னர்கள் புலமையுடையவர்களாக விளங்கினார்கள். தமிழகத்திலிருந்து தமிழ்ப் புலவர்கள் பலரை வரவழைத்து ஈழத்தின் பல பாகங்களிலும் குடியமர்த்தி தமிழ் இலக்கியம், தமிழ்க் கல்வி முதலியவற்றிற்கு தொண்டு புரிந்துள்ளனர்.

இவர்கள் திருகோணமலைப் பகுதியில் குடியமர்த்திய தமிழ்ப் புலவர்கள் பலர் சிறந்த இலக்கியங்களை இயற்றித்தமிழ் மொழியை வளம் படுத்தினர் என்று பேராசிரியர் ஆ.சதாசிவம் குறிப்பிடுவர். இவர்கள் காலத்தில் ஆக்கபூர்வமான இலக்கியங்கள் ஆக்கப்பட்டன.



யாழ்ப்பாண அரசர்கள் தமது ஆட்சி பரப்பின் நிலைபேற்றையும் விஸ்தரிப்பையும் நிலை நிறுத்தும் பொருட்டுத் சமயத் தலங்களை அமைப்பதும் புனரமைப்புச் செய்வதும் அவை பற்றிய இலக்கியங்களை செய்விப்பதும் முக்கிய செயற்பாடுகளாகக் கொண்டிருந்தார்கள். ஆலயங்களை அடிப்படையாகக் கொண்டு இலக்கியங்கள் தோற்றம் பெற்றன. ஈழத்திலே சிறப்பாக வடக்குக், கிழக்குப் பகுதியிலே சைவ சமயம் உயர்நிலையில் இருந்ததென்பதை இக் காலத்தில் தோன்றிய சமயச் சார்புடைய இலக்கியங்களினூடு கண்டுகொள்ள முடிகின்றது.

திருகோணமலையில் ஒரு தனியான இலக்கிய மரபொன்று அக்காலத்தில் உருவாகி நிலைபெற்றது. அம்மரபானது கோணேசர் கோயிலை அடிப்படையாகக் கொண்டே வளர்ச்சி பெற்ற ஒன்றாகும். கைலாசபுராணம், கோணேசர் கல்வெட்டு, திரிகோண மலைப் புராணம் ஆகிய மூன்றுமே அம் மரபினை பிரதிபலிக்கும் பிரதானமான நூல்கள். இந்நூல்களுள் கைலாச புராணமே காலத்தால் முற்பட்டது. அது திருக்கோணேஸ்வரம் உன்னதமான நிலையிலிருந்த காலத்தில் எழுதப்பட்டது. கைலாச புராணத்தில் சொல்லப்பட்ட விடயங்களின் விளக்கமாகவும்



தொடர்ச்சியாகவும் கோணேசர் கல்வெட்டு அமைகின்றது.

மிகப் பழங்காலத்தில் இருந்தே ஆட்சி அதிகாரம் தொடர்பான பல்வேறு வகை விடயங்களும் கற்களில் பொறிக்கப்பட்டு வழங்கி வந்தன. கற்களில் பொறிக்கப்பட்டும், செப்பேடுகளிற் பொறிக்கப்பட்டும் வந்த விடயங்கள் நாளடைவில் இலக்கிய மரபாக வளர்ச்சி பெற்றிருக்கலாம். இறந்தவர்களின் குல மரபுப் பெருமை, சந்ததி விபரம், அவர் செய்த பணிகள் கீர்த்தி முதலானவற்றை விதந்து பாடும் மரபுக்குக் 'கல்வெட்டுப்பாடுதல்' என்னும் வழக்காறு இன்றும் ஈழநாட்டிலேயுண்டு. இம் மரபின் வழி கோணேசர் கல்வெட்டு தோன்றியிருக்கலாமென கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா குறிப்பிடுகின்றார்.

கோணேசர் கோயில் பற்றிய ஏற்பாடுகளும் சேவைகளும் நிலை குலைந்த ஒரு காலத்திலே கோணேசர் கல்வெட்டு உருவாக்கப்பெற்றது எனக் கருதலாம். மாறிவரும் சூழ்நிலைக்கேற்ப ஆலய சேவைகளை புதிதாக வரையறை செய்ய வேண்டிய ஒரு காலத்திலே உருவாக்க பெற்றது என்று கொள்ளவேண்டும். திருகோணமலையிலிருந்த கோணேசர் கோயிலைப் போர்த்துக்கேயர் இடித்த பின்பு, கோயிலிலிருந்த ஆவணங்கள் பல அழிவுற்றன. எஞ்சியுள்ளவற்றை அக்கறையுள்ள சிலர் அங்குமிங்குமாக எடுத்துச் சென்றனர். தம்பலகாமத்தில் கோணேசர் கோவிலை புதிதாக அமைத்த பொழுது பழைய கோவிலுக்குரிய உடமைகளும் சேவைகளும் புதிய கோவிலுக்குரியனவாகின. அவற்றை வரையறை செய்யவேண்டிய தேவையின் நிமித்தமாகவே கோணேசர் கல்வெட்டு உருவாக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்று பேராசிரியர் சி.பத்மநாதன் கருதுகின்றார்.
மேல்வரும் பாடலை சான்றாகக் காட்டுகின்றார்.

சொல்லுற்ற சீர்க் குளக்கோட்ட மன்னன்
சொற்படி சொல்லெனவே
கல்வெட்டுப் பாட்டென்னப் பாடினன்
பாதி கதைப் பொருளாய்
அல்லுற்ற கண்டர் தம் பொற் பாதம்
நெஞ்சினழுத்தி இகல்
வெல்லுற்ற சீர்க்கவிராச
வரோதய விற்பனனே

குளக்கோட்ட மன்னன் சொல்லிய சொற்படி சொல்' என்பதினால் முன்னே குளக்கோட்ட மன்னன் கூறியபடி கூறுவீராக என ஒருவர் கேட்க அதன் படி கல்வெட்டுப் பாட்டெனப் பாடினான் கவிராஜ வரோதயன் என்பது இப் பாயிரத்தாற் புலனாகின்றது.

கோணேசர் கல்வெட்டு குளக்கோட்ட மன்னன் கோணேஸ்வரத்தில் நிறைவேற்றிய திருப்பணிகளையும், தீர்க்க தரிசனங்களையும் உள்ளடக்கியது. இந் நூலில் இருவேறு பகுதிகளுள்ளன. இவற்றுள் முதலாவது பிரிவு கேணேஸ்வரம் தொடர்பாகக் குளக்கோட்டன் புரிந்த திருப்பணிகளை கூறுகின்றது. செய்யுள் நடையிலுள்ள பகுதியிற் சொல்லப்பெற்ற சில அம்சங்களும் உரைநடையிலுள்ள பகுதியிலே சற்று விரிவாகக் கூறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கோணேஸ்வரத்தின் சட்ட திட்டங்களடங்கிய செப்பேட்டு பெரியவளமைப் பத்ததியில் குளக்கோட்ட மன்னன் கூறியிருந்த சம்பவங்களைக் கருவாக அமைத்துக்கொண்டு கோணேசர் கல்வெட்டைப் பாடினான். மனுநீதி கண்ட சோழன் மரபில் வந்த வரராம தேவனுடைய மகன் குளக்கோட்ட மன்னன் திருகோணமலையிலுள்ள கோணேஸ்வரத்தில் திருப்பணிகள் செய்ததாக 'திருமருவு மனு நீதி கண்ட சோழன்' என்று தொடங்கும் கோணேசர் கல்வெட்டின் முதலாவது பாடல் மூலம் அறியக்கிடக்கின்றது.

தொடரும் .. ..

எஸ்.பிரகாஷ் (MA)

ஆசிரியர்,
தி/ நிலாவெளி கைலேஸ்வரா கல்லூரி,
திருகோணமலை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சினிமுரசு

## சினிமாவில் இருந்து விலகும் அனுஷ்கா



2005ல் நாகார்ஜுனா நடித்த சூப்பர் என்ற தெலுங்கு படத்தில் நடிகையானவர் அனுஷ்கா. முதல் படத்திலேயே முன்னணி ஹீரோவுடன் நடித்த அனுஷ்காவுக்கு அடுத்தடுத்து படங்கள் குவிந்ததால் தெலுங்கில் முன்னணி நடிகையானார். தமிழில் அருந்ததி மெகா ஹிட்டானதால் பின்னர் கோடம்பாக்கத்திலும் கொடி ஏற்றிய அனுஷ்கா, இப்போது மீண்டும் தெலுங்கில் ராணி ருத்ரம்மா தேவி, பாகுபாலி போன்ற சரித்திர படங்களில் நடித்துக்கொண்டிருக்கிறார். இதையடுத்து தமிழில் ரஜினி, அஜித் நடிக்கவிருக்கும் புதிய படங்களில் அவர் நடிக்கவிருப்பதாக செய்திகள் பரவிக்கொண்டிருக்கின்றன.

ஆனால், இந்த நேரத்தில் தெலுங்கு மீடியாக்களுக்கு சமீபத்தில் அளித்த பேட்டியொன்றில், கைவசம் உள்ள படங்களை முடித்ததும் திருமணம் செய்து கொண்டு நடிப்புக்கு முழுக்குப் போடப் போகிறேன் என்று கூறியுள்ளாராம் அனுஷ்கா.

## சினிமா குறுஞ்செய்திகள்



- **வேறு கெட்டப்பில் வரவிருக்கிறார் - சிம்பு**

செல்வராகவன் இயக்கும் படத்தில் அடுத்து நடிக்கப்போகிறார் சிம்பு. சிம்புவை ஒரு மார்க்கமாக மாற்றப்போகிறாராம் செல்வராகவன். அதனால், அந்த படத்தில் நடிக்கும்போது வேறு படத்தில் நடிக்க முடியாது என்பதால், முன்னதாக சட்டென்று மாறுது வானிலை, இது நம்ம ஆளு படப்பிடிப்பை முடித்துக்கொடுக்கப்போகிறாராம் சிம்பு.

- **திரைப்படக்குழுவினரால் கைவிடப்பட்டுள்ளதா தெனாலிராமன்**



தெனாலிராமன் இசைவெளியீட்டு விழாவிலோ திரைப்படத்துறையைச் சேர்ந்தவர்களோ, திரைப்பட அமைப்புகளைச் சேர்ந்தவர்களோ ஒருவர் கூட வரவில்லை.

- **நயன் - சிம்பு சேர்ந்து நடிப்பது எனக்குத் தெரியாதே!!**


நயன், சிம்பு சேர்ந்து நடிப்பது தொடர்பாக பிரபுதேவாவிடம் கேள்வி எழுப்பிய போது, தனக்கு அது பற்றி எதுவுமே தெரியாது என்றும், தனது பிஸி வாழ்க்கையில் இதையெல்லாம் கண்டுகொள்ள நேரம் இல்லை என்கிறார் பிரபுதேவா.

- **மீண்டும் சினிமாவில் களமிறங்கும் விஜயகாந்த்**

முழுநேர அரசியல்வாதியாகி விட்டதால் எந்த படத்திலும் நடிக்காமலிருந்தவர், இது தனது மகன் அறிமுகமாகும் முதல் படம் என்பதால் மகனுக்காக மீண்டும் சினிமா களத்தில் குதிக்க முடிவு செய்திருக்கிறாராம்.

## ஜி.வி, ஆனந்தி புதிய ஜோடி

'பென்சில்' படத்தில் நடித்துக்கொண்டிருக்கும் ஜி.வி.பிரகாஷ் அடுத்த படத்துக்கும் தயாராகிவிட்டார். அறிமுக இயக்குநர் ஆதிக் 'த்ரிஷா இல்லனா நயன்தாரா' எனும் படத்தை இயக்குகிறார். இதில் ஜி.வி.பிரகாஷ் ஹீரோவாக நடிக்கிறார். ஜி.விக்கு ஹீரோயின் தேடும் படலம் நடந்தது. இதில் ஆனந்தி என்பவர் ஹீரோயினாக நடிக்க கமிட் ஆகி இருக்கிறார்.




ஆனந்தி பிரபுசாலமன் இயக்கும் 'கயல்' படத்தில் ஹீரோயினாக நடித்துக் கொண்டிருக்கிறார். இந்தப் படத்தைத் தொடர்ந்து ஜி.வியுடன் நடிக்க இருக்கிறார். ரெபெல் ஸ்டுடியோ நிறுவனம் இப்படத்தைத் தயாரிக்கிறது.

## ஸ்ரீகாந்த் திரைப்படத்திற்கு தடை

நீண்டகாலமாக தயாரிப்பில் இருந்த ஸ்ரீகாந்த் நடித்த படம் ஒன்று தற்போது வெளிவரும் சூழ்நிலையில் அந்த படத்தின் தயாரிப்பாளர் ஒருவர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்ததால், படத்தின் ரிலீஸ் தடைபட்டுள்ளது.

ஸ்ரீகாந்த் நீலம் உபதாய் நடித்த திரைப்படம் "ஓம் சாந்தி ஓம்" இந்த படத்தை ராஜசேகர் மற்றும் அருமை சந்திரன் ஆகிய இரண்டு தயாரிப்பாளர்கள் கூட்டாக தயாரித்தனர். இந்த படத்தின் சாட்டிலைட் உரிமை மற்றும் செங்கல்பட்டு ஏரியா உரிமை ஆகிய இரண்டையும் தயாரிப்பாளர்களில் ஒருவரான ராஜசேகருக்கும், மற்ற உரிமைகள் அனைத்தையும் அருமைசந்திரனும் பகிர்ந்து கொள்வதாக ஒப்பந்தம் போட்டிருந்தனர்.



ஆனால் ராஜசேகருக்கு சேர்ந்த சாட்டிலைட் உரிமையை அருமைசந்திரன் அவருக்கு தெரியாமல் ஒரு தொலைக்காட்சி நிறுவனத்திற்கு விற்றுவிட்டதால் அதிர்ச்சி அடைந்த ராஜசேகர் நேற்று சென்னை உயர்நீதிமன்றத்தில் அருமைசந்திரன் மீது மோசடி வழக்கு ஒன்றை தொடுத்தார். அவரது மனுவை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம் "ஓம் சாந்தி ஓம்" படத்திற்கு தடை விதித்தது.

## சினிமாவுக்குள் நுழையும் மிர்ச்சி செந்தில்

பி.வி.பி. சினிமா சார்பில் பியர்ல் வி.போட்லூரி மற்றும் ஹேண்ட்மேட் பிலிம்ஸ் தயாரிக்கும் படம் 'வல்லவனுக்கு புல்லும் ஆயுதம்'. சுனில் நடித்து ஹிட்டடித்த 'மரியாதை ராமண்ணா' தெலுங்குப் படத்தின் தமிழ் ரீமேக்தான் 'வல்லவனுக்கு புல்லும் ஆயுதம்'. இதில் சந்தானம் ஹீரோவாக நடிக்கிறார். ஹீரோயினாக ஆஷ்னா சாவேரி நடிக்கிறார். காமெடி நடிகர் ஸ்ரீநாத் இந்தப் படத்தை இயக்குகிறார். சந்தானம் நடனம், சண்டை, காதல் என அனைத்து ஏரியாவிலும் வெளுத்துக்கட்டப் போகும் இந்தப் படத்தில் டாக்டர் கேரக்டரில் மிர்ச்சி செந்தில் நடிக்கிறார். கதைப்படி, மிர்ச்சி செந்தில் ஹீரோயின் ஆஷ்னா சாவேரியின் முறை மாப்பிள்ளையாக வருகிறாராம்.



## நீண்ட கால இடைவெளியில் சரண்

காதல் மன்னன், அமர்க்களம், அட்டகாசம், வட்டாரம், அசல், மோதி விளையாடு, வசூல்ராஜா எம்.பி.பி.எஸ் போன்ற பல வெற்றிப்படங்களை இயக்கிய இயக்குனர் சரண், தனது சொந்த பிரச்சனை காரணமாக சில வருடங்கள் சினிமாவில் இருந்து ஒதுங்கி இருந்தார். தற்போது மீண்டும் ஒரு திரைப்படத்தை இயக்க தயாராகிவிட்டதாக கூறப்படுகிறது.

சரண் இயக்கும் புதிய படத்திற்கு "ஆயிரத்தில் இருவர்" என்ற பெயர் வைக்கப்பட்டுள்ளது. இந்த படத்தில் வினய் கதாநாயகனாக நடிக்கிறார். மேலும் இந்த படத்தில் வினய் இருவேடங்களில் நடிக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த படத்தில் வினய்க்கு ஜோடியாக மும்பை கல்லூரி மாணவி ஒருவர் நடிக்கிறார்.



இந்த படத்திற்கு சரணின் ஆஸ்தான இசையமைப்பாளர் பரத்வாஜ் இசையமைக்கிறார். படத்தை சரண், சொந்தமாகவே தயாரிக்கின்றார். ஜுன் மாதம் இந்த படத்தின் படப்பிடிப்புகள் துவங்கும் என்றும், டிசம்பரில் படம் ரிலீஸ் ஆகும் என சரண் தரப்பினர் தெரிவித்தனர்.

## தேர்தலில் போட்டியிடும் நிவேதிதா

வருகிற பாராளமன்ற தேர்தலில் தமிழ்நாட்டில் ஒரு நடிகர், நடிகைகூட போட்டியிடவில்லை. நடிகர் கார்த்திக் ஏதாவது ஒரு தொகுதியில் போட்டியிடலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிலையில் தென் சென்னை நாடாளுமன்ற தொகுதியில் ஒரு நடிகை போட்டியிட இருக்கிறார்.



உறங்காத கண்கள், நிலவே மலரே, செவ்வந்தி படங்களில் ஹீரோயினாக நடித்தவர் ரஜினி நிவேதா. தெலுங்கு, கன்னட படங்களில் நடித்த இவர் தற்போது தமிழ் தொலைக்காட்சி சீரியல்களில் நடித்து வருகிறார். அவர் நேற்று தனது ஆதரவாளர்களுடன் தென்சென்னை தொகுதிக்கு வேட்புமனு தாக்கல் செய்ய அடையாறில் உள்ள மாநகராட்சி மண்டல அலுவலகத்துக்கு சென்று வேட்புமனு தாக்கல் செய்தார்.

## ஒரு நாள் - ஒரு கோடி சம்பளம்



"கத்தி" திரைப்படத்தை அடுத்து "சிம்புதேவன்" படத்தில் நடிக்கவிருக்கிறார். இந்த படத்தில் விஜய்க்கு ஜோடியாக நடிக்க ப்ரியங்கா சோப்ராவிடம் முதலில் பேசப்பட்டது. ஆனால் ப்ரியங்கா சோப்ராவிற்கு கால்ஷீட் நிரம்பியிருப்பதால், விஜய் படத்திற்கு அவரால் கால்ஷீட் கொடுக்க முடியவில்லை.

இந்நிலையில் இயக்குனர் சிம்புதேவன், தீபிகா படுகோனேவை நேரில் சந்தித்து பேசியதாக தெரிகிறது. அவரிடம் கதையை சொன்ன இயக்குனர் சிம்புதேவன், 20 நாட்கள் மட்டும் கால்ஷீட் கொடுத்தால் போதும் என்று கூற, அதற்கு தீபிகா நாள் ஒன்றுக்கு ஒரு கோடி ரூபாய் சம்பளம் என்றும் 20 நாட்கள் கால்ஷீட் தேவையென்றால் ரூ.20 கோடி சம்பளம் தேவையென்றும் தீபிகா கூறியதால் சிம்புதேவன் அதிர்ச்சி அடைந்தார். பின்னர் தயாரிப்பாளரின் ஆலோசனைப்படி கோலிவுட் கதாநாயகி ஒருவரையே தேர்ந்தெடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

## 2D - 3D யில் கோச்சடையான்



ரஜினிகாந்த், தீபிகா படுகோனே நடித்த கோச்சடையான் திரைப்படம் கடந்த வாரம் சென்சார் செய்யப்பட்டதாகவும், அந்த படத்திற்கு யூ சர்டிபிகேட் கொடுத்ததாகவும், ஆனால் தற்போது சௌந்தர்யா ரஜினிகாந்த், கோச்சடையான் படத்திற்கான இறுதிகட்ட பணிகளுக்காக சீனா சென்றிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

இறுதிகட்ட பணிகளுக்காக இயக்குனர் சீனாவில் இருக்கும்போது கோச்சடையான் படத்திற்கு எப்படி சென்சார் போர்டு யூ சர்டிபிகேட் கொடுத்திருக்க முடியும் என சில ஊடகங்கள் கேள்வி எழுப்பியுள்ளது.

அதற்கு படத்தின் தயாரிப்பு நிறுவனம் தற்போது விளக்கம் அளித்துள்ளது. கோச்சடையான் திரைப்படம் 2D மற்றும் 3Dயில் தயாராகிறது. 3D வசதி இல்லாத இடங்களில் 2Dயில் ரிலீஸ் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிக விரைவில் வெளியாகும் iphone 6



நாளுக்கு நாள் எதிர்பார்ப்பினை ஏற்படுத்திவரும் iPhone 6 தொடர்பில் மேலும் சில புதிய படங்கள் வெளியாகியுள்ளன.

அறிமுகமாவதற்கு இன்னும் சில மாதங்களே உள்ள நிலையில் இப்புதிய கட்டமைப்பினை Martin Hajek மற்றும் Nowhereelse என்பவர்கள் வடிவமைத்து வெளியிட்டுள்ளனர்.

எது எவ்வாறாயினும் அப்பிள் நிறுவனம் A8 Processor இனைக் கொண்டதும் 4.7 அங்குல அளவுடைய தொடுதிரையினைக் கொண்டதும், 5.5 அங்குல அளவுடைய தொடுதிரையினைக் கொண்டதுமான இரு ஸ்மார்ட் கைப்பேசிகளை வெளியிடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஹார்ட் டிஸ்க்கைப் பாதுகாக்க



ஹார்ட் ட்ரைவில் ஒரு பேட் செக்டார் (bad sector) என்பது, நாம் டேட்டா ஸ்டோர் செய்யும் இடத்தில் சிறிய பழுதான இடம் ஆகும்.

பழுதான பகுதிகள் என இவற்றை அழைக்கலாம். இவை இரண்டு வகைப்படும். முதலாவது, சாதனப் பாதிப்பு வழியாக ஏற்படுவது. இரண்டாவது சாப்ட்வேர் புரோகிராம்களினால் ஏற்படுவது. இரண்டாவது வகையினைச் சரி செய்திடலாம். ஆனால், முதல் வகையில் பழுது ஏற்பட்டால், அதனைச் சுற்றி வேலி போன்ற டிஜிட்டல் தடையை அமைத்து, பயன்படுத்துவதிலிருந்து ஒதுக்கி வைக்கலாம்.

பேட் செக்டார் வகைகள்: இரண்டு வகையான பேட் செக்டார்கள் உள்ளன. இவற்றை "physical" and "logical" bad sectors என அழைக்கின்றனர். அல்லது சிலர் "hard" and "soft" எனவும் அழைக்கின்றனர்.

இன்னொரு வகையான logical - or soft - bad sector என்பது, குறிப்பிட்ட அந்த பகுதி செயல்படாமல் இருப்பது. ஆப்பரேட்டிங் சிஸ்டம் அந்தப் பகுதியில் உள்ள டேட்டாவினைப் படிக்க முயன்று, பின் பழுதினை நீக்கும் தன் குறியீடுகள் அதனுடன் ஒத்துப் போகாமல் இருப்பதனைக் கண்டறிந்து, அங்கு ஏதோ பிரச்சனை இருப்பதை அறிந்து உணர்த்துவதாகும்.

இந்த பகுதி பேட் செக்டார் எனக் குறிக்கப்படும். இதனை, அந்தப் பகுதியில் ஜிரோஸ் எழுதுவதன் மூலம் சரி செய்துவிடலாம். விண்டோஸ் சிஸ்டம் கொண்டிருக்கும் Disk Check டூல், இத்தகைய பழுதுகளை சரி செய்திடலாம்.

# $1 சம்பளம் பெறும் உரிமையாளர்




∴பேஸ்புக் நிறுவனர் மார்க் ஸக்கர்பெர்க், ஒரு டாலர் மட்டுமே சம்பளம் பெறுவதாக தெரிய வந்துள்ளது.

ஆப்பிள், மற்றும் கூகுள் நிறுவனங்களின் தலைவர்களை அடுத்த இடத்தில் இருக்கிறார் ∴பேஸ்புக் நிறுவனத்தலைவர் மார்க். இவர் கடந்த ஆண்டு ஒரு டாலர் மட்டுமே சம்பளமாக பெற்றுள்ளார் என்பது தற்போது தெரியவந்துள்ளது.

ஆனால் ∴பேஸ்புக் நிறுவன் ஊழியர்களின் சம்பளம் மிக மிக அதிகம். ∴பேஸ்புக்கில் பணிபுரியும் தலைமை நிதி அதிகாரி டேவிட் எபர்மென்ஸ்ஸின் ஊதியம் 10.5 மில்லியன் டாலர்கள் மற்றும் அந்த நிறுவனத்தின் தலைமை இயக்க அதிகாரி ஷெரில் சேண்ட் பேர்கின் சம்பளம் 16.1 மில்லியன் டாலர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. ஒரு டாலர் சம்பளம் பெறும் ∴பேஸ்புக் நிறுவனரின் மொத்த சொத்து மதிப்பு எவ்வளவு தெரியுமா? $28.7 பில்லியன் டாலர் ஆகும்.

## விளையாட்டுப் பையன்

# நீங்கள் வாங்கும் செல்போன் ஒரிஜினலா??



இவ்வாறான போலி தயாரிப்பு மொபைல்களைக் கண்டறிய கீழ்க்கண்ட வழிமுறைகள் உங்களுக்கு உதவும்.

முதலில் நீங்கள் உங்கள் மொபைல் போன் ஒரிஜினல்தானா என்பதைக் கண்டறிய International Mobile Equipment Identification எனப்படும் IMEI எண்ணை அறிந்துகொள்ள வேண்டும். உங்கள் மொபைலில் IMEI எண்ணைக் கண்டுபிடிப்பது எப்படி? சாதாரண செயல்பாட்டின் மூலம் IMEI எண்ணைக் கண்டறிய முடியும். உங்கள் மொபைலில் *#06# என தட்டச்சிடுங்கள், உடனே உங்கள் மொபைல் போனிற்கான IMEI எண் காட்டப்படும். அந்த IMEI எண்ணை குறித்து வைத்துக்கொள்ளுங்கள்.

அந்த IMEI எண்ணை ஒரு SMS ஆக தட்டச்சிட்டு 53235 என்ற எண்ணிற்கு SMS செய்துவிடுங்கள். இப்பொழுது உங்கள் பதில் SMS ஆக Success என்ற செய்தி வந்திருக்கும். அப்படி வரவில்லையென்றால் உங்கள் மொபைல் போலியானது என்பதை நீங்கள் அறிந்துகொள்ளலாம். இந்த முறையில் உங்களுக்கு ஏதேனும் சந்தேகம் இருப்பின் இணையத்தின் மூலமும் நீங்கள் உறுதிப்படுத்திக்கொள்ள முடியும்.

# லெனோவாவின் புதிய ஃபோன்



லெனோவா நிறுவனம், அதன் சமீபத்திய ஸ்மார்ட்போனான A526 ரூ.9,499 விலையில் அறிமுகப்படுத்தியுள்ளது. சீன கைபேசி நிறுவனமான லெனோவா, A526 ஸ்மார்ட்போனை நிறுவனத்தின் ஆன்லைன் கடைகளில் (2014 ஏப்ரல் 5) சனிக்கிழமை தொடங்கி இருக்கும் என்று அறிவித்துள்ளது.

லெனோவா A526 ஸ்மார்ட் போனில் இரட்டை காத்திருப்பு ஆதரவு கொண்ட இரட்டை சிம் (ஜிஎஸ்எம் + ஜிஎஸ்எம்) ஸ்மார்ட்போன் ஆகும், மற்றும் வழக்கமான சிம் அளவு ஆதரிக்கிறது. இப்போது ஆண்ட்ராய்டு 4.2 ஜெல்லி பீன் ஆப்பரேட்டிங் சிஸ்டம், இயங்குகிறது, எதிர்கால மென்பொருள் மேம்படுத்தல் பற்றி எந்த வார்த்தையும் குறிப்பிடப்படவில்லை.

(FWVGA) 480x854 பிக்சல் தீர்மானம் கொண்ட 4.5 இன்ச் டிஸ்ப்ளே இடம்பெறுகிறது. ரெம் 1GB உடன் 1.3GHz குவாட் கோர் மீடியாடெக் MT6582M பிரொசசர் மூலம் இயக்கப்படுகிறது. லெனோவா A526 ஸ்மார்ட் போனில் 5 மெகாபிக்சல் ∴பிக்ஸ்டு போகஸ் (fixed focus) பின்புற கேமரா, 0.3 மெகாபிக்சல் முன் எதிர்கொள்ளும் கேமராவையும் கொண்டுள்ளது.

# ஒரு கொலையின் கதை

2-6

**ஒரு உண்மைச் சம்பவத்தைத் தழுவிய கதை...... கதையொன்றில் புனைவுகள் இருப்பதைப் போல இக் கதையிலும் புனைவுகள் உள்ளன.**

"அதே வேளை எங்களுடைய சோதனை முடியும் வரை நீங்கள் வெளிச் செல்வதோ அல்லது வெளியார் யாரும் உள்வருவதையோ நாங்கள் அனுமதிக்கப் போவதில்லை" எனப் புலனாய்வாளர்கள் சற்று இறுக்கமான தொனியில் தீர்மானமாகத் தமது கட்டளையை வெளிப்படுத்தினர்.

அவர் மலைத்துப் போயிருக்க.... புலனாய்வாளர்கள் அதற்கு மேலும் நேரத்தை போக்கடிக்காமல் நடவடிக்கைகளை ஆரம்பித்தனர்.

ஒருவர் முன்வாசலுக்கு நகர்ந்து (தொடரும்)

தமது காலணிகளை வீட்டின் உட்புறமாக நகர்த்தி விட்டு பிரதான கதிவை மூடினார்.

அடுத்து அவர்கள் பற...பற... வெனத் தமது கடமைகளை ஆற்றத் தொடங்கினர். இரண்டு அறைகளைக் கொண்ட அவ்வீட்டில் காப்பிடப்பட்ட அறை தவிர்ந்த ஏனைய அறையினில் எவ்விதமான தடயங்களையும் அவர்கள் பெற்றுக்கொள்ள வில்லை.

அந்த அறை அலிக வின் மனைவியினதும் குழந்தையினதும் அறையாகப் பல நாட்களாகவே பாவிக்கப்பட்டிருந்ததை அவள் அலிக கைது செய்யப்படும் போது புலனாய்வாளர்களுக்குத் தெரிவித்திருந்தாள்.

ஆகவே அவ்வறையினுள் எவ்விதமான சந்தேகத்திடமான பொருட்களும் கிடைக்கவில்லை.

எனவே காப்பிடப்பட்ட அறையைத் திறந்து சோதனையிடுவதற்கு அவர்கள் இருவரும் தயாராகினர்.

காப்பைபப் பரிசீலித்த போது அக்காப்பு எவ்விதத்திலும் சேதமடையாது இருந்ததை அவர்கள் முதலில் உறுதிப்படுத்திக்கொண்டனர்.

அத்துடன் அவ்வறையின் சுவர்களில் வெளிப்புறமாக இரண்டு யன்னல்கள் இருந்ததை ஏற்கனவே அவர்களது குறிப்பேடு தெளிவாகக் காட்டியிருந்தது. அவ்விரு யன்னல்களையும் அவர்கள் வெளிப்புறமாகச் சென்று பரிசோதிதத்த போது அய்யன்னல்களில் எவ்வித ஊறுக்களும் நிகழ்த்தப் படாதிருந்ததை அவதானித்துக் கொண்டனர்.

அத்துடன் அலிகவைக் கைது செய்த போது அவனது வீட்டின் அறையின் படங்கள் யாவும் அவர்களால் பிடிக்கப்பட்டிருந்தது. அப்படங்களுடன் தற்போதைய நிலைகளையும் ஒப்பிட்ட போது அவ்வறை வெளிப்புறமாக எந்த மாற்றத்தையும் அடையவில்லை என்பது உறுதியாக இருந்தது.

இப்போது கதவின் காப்பை அகற்றலாம் என்பதை அவர்கள் உணர்ந்து கொண்டனர்.

காப்பு அகற்றப்பட்ட அந்த அறைக் கதவு மெலிதான கீறல் ஒலியுடன் திறக்கப்பட்ட போது ஏதோவோர் அமானுஸ்யக் காற்று அங்கிருந்து வெடித்து வெளிச் சென்றது.

சிறிது நேரம் உட்புக விரும்பாமல் புலனாய்வாளர்கள் வெளியே தரித்தனர்.

அதன் பின்னர் உட்புகுந்த அவர்கள் எதையும் கலைக்காமல் தம்மிடம் இருந்த நிழற்படங்களுடன் அந்த அறையின் பொருட்களை ஒப்பிட்டுக் கொண்டனர்.

"எவையும் அரக்கப்படவில்லை...."

அமானுஸ்ய அமைதியைக் கலைத்தார் புலனாய்வாளர் ஒருவர்...

"ஆம்... அப்படியே தான் இருக்கின்றது... இலோசான தூசியும் படர்ந்திருக்கின்றது"

தமது கைகளுக்கு கையுறைகளை அணிந்து கொண்ட இருவரும் மிக நிதானமாக அவ்வறையைப் புரட்டிப் போடத் தொடங்கினார்கள்.

தடய அறிவியல் பயிற்சியைக் கொண்ட அந்தப் புலனாய்வாளர்களுக்கு எவ்வாறாயினும் ஒரு முக்கிய தடயம் அங்கு கிடைக்கும் என்பதில் பெரும் நம்பிக்கை இருந்தது.

எவ்வளவு பெரிய திட்டமிட்ட கொலைகளும் யாதாயினும் ஒரு தடயத்தை புலனாய்விற்காக விட்டு வைத்திருக்கும் என்பது பொது விதி.....

அதன்படி அந்த ஒரு புலனாய்வுத் தடயத்தை அறிந்து கொள்ள, கண்டு பிடிக்க போதியளவு பொறுமையும் காண்கின்ற ஒவ்வொரு பொருளினதும் மனப் பிம்பத்தை உருவாக்கும் வல்லமையும் அவர்களுக்குப் பயிற்சியின் ஊடாக கிடைக்கப்பெற்றிருந்தது.

விஞ்ஞான நுட்ப முறைகள் மிக வேகமாக வளர்ந்துள்ள இக்காலகட்டத்தில் ஒரு சிறு தடயம் மிகப் பெரும் வழக்குகளை முடிவுக்குக் கொண்டு வரும் ஏதுக்களாக இருக்கின்றன.

உதாரணமாக தனது கணவனால் கொல்லப்பட்டு காரினுள் இடப்பட்டு ஏரியொன்றில் மூழ்கடிக்கப்பட்ட பெண் ஒருவரின் உடலம் கிடைக்கவேயில்லை அது ஏரியின் போக்கில் இழுத்துச் செல்லப்பட்டு எங்கோ புதைந்து போய் விட்டது. பல நாட்களின் பின்னர் ஏரியில் கிடந்த காரை கண்டு பிடித்த போது அக்காரில் எவ்வித தடயங்களும் இல்லை. எனவே தனது மனைவி எங்கோ ஓடி ஒளிந்துள்ளார் என வாதிட்டது கணவனின் தரப்பு.

ஆனால்.... அந்தக் காரில் காணப்பட்ட சில அட்டைகளை புலனாய்வாளர்கள் உயிருடன் பத்திரப்படுத்திக் கொண்டனர். அவற்றை பரிசோதனைக்கு அனுப்பிய போது அவ்வடடைகளின் உடலில் உள்ள இரத்த மாதிரிகளின் மரபணு காணாமற்போன பெண்ணின் மரபணுவுடன் ஒத்திசைந்தது. ஆகவே அந்தப் பெண் அந்தக் காரினுள் இருந்தது உறுதி செய்யப்பட்டது.

அந்தக் கார் காணமற் போன தினத்தன்று அப் பெண்ணும் கணவரும் ஒன்றாகப் புறப்பட்டுச் சென்றதை அயலவர்கள் உறுதிப்படுத்தினர். விசாரணையில் மனைவியைக் கொலை செய்ததை கணவன் ஏற்றுக் கொண்டார்.

எனவே தடயங்களை அவர்கள் அந்த அறையில் (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரிக்கெட் - ஒரு விளையாட்டல்ல அது வாழ்க்கையின் முன்னுரை




துடுப்பாட்ட வீரர்களுக்கு அடுத்து எப்படிப்பட்ட பந்தை தான் எதிர்கொள்ள வேண்டி வரும் என்பது புரிஎது விடும். எனவே அதைக் கணித்துக் கொண்டு அதற்கு ஏற்றாற்போல தம்மை தயார் படுத்திக் கொள்வார்கள்.இதனால் அடுத்து வரும் ஒவ்வொரு பந்தையும் அந்தக் களத்தடுப்புக்கு ஏற்றதாகவே வரும் என எதிர்பார்த்துக் கொண்டே முகம் கொள்வார்கள். அனால் இதனைப் புரிந்து கொள்ளும் எதிரணிப்பந்து வீச்சாளரும், கப்டனும் துடுப்பாட்டவீரன் எதிர்பார்த்துக் காத்திருக்கும் விதமாகப் பந்தைப் வீச மாட்டார்கள். இதனால்.. இப்படியான அதிக கவனத்தாலும் கூடிய எச்சரிக்கை உணர்வாலும் வேறுவிதமாகப் போடப்படும் பந்தை, தவறாக அடித்தாட முனைந்து துடுப்பாட்ட வீரர் ஆட்டமிழந்து விடும் சம்பவங்களும் அதிகம் நடப்பதுண்டு. . இதைப்போல எத்தனையோ யுக்திகள் கிரிக்கெட்டில் பாவிக்கப்படுகின்றது..

**கலைச்செல்வன் ரெக்ஸி அமிர்தன்**

கிரிக்கெட்டை விளையாடும் ஒருவர் மனதாலும் உடலாலும், மூளையாலும், அவரது ஆளுமையாலும், கிரிக்கெட்டைப்பற்றிய அவரது அறிவாலும் சிறந்து விளங்கவேண்டும். அவர் விளையாடும் ஒரு போட்டியில் சோதனைகள், வேதனைகள், ஏமாற்றங்கள், தோல்விகள், அவமானங்கள், காயங்கள், நோவுகள்,கோபங்கள், அழுகைகள், வெற்றிகள் என எல்லாவற்றையும் சந்தித்தே ஆகவேண்டும். அந்தக் கிரிக்கெட் போட்டியில் அவருக்கு இப்படிப்பட்ட உணர்வுகளால் வைக்கப்படும் Test இனைக் குறிப்பிட்டுக் காட்டவே ஆரம்பத்தில் TEST CRICKET என கிரிக்கெட்டுக்கு பெயர் சூட்டப்பட்டது.

அந்த டெஸ்ட்டில் அவன் வெற்றி பெறுவானாக இருந்தால், எதிர்காலத்தில் தனது வாழ்க்கையில் அவன் சந்திக்கப்போகும் எந்தவித சவால்களுக்கும் அவனால் முகம் கொடுக்க முடியும். அதற்காக இளைஞர்களை தயார் படுத்த உருவானதே கிரிக்கெட். முக்கியமாக் டெஸ்ட் கிரிக்கெட்.

எனக்குப் புரிந்தவரையில் இளம் குருத்துக்கள், சிறுவர்கள் சிறுமிகளுக்கு கிரிக்கெட்டைப்பற்றிய புரிதலும் பயிற்சியும் இருக்குமானால் அது அவர்களின் மனநிலையை புடம்போட்டு தன்னம்பிக்கையில் வளர்த்து, எதிர்காலத்தை துணிவுடன் எதிர்கொள்ள தயார்படுத்தும்..

கிரிக்கெட் - வாழ்க்கையை எப்படி எதிர்கொள்ள வேண்டும் என்பதை இளையோருக்குப் பயிற்றும், புத்தகம்.அது வாழ்க்கையின் முன்னுரை.

## தம்பலகாமம் பிரதேச விளையாட்டுப் போட்டி



தம்பலகாமம் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக் கிடையேயான விளையாட்டுப் போட்டி 2014.03.29 அன்று முள்ளிப்பொத்தானை அல்.ஹிஜரா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி. ஸ்ரீபதி ஜெயகௌரி அவர்கள் கலந்து கொண்டார்.

குறுந்தூர ஓட்டப்போட்டிகள் உதைபந்தாட்டப் போட்டி போன்றன இடம்பெற்றன. போட்டியில் வெற்றியீட்டிய கழகங்களுக்கு வெற்றிக்கேடயமும். சான்றிதழ்களும் விருந்தினர்களால் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இப் பிரதேச போட்டி நிகழ்வை விளையாட்டு உத்தியோகத்தர் ஜனாப்.எம்.ஹாரிஸ் அவர்கள் ஒழுங்குபடுத்தியிருந்தார். (குணா)

## குறுஞ் செய்திகள்

- ஸ்பெயினின் புகழ்பெற்ற பார்சிலோனா கால்பந்து அணியின் 18 வயதுக்குட்பட்ட வீரர்களை சர்வதேசப் பரிமாற்றம் செய்துகொண்டதில் விதிகளை மீறியதாக சர்வதேச உலகக் கால்பந்து சம்மேளனம் குற்றம் சாட்டியுள்ளது.



- மோசமாக விளையாடினால் அணியில் இருந்து நீக்கிவிடுவார்கள் என்ற எண்ணத்தினால், அணி மீது கவனம் செலுத்துவதை விட்டு விட்டு, தனது சொந்த ஆட்டம் குறித்து மட்டும் கவனம் செலுத்துகிறார்கள். இதனால் பயிற்சியாளர், , அணித்தலைவர் மற்றும் வீரர்கள் ஒருங்கிணைந்து செயல்பட முடிவதில்லை. அதே சமயம் பயிற்சி வசதிகள் நல்ல முறையில் இல்லை என்றும் உலக தரம் வாய்ந்த பயிற்சியாளர்கள் இல்லை எனவும் வங்காளதேச அணியின் ஷகிப் அல் ஹசன் தெரிவித்துள்ளார்.



- இந்திய ஓபன் சூப்பர் சீரிஸ் பேட்மிண்டன் போட்டிகள் டெல்லியில் நேற்று முன்தினம் தொடங்கியது. இப் போட்டிகளில் நேற்று நடந்த மகளிர் ஒற்றையர் முதலாவது சுற்றில் இந்திய நட்சத்திர வீராங்கனை சாய்னா நெஹ்வால், அவுஸ்திரேலியாவை சேர்ந்த சிமோன் பிருட்ஸ்ச்சியை 21-7, 21-9 என்ற நேர் செட்டில் வென்றார்.

### ஏப்ரல் 01ல் டோனிக்கு குழந்தை



இந்திய கிரிக்கெட் அணியின் அணித்தலைவர் டோனி, சாஷி ரவாத் திருமணம் 2010ம் ஆண்டு நடைபெற்றது. இந்நிலையில், டோனி முதன்முறையாக அப்பா ஆகப்போகிறார் என்ற செய்தி வெளியானது.

தற்போது கர்ப்பமாக இருக்கும் சாஷிக்கு யூலையில் குழந்தை பிறக்கப் போவதாகவும் கூறப்பட்டது.

இவ்விடயம் தொடர்பாக ரசிகர்களிடமிருந்து சாஷியின் டுவிட்டர் பக்கத்தில், ஏராளமான வாழ்த்துக்கள் குவிந்துள்ளது.

சாஷி நேற்று தனது டுவிட்டர் பதிவில், ஏப்ரல் 1ம் திகதியில் யாரோ நன்றாக ஏமாற்றி இருக்கிறார்கள் என அச் செய்தியை மறுத்துள்ளார்.

# மலை முரசு குறுக்கெழுத்து புதிர் 004

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 18 | 19 ம | 20 | | | ■ | 2 | |
| | 3 | | | | | | | ■ |
| 4 | 5 | 6 | | 21 | | | | 22 |
| 7 | | வ | 23 | 27 | ■ | ■ | ■ | |
| ■ | ■ | 8 | | | | ■ | 24 | ர |
| 9 | 28 | 17 | | | ■ | 10 | | |
| 11 | | | ■ | 12 | 25 | | | ■ |
| ■ | 13 | | | 14 | | | ■ | 26 |
| ■ | 15 | | ரு | | | 16 சி | | |

### இடமிருந்து வலமாக

1. இலங்கைத் தமிழ்ச் சாசனங்களை எழுதியவர்
2. துரோகத்தின் ஒத்த சொல்
3. மந்திரம் ஓதுவதைக்குறிக்கும்
4. சிறையில் இருப்பவர்
5. மக்களின் வர்ணங்கள் -தலைகீலாக உள்ளது
6. உன்னையே நீ அறிவாய் என்றவர்
7. தமிழர்களின் முகமன்...குழம்பியுள்ளது
8. உலோகமொன்றின் பெயர்
9. புண்ணாகும் உடம்பை நகைச்சுவையாளன் வடிவேல் இப்படி அழைப்பார் -குழம்பியுள்ளது.
10. யுத்த நிலம்
11. கயிறொன்றின் வகை குழம்பியுள்ளது
12. பேச்சுவாத்தை நடந்த இடமொன்று குழம்பியுள்ளது
13. தெய்வ பூதங்களின் பெயர் -குழம்பியுள்ளது
14. பட்டத்திற்கு ஓசைக்குக் கட்டுவது- தலைகீழாக உள்ளது
15. சினத்தால் வெளிவரும் மனிதப் பண்பு-தலைகீழாகவும் கடைசி எழுத்து குழம்பியும் உள்ளது
16. பாரதி பாடிய குருவி

### மேலிருந்து கீழாக

17. கையின் ஒத்த சொல் -குழம்பியுள்ளது.
1. நித்திரையுடன் சம்பந்தப்பட்ட திருமலைக் கிராமம் ஒன்றின் பெயர்
18. தந்திரோபாயத்தை இப்படியும் அழைக்கலாம்
19. மீன் அவதாரம்
20. அமெரிக்க விணவோடக் கழகம்ர்.
2. ....... சுட்டதடா - கை விட்டதடா..
21. சந்திரனும் சூரியனும் சந்திப்பது - நடு எழுத்து குழம்பியுள்ளது
22. சங்கீதத்திற்கு அடிப்படையானது
23. குறைவாக இருப்பதை இந்தியத் தமிழர்கள் இப்படி சொல்வர்
8. மனைவி
24. நிறுப்பது.... தலைகீழாக உள்ளது
10. பாராட்டு -குழம்பியுள்ளது
27. ........: தப்பினால் மரணம்
25. தங்கும் அறை
26. கிழக்கில் அறுப்பதற்குத் தடை
28. பாடும்போது தட்டுவது

## குறுக்கெழுத்து புதிர் 003 ற்கான விடைகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 மா | 5 ன் | ■ | 6 ந | ன் | றி | 23 ப | ரு | 7 அ |
| 22 த | 16 ம | 25 ம் | ம் | 13 சி | று | வ | ர் | ந் |
| க | பீ | ன | 20 தா | ன | ம் | 21 ச | ந் | தி |
| 24 த | கு | தி | 8 அ | ம் | பு | லி | ■ | ■ |
| 27 க | வ | ளை | 26 லி | 14 தா | ■ | 17 ம் | 10 ம | 19 ல் |
| 1 து | ம் | பு | ■ | வ | ■ | 18 க | த் | தி |
| 12 ரு | சி | க | ன | ணி | ■ | 15 கா | த | ணி |
| 2 ம் | ஆ | தா | 11 இ | ள | நீ | ர் | ள | 4 ஆ |
| பு | ■ | 9 பா | ஞ் | சா | லி | 28 மே | ■ | ணி |

- விடைகளை இங்கு வெளியாகி உள்ள கூப்பனில் எழுதி கத்தரித்து அனுப்பவும்.
- முற்றிலும் சரியான விடை எழுதுபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக ரூபா 250, ரூபா 150, ரூபா 100 பெறுமதியான கொள்வனவு கூப்பன் வழங்கப்படும்.

**போட்டி முடிவுத் திகதி : 10.04.2014**

விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி :
மலைமுரசு, இல — 159ஏ,
கடற்கரைக்காட்சி வீதி, திருகோணமலை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டி

01. ஒரு நீளமான வாங்கில் சிலர் அமர்ந்துள்ளனர். சுபாவுக்கு முன்னால் இரண்டு பேர் அமர்ந்துள்ளனர். பின்னால் லவன் அமர்ந்துள்ளான். லவனுக்குப் பின்னால் ஐந்து பேர் அமர்ந்துள்ளனர். இந்த வாங்கில் எத்தனை பேர் அமர்ந்துள்ளனர்?

02. பின்வரும் விபரத்தை வாசித்து விடை தருக.

| | |
|---|---|
| 1கி.கி மாசியும், 500கி பருப்பும் | ரூ.175.00 |
| 1கி.கி மாசியும், 400கி சீனியும் | ரூ.155.00 |
| 500கி பருப்பும், 1கி.கி தேயிலையும் | ரூ.220.00 |
| 1கி.கி மாசி | ரூ. 35.00 |

1. ஒரு கிலோகிராம் தேயிலையின் விலை என்ன?
2. 800 கிராம் சீனியின் விலை என்ன?
3. ஒரு கிலோகிராம் பருப்பின் விலை என்ன?

03. ஒரு மீற்றர் கம்பியை வாங்குவதற்கு ரூ 48 எனின், 4 மீற்றர் 25 செ.மீ கம்பியை வாங்க எவ்வளவு பணம் தேவை?

04. 1/3 பின்னத்திற்கு சமவலுப்பின்னம் பின்வருவனவற்றில் எது?
1. 3/6  2. 3/8  3. 3/9

05. பின்வரும் பூக்களில் மாலை நேரத்தில் மலரும் பூ எது?
1. நந்தியாவட்டை  2. குவளை  3. பவள மல்லிகை  4. அந்தித்தாமரை

06. பூச்சிகளில் தங்கி வாழும் தாவரம் எது?
1. கெண்டித்தாவரம்  2. ஆகாயத்தாமரை  3. இராவணன் மீசை  4. பூச்சாடித்தாவரம்

07. சோறு சமைப்பதற்காக அரிசியை கலைவதற்கு உதவும் பாத்திரம் எது?
1. தாச்சி சட்டி  2. பானை  3. அரிக் குஞ் சட் டி  4. பெரிய மட்பானை

08. சந்தையில் போமலின் இடப்பட்ட மீனை இலகுவாக கண்டறியும் விதம்?
1. மீனிலிருந்து போமலின் மணம் வெளிவரும்
2. மீனிலிருந்து துர்நாற்றம் வெளிவரும்
3. மீனின் பூவிழைகள் வெளிறிக் காணப்படும்.
4. மீன் குவியலில் எந்தவொரு வீட்டு ஈயும் மொய்க்காது.

09. அணிந்திருக்கும் ஆடையில் தீப்பிடித்தால் என்ன செய்யலாம்?
1. தடித்த துணியினால் மூடுதல்  2. நீரை ஊற்றுதல்
3. தீப்பிடித்த பகுதியை கிழித்தெறிதல்
4. நிலத்தில் விழுந்து உருளுதல்

10. நூடில்ஸ் வாங்கும் போது, அதன் மேலுறையில் எதனை அவதானித்து வாங்க வேண்டும்?
1. SLA சான்றிதழ்  2. காலாவதியாகும் திகதி
3. ISO சான்றிதழ்  4. உற்பத்தி செய்யப்பட்ட திகதி

11. பித்தளைத் தட்டிற்கு அருகில் காந்தத் துண்டினைக் கொண்டு செல்லும் போது,
1. பித்தளைத் தகட்டை நோக்கி காந்தத் துண்டு இழுக்கப்படும்.
2. பித்தளைத் தகட்டிலிருந்து காந்தத் துண்டு தள்ளப்படும்.
3. பித்தளைத் தகட்டுக்கும், காந்தத் துண்டுக்கும் இடையில் எதுவும் ஏற்படாது.
4. ஒரு முனை தள்ளப்படும், அதேவேளை மறுமுனை கவரப்படும்.

**பின்வரும் பந்தியை வாசித்து விடையளிக்கவும்.**

சுப்பிரமணிய பாரதியார் சிறந்த புலவர். அவர் சுவை நிறைந்த பாடல்களைப் பாடினார். எல்லோரும் அவரைப் பாரதியார் என்று அழைப்பர். அவருடைய பாடல்களை சிறுவர்களும் பொரியவர்களும் விரும்பிப் படிக்கின்றர்கள். பாரதியார் தமிழ் நாட்டிலே உள்ள எட்டையபுரத்திலே பிறந்தார். இவர் இளமையிலேயே தமிழ், சமஸ்கிருதம், இந்தி ஆகிய மொழிகளைக் கற்றார். அவருக்கு தமிழிலே பற்று அதிகமாக இருந்தது.

12. பாரதியார் எங்கே பிறந்தார்?
13. 'சுவை' என்ற சொல்லின் ஒத்தகருத்துச் சொல் யாது?
14. 'இளமை' என்ற சொல்லின் எதிர்க்கருத்துச் சொல் யாது?
15. பாரதியாரின் முழுப்பெயர் யாது?
16. பாரதியார் கற்ற மொழிகள் யாவை?
17. இப்பந்தியில் இடம்பெற்றுள்ள உயர்திணை, படர்க்கை, எழுவாய்ச் சொல் ஒன்றை எழுதுக.

18. ஒரு மோட்டார் சைக்கிளில் இருவர் சென்றனர். அவர்களுள் ஒருவர் மற்றையவரின் அண்ணன். மற்றையவர் அண்ணனின் தம்பியல்ல எனின், அண்ணனுக்கு மற்றையவர் என்ன உறவு முறை?
1. அப்பா  2. அம்மா  3. தங்கை

19. 'வினை விதைத்தவன் வினை அறுப்பான். தினை விதைத்தவன் தினையறுப்பான். இக்கூற்றுக்குப் பொருத்தமான நிகழ்ச்சி யாது?
1. பாடசாலை முடிவடைந்து வீட்டுக்குச் செல்லும் போது ரமணனின் காலில் காயம் ஏற்படுதல்.
2. அனாதரவான பிச்சைக்காரனைக் கேலி செய்த கோபி கால் சறுக்கிக் கீழே விழுதல்.
3. பாடசாலைக்கு வரும் வழியில் நிசாந்தன் ஒருவனோடு சண்டையிடுதல்.

20. 2009 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 1ம் திகதி ஞாயிறு எனில், அவ்வருடத்தில் மார்ச் மாதம் 1ம் திகதி என்ன கிழமையாகும்?
1. வெள்ளி  2. சனி  3. ஞாயிறு




**புலமைப் பரிசில் வழிகாட்டல்**
**ஆசிரியர் திரு.ந.மனோகரன்**

வி.புஸ்பகுமார்
தரம் 06
திருகோணமலை




ஆ.லோஸ்மியுறா
தரம் - 09
திருகோணமலை



**உங்கள் குழந்தைகளின் ஆக்கங்களை அனுப்ப வேண்டிய முகவரி :**
**மலைமுரசு. இல - 159ஏ.**
**கடற்கரைக் காட்சி வீதி. திருகோணமலை.**

## சிறுவர் முரசு



**சிந்திக்க . . .**
**வாழ்க்கை என்பது நீ சாகும் வரை அல்ல**
**மற்றவர்களின் மனதில் நீ வாழும் வரை**

## குழந்தையின் இருமலை நிறுத்தக் கூடாது

இருமல் என்பது ஒரு முக்கியமான பாதுகாப்பு வழிமுறை ஆகும். ஏனெனில் இது நமது மூச்சுக்குழாயில் தேவையற்ற தூசு, கிருமிகள், நச்சு நுழைவதை தடுக்கிறது. காற்று உள்ளே இழுக்கப்பட்டு, தொண்டை சதைகள் சுருங்கியபின் அதிக அழுத்தத்துடன் காற்று வெளித்தள்ளி விடுவிக்கப்படுகிறது. இதனால் நுரையீரல் உள்ளே தூசு, நச்சு செல்லாமல் தடுக்கப்படுகிறது.

சுரத்தை போலவே இருமலும் நமக்கு நன்மையையே செய்கிறது. எனவே அளவான இருமல் நல்லது, இதற்கு வைத்தியம் தேவை இல்லை. இருமல் அதிகமாக வந்து மூச்சு விட சிரமம், தூக்கம் இல்லாமை, தொண்டை வலி போன்றவை வந்தால் மட்டுமே இருமல் குறைய பாணி எடுத்துகொள்ளவேண்டும்.

சிறு குழந்தைகளின் இருமலை முற்றிலும் நிறுத்தக்கூடாது. ஏனெனில் இருமல் மூலமே உள்ளே தேங்கும் சளி வெளியேறும். இருமலை நிறுத்தினால் அவை நுரையீரலில் சென்று atelectasis என்ற நுரையீரல் சுருங்கும் தன்மையை ஏற்படுத்திவிடும்.

தொடரும் ...

## கிணற்றைத்தானே விற்றேன்!!

(இது ஒரு பெர்ஷிய குட்டிக் கதை)



ஒருவன் தனது கிணற்றை ஒரு விவசாயிக்கு விற்றான். வாங்கிய விவசாயி அடுத்தநாள் கிணற்றிலிருந்து தண்ணீர் எடுக்க ஆவலுடன் கிணற்றுக்கு வந்தான். அப்போது விற்றவன் அங்கே நின்று கொண்டிருந்தான். விவசாயியை தண்ணீர் எடுக்க விடாமல் தடுத்தான்.

விவசாயிக்குக் கோபம் வந்தது. "எனக்குக் கிணற்றை விற்று விட்டு அதிலிருந்து தண்ணீர் எடுக்க விடாமல் செய்கிறாயே?" என்று விற்றவனை கோபத்துடன் கேட்டான்.

விற்றவன் "ஐயா! உமக்கு நான் கிணற்றை மட்டும் தான் விற்றேன். அதிலிருக்கும் தண்ணீரை அல்லவே!!" என்று தர்க்கம் செய்தான்.

விவசாயி குழப்பத்துடனும் கோபத்துடனும் ஊர் பெரியவரிடம் சென்று முறையிட்டான்.

நீதிபதி இருவரையும் அழைத்து இருவர் பக்கத்து நியாயத்தையும் விசாரித்தார். பின்னர் கிணற்றை விற்றவனிடம் "நீ கிணற்றை விற்றுவிட்ட படியால் அது உன்னுடையதல்ல. அதில் உனது தண்ணீரை இன்னமும் வைத்திருப்பது தவறு. உனக்கு அதில்தான் தண்ணீரை சேமித்து வைக்க வேண்டுமென்றால் விவசாயிக்கு அதற்கான வாடகையை தினமும் கொடுத்து விடு. இல்லையென்றால் கிணற்றிலிருந்து உனது தண்ணீரை எடுத்துக்கொண்டு உடனே வெளியேறு" என்று தீர்ப்புக் கூறினார்.



விற்றவன் தலையைக் குனிந்து கொண்டே, தனது தவறுக்கு மன்னிப்புக் கோரி விட்டு, விவசாயியை கிணற்றின் முழுப் பலனையும் அனுபவிக்கச் சொல்லிவிட்டு, அங்கிருந்து சென்று விட்டான்.

முற்றும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

1. ஒரு செவ்வக வடிவ காணியின் நீளம் 30m உம் அகலம் 12m உம் ஆகும் இக்காணியினை சுற்றி $74m^2$ பரப்புடைய xm அகலமுடைய பாதையொன்று இருப்பின்,

அ. x இல் ஓர் இருபடிச் சமன்பாட்டை உருவாக்குக.
ஆ. அதிலிருந்து பாதையின் அகலத்தைக் காண்க

2. 7/10 – 5/15

3. 2.57 x 9

4. (+5) + (-1) - (-2)

5. 8 : 5 = 32 : ……

6. Y = -3x + 5 இல் x இன் குணகம் யாது?

7. ஒருநிலைத்த புள்ளியிலிருந்து மாறாத்தூரத்தில் அசையும் புள்ளியின் பாதை?

8.. ஒரு மணித்தியாலத்திற்கு 120கி.மீ செல்லும் வாகனம், ஒரு நிமிடத்தில் செல்லும் தூரம் யாது?

9. 625 ஐ 4 இன் வலுவில் எழுதுக.

10. கூட்டுக. 2x + (-3x) + 5x

11. 85300mg எத்தனை g ஆகம்?

12. 13056மி.லீ இல் பத்தினிடத்து உள்ள இலக்கம் யாது?

13. சுருக்குக. ( -3) x (-4) x (x-1)

14. $(x – y)^2$ இன் விரிவு யாது?

15. நீளம் 5cm, அகலம் x cm உடைய செவ்வகத்தின் பரப்பளவைக் காண்க.

16. காரணிப்படுத்துக. 6ac - 2cy + 3a - y

17. மதில் ஒன்றைக் கட்டுவதற்கு 9 மனிதர்களுக்கு 2 நாட்கள் தேவை எனின், அம்மதிலைக் கட்டுவதற்கு 6 மனிதர்களுக்கு எத்தனை நாட்கள் தேவை?

18. எண்தொடரி ஒன்றின் n ஆம் உறுப்பு 4n - 3 ஆகும்.

அ. அத் தொடரின் 63 எத்தனையாம் உறுப்பு?
ஆ. இதன் 14ம் உறுப்பின் பெறுமானம் யாது?
இ. (n – 3) ஆம் உறுப்பு யாது?

19. 102.5850 இவ் எண்ணை

அ. கிட்டிய முழு எண்ணிற்கு
ஆ. கிட்டிய முதலாம் தசமதானத்திற்கு
இ. கிட்டிய இரண்டாம் தசமதானத்திற்கு மட்டந்தட்டுக.

20. 5ஆவது சதுர எண்ணிற்கும் 7 ஆவது சதுர எண்ணிற்கும் இடையில் உள்ள வித்தியாசம் யாது?

21. செய்தித்தாள் ஒன்றிலே விளம்பரம் ஒன்றை வெளியிடுவதற்கு முதல் 15 சொற்களுக்கு ரூபா 22.50 உம் அதற்கு கூடுதலான ஒவ்வொரு சொல்லுக்கும் ரூபா2.50 உம் அறவிடப்படுகின்றன. 20 சொற்களைக் கொண்ட விளம்பரம் ஒன்றை வெளியிடக்கொடுக்க வேண்டிய தொகையை காண்க.

22. ஒருவர் ஒரு மாதத்தில் தன்னிடமுள்ள பணத்தின் கால் பகுதியை உணவுக்காகவும் மீதியின் அரைப்பகுதியை பிரயாணத்திற்காகவும் செலவிட்டார். எஞ்சியதை சேமிப்பில் இட்டார். எனின்,

அ. உணவுக்காக செலவிட்ட பின் மீதியாக உள்ள பகுதி?
ஆ. பிரயாணத்திற்கு செலவிட்ட பகுதி மொத்த பணத்தின் என்ன பின்னம்?
இ. சேமிப்பில் இட்ட பகுதி என்ன பின்னம்?
ஈ. சேமிப்பில் இட்ட தொகை ரூபா 800 எனின், அவ்வாரம் அவர் வைத்திருந்த பணம் எவ்வளவு?

20. கணி கருவி ஒன்றை ரூபா 1080 ற்கு விலை குறித்து 4 வீதம் கழிவுகொடுத்து விற்பதனால் அவருக்கு 16 வீதம் இலாபம் கிடைத்ததெனின்,

அ. கொடுத்த கழிவுத்தொகை யாது?
ஆ. அதன் கொள்விலை யாது?
இ. அவருக்குக் கிடைத்த இலாபம் எவ்வளவு?
ஈ. 10 வீதம் நட்டம் ஏற்பட விற்கப்பட்டிருப்பின் கணி கருவியின் விற்ற விலை யாது?

21. Sin A = 3/5 எனின், CosA இன் பெறுமானத்தை பின்னமாகத் தருக.

**கணிதம் வழிகாட்டல் -**
**திருமலையின் பிரபல ஆசிரியர்**

**MATHS**
Personal Classes Year 06, 07, 08, 09, 10 & G.C.E (O/L)
**T. Kumanan 0772975953**
**23. Sivan st Trinco.**
G.C.E (O/L) பிரதி சனி தோறும்
பரீட்சைக்குச் சகல மாணவர்களும் பங்குபெற்றலாம்.

## பாடம் : வரலாறு

1. ஆரியர் இந்தியாவில் குடியேறிய முதல் பிரதேசம்
   1. சப்தசிந்து 2. கங்கைச்சமவெளி
   3. விந்தியமலைத் தொடர் 4. இமாலயம்

2. ஆரியரின் சமூகஅமைப்பில் சத்திரியரால் ஆற்றப்பட்டபணிகளுள் பொருத்தமற்றது
   1. நாட்டின் நிர்வாகத்தை முன்னெடுத்தல்
   2. அந்நிய ஆக்கிரமிப்பிலிருந்து நாட்டு மக்களை பாதுகாத்தல்
   3. நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளை முன்னெடுத்தல்
   4. கல்வி கற்பிக்கும் நடவடிக்கையில் ஈடுபடல்

3. A. மூன்றாவதுபௌத்தபேரவைமாநாட்டைக் கூட்டல்
   B. மகாயானபௌத்தத்தைசீனாவில் பரப்புதல்
   C. சாஞ்சி தூபிஉட்படபல தூபிகளைஅமைத்தல்
   D. நீலராஜன்,ஹஸ்திவர்மன் போன்றோரைதோற்கடித்தல்
   மேற்படிவிடயங்களுள் மௌரியர் காலநிகழ்ச்சி
   1. AB 2. AC 3.CD 4. BD

4. இந்தியாவில் முஸ்லீம்களுக்கு தனிநாடு வேண்டும் என முதன்முதலில் பாடியகவிஞன்
   1. அல்லாமா இக்பால் 2. M.C.சித்திலெப்பை
   3. தாதாபாஸ் நபுரோஜி 4. அலிஜின்னா

5. சீனாமுதலாளித்துவபாதையில் செல்வதைதடுக்கமாவோசேதுங முன்னெடுத்தசெயல்திட்டம்
   1. முன்னோக்கிய பெரும் பாய்ச்சல் 2. நீண்டநடைப் பயணம்
   3. கலாசாரப்புரட்சி 4. கோமின்டாங் படைஅமைப்பு

6. டொகுகாவாசோகுன்களின் ஆட்சி முடிவுக்கு காரணமாக அமைந்த பிரதா விடயம்
   1. கோகுன்களின் ஆடம்பரவாழ்வு 2. படைப்பலம் பலவீனம்
   3. அமெரிக்காவுடனான வர்த்தக உடன்படிக்கை
   4. சத்சுமா மீதான பிரித்தானிய குண்டுவீச்சு

7. வல்லிபுர பொற்சாசனம் மூலம் வெளிப்படும் விடயம்
   1. விஜயபாகு காணிகளை பகிர்ந்தளித்தமை
   2. வசபனின் சுரங்கவழி நீர்ப்பாசனம்
   3. வசபமன்னனின் நாகதீப ஆட்சிப் பரம்பல்
   4. மகாசேனனின் நீர்ப்பாசன திட்டப்பணி

8. ஆரியரின் சமூக அமைப்பில் சத்திரியரால் ஆற்றப்பட்ட பணிகளுள பொருத்தமற்றது
   1. நாட்டின் நிர்வாகத்தை முன்னெடுத்தல்
   2. அந்நிய ஆக்கிரமிப்பிலிருந்து நாட்டு மக்களை பாதுகாத்தல்
   3. நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளை முன்னெடுத்தல்
   4. கல்வி கற்பிக்கும் நடவடிக்கையில் ஈடுபடல்

9. இறந்தவர்களுக்கானமரணச்சடங்குசம்பிரதாயங்கள் தொடர்பானதகவல்கள் கிடைக்கப் பெற்ற இடங்கள்
   1. கித்துல்கல, பாகியன்கல, பட்டதொம்ப
   2. பட்டதொம்ப, அலுலென, பெல்லன்பதிபெல்லச
   3. பாகியன்கல, நில்கல, பெலிகல்கே
   4. இராவணன் எல்ல, நில்கல, கித்துல்கல

10. ஆரியர் இலங்கையின் கிழக்குப் பகுதியில் அமைத்துக் கொண்ட குடியேற்றம்
   1. தீககம, உபதிஸ்ஸகம 3. மஹாகம, தீககம
   2. உபதிஸ்ஸகம, அனுராதகம 4. தீககம, விஜிதபுர

11. கீழ் குறிப்பிடும் நிகழ்வுகளுடன் தொடர்புடைய மன்னன்
   சோழரிடம் இருந்து நாட்டை விடுவித்தல்
   முதன் முதலில் மகாதீத்த துறைமுகத்தில் காவலரண் அமைத்தல்
   பாண்டிய நாட்டுடன் திருமண உறவை ஏற்படுத்தல்
   1. 1ம் பராக்கிரமபாகு 2. நிஸ்ஸங்கமல்லன்
   3. மகாசேனன் 4. 1ம் விஜயபாகு

12. இறந்த விலங்குகளை புதைக்கும் இடமாக எனது வயிற்றை வைத்திருக்க விரும்பவில்லை என கூறி மாமிசத்தை ஒதுக்கிய மன்னன்
   1. அசோகன் 2. எல்லாளன் 3. அக்பர் 4. கனிஷ்கன்

13. கோட்டை இராசதானி காலத்தில் இலங்கை வந்த ஒருவர் கேள்விப்பட்டிருக்கக் கூடிய விடயம்
   அ – கடலாதெனிய , லங்காதிலக விகாரை அமைப்பு
   ஆ – சப்புமல்குமாரய ஆரியசக்கரவர்த்திகளின் ஆதிக்கத்தை ஒழித்தல்
   இ – வெஸ்ட வோல் உடன்படிக்கை இடம்பெறல்
   ஈ - ஸ்பில்பேர்கன் இலங்கை வருகை
   1. அ, இ, ஈ 2. ஆ, ஈ 3. இ, ஈ 4. ஈ, ஆ

ஆசிரியர் : த.அகிலன், Dip. in. Tech. (Merit)
புனித மரியாள் கல்லூரி, திருகோணமலை - சுடர் ஒளி வெற்றிப்படி ஆசிரியர், ஆறுதல் நிறுவன வரலாற்றுப் பாட ஆசிரியர்



**பிரதி சனிக்கிழமைகளில் காலை 6-7 மணிவரை தரம் 6, 7, 8 மாணவர்களுக்கான வரலாறு புவியியல் பாடங்களுக்கான வெற்றிப்படி பரீட்சை நடைபெறும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிழக்கிலும் தேடுதல்....

வெளியே நிற்குமாறு சொல்லிவிட்டு வீடுகளைச் சோதனையிட்டுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாகக் கருத்தறிவித்த மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் வடக்கைத் தொடர்ந்து கிழக்கிலும் மக்களை பதற்றமான சூழ்நிலையொன்றில் தொடர்ந்தும் வைத்திருப்பதற்காக அரசாங்கம் முயற்சித்து வருகின்றது. இதன் ஒரு அங்கமாகவே இராணுவத்தினர் திடீரென பொதுமக்களின் வீடுகளுக்குள் நுழைந்து தேடுதல்களை நடத்துவதோடு, விசாரணை என்ற பெயரில் நீண்ட நேரமாக தடுத்து வைத்திருக்கும் சம்பவங்கள் அண்மைய தினங்களில் அதிகரித்துள்ளது என்று தெரிவித்துள்ளார்.

வடக்கில் இராணுவத்தை நிலைநிறுத்தியிருப்பதனை ஜெனிவா உட்பட சர்வதேசத்தில் நியாயப்படுத்துவதற்காக அண்மையில் புலிகள் மீண்டும் உயிர் பெறுவதாக அரசாங்கம் கூறியது. அதனை அடிப்படையாக வைத்து வன்னியிலும் யாழ்ப்பாணத்திலும் சுற்றிவளைப்புக்களையும் திடீர் தேடுதல்களையும் நடாத்தியது.

அவ்வாறான செயற்பாடுகளின் தொடர்ச்சியாக விடுதலைப் புலிகளை மீள இணைக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டு வரும் இருவரை தேடுவதாக அறிவித்தல் விடுக்கும் துண்டுப் பிரசுரங்கள் கிழக்கு மாகாணத்தில் விநியோகம் செய்யப்பட்டது. அதன் பின்னர் தமிழ் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் திடீரென பொதுமக்களின் வீடுகளுக்குள் புகும் இராணுவத்தினர் அவர்களை வெளியே நிற்குமாறு கூறி தேடுதல்களில் ஈடுபடுகின்றனர் என்றும் தெரிவித்துள்ளார்.

## சி.வியின் கத்தியால்...

நான் தற்பெருமைக்காகச் சொல்லவில்லை.விக்னேஸ்வரன் ஒரு சட்ட மேதை. சட்டமா அதிபர் என்று கூறினார்கள். வட மாகாணசபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சியமைத்தால் அது கிழக்கு மாகாணசபைக்கு உதவி செய்யும் நிலை உருவாகும் என நான் கடந்த காலத்தில் கூறியிருந்தேன். ஆனால் நாங்கள் எதிர்பார்த்ததற்கு எதிராகவே நடைபெறுகின்றது. மூன்றில் இரண்டு தாருங்கள் சாதித்துக் காட்டுவோம் என வட பகுதி மக்களிடம் கேட்டார்கள். ஆனால் அவர்கள் மூன்றில் இரண்டை விட அதிகமாக வாக்களித்தனர். தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் பல தடவைகள், பல விடயங்களில் தமிழ் மக்களை முட்டாளாக்கியுள்ளனர். இதனை யாரும் மறுக்கமுடியாது. இது பலருக்குக் கசப்பாக இருந்தாலும் இதுதான் உண்மை.

ஜி.ஜி.பொன்னம்பலம் காங்கிரஸில் இருந்தபோது அவர் மலையக மக்களுக்கு எதிராக வாக்களித்தார் என்பதற்காக தந்தை செல்வா வந்தார். தந்தை செல்வா சமஸ்டி அடிப்படையில் தீர்வைப் பெற்றுத்தருவதாக வாக்குறுதியளித்து முதலாவது தேர்தலில் தோல்வி கண்டு அடுத்த தேர்தலில் 1968ஆம் ஆண்டு வெற்றிபெற்றதுடன் நீலன் திருச்செல்வம் அமைச்சராக வரவேண்டும் என்பதற்காக ஆதரவினை வழங்கிவிட்டு 1970 ஆம் ஆண்டுவரை எதுவித சத்தமும் இன்றி இருந்தமையை யாரும் மறுக்கமுடியாது.

1970ஆம் ஆண்டு இவர்களின் பெரும் சிங்கங்கள் எல்லாம் தோல்வி கண்டவுடன் 1971,72ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் சிங்கக்கொடியை எரிக்கவேண்டும் என்று இளைஞர்களை ஊக்கவித்து சிங்க கொடியை எரிக்க வைத்தார்கள்.

1965 தொடக்கம் 1970ஆம் ஆண்டு வரை நடைபெற்ற சுதந்திர தின நிகழ்வுகளில் அவர்களும் கலந்துகொண்டிருந்தனர். அப்போது எங்கும் சிங்கக்கொடி இறக்கப்படவும் இல்லை. எரிக்கப்படவும் இல்லை.

இவ்வாறு இருக்க சமஸ்டியும் இல்லை, தனிநாட்டுப் பிரகடனம் வட்டுக்கோட்டைத் தீர்மானமும் இல்லை. 1988ஆம் ஆண்டு மாகாணசபை தேர்தல் வந்தது. அதனை பொறுப்பேற்கவில்லை. . அல்லது அதனை பொறுப்பேற்றவர்களையும் விடவில்லை.

2007ஆம் ஆண்டு வடகிழக்கு மாகாணம் பிரிக்கப்பட்டு கிழக்கு மாகாணசபை தேர்தல் வந்தபோது அதிகாரங்கள் இல்லை. நாங்கள் வரமாட்டோம் என்று கூறினார்கள். அதனை நாங்கள் பொறுப்பேற்று எங்களால் முடிந்தவற்றை செய்துகொண்டிருந்தோம் என்று தெரிவித்துள்ளார்.

## மாட்டிறைச்சித் தடை

கிண்ணியா, மூதூர், பட்டணமும் சூழலும்,

மொரவெவ, கோமரங்கடவெல, பதவிஸ்ரீபுர, சேருவில, ஈச்சிலம்பற்று, கந்தளாய் ஆகிய பிரதேசச் செயலாளர் பிரிவுகளில் இருந்து கால்நடைகளுக்கு ஏற்பட்ட நோயான கால்வாய் தொற்று நோய் தொடர்பாக எவ்வித அறிக்கைகளும் வழங்கப்படவில்லை.

அதனையடுத்தே இப் பிரதேசங்களில் கால்நடைகளை அறுப்பதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டுள்ளது.

## 8000 விலை போன...

பெண்ணையும் காவல்துறை கைது செய்துள்ளதுடன் இவ்விற்பனைக்கு முகவராகச் செயல்பட்ட மற்றொரு பெண்ணையும் காவல்துறை கைது செய்துள்ளது..

குடும்ப வறுமை காரணமாக வெளிநாட்டுக்குப் பயணம் செய்யத் திட்டமிட்டிருந்த குழந்தையின் தாய்க்கு ஏற்பட்ட பணத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு வேறு வழியிருக்கவில்லை. அதனால் குழந்தைகளற்ற தம்பதியர் ஒருவருக்குத் தனது குழந்தையைக் குறிப்பிட்ட தொகைக்கு விற்பதற்கு அத் தாய் சம்மதித்ததுடன் அதனை நிறைவேற்றியும் உள்ளார்.

எனினும் இத்தகவல் காவல்துறைக்குக் கசிந்ததுடன் கல்குடா காவல்துறையினர் சம்பந்தப்பட்ட அனைவரையும் கைது செய்துள்ளதுடன் குழந்தையை மீட்டு உரிய தாயிடம் மீளச் சேர்த்துள்ளனர்.

இந்த விற்பனைக்கான திட்டத்தை வெளிநாட்டு முகவர் கம்பனியொன்றே மேற்கொண்டுள்ளது என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

விசாரணைகள் தொடர்கின்றன.

## 25 வருடங்களின்....

கையளித்துள்ளார். அதற்கேற்ற வகையில் இராணுவ முகாமின் எல்லைகளைச் சற்று உட்புறமாக நகர்த்தியுள்ள இராணுவத்தினர் ஆலய வழிபாட்டுக்கு எவ்விதத்திலும் இடையூறளிக்கமாட்டோம் என்றும் உறுதியளித்துள்ளனர்.

சுமார் முப்பது ஆண்டுகளாக இராணுவ வேலிக்குள் அடைபட்டிருந்த இக்கோவில் இந்திய இராணுவ ஆக்கிரமிப்புக் காலத்தில் சில காலங்கள் மக்களிடம் கையிளிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. அதன் பின்னர் தொடர்ந்தும் இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் இருந்து வந்த இக்கோவில் இராணுவத்தினரால் ஓரளவிற்கேனும் பராமரிக்கப்பட்டிருப்பதாக கோவிலைக் கையேற்ற மூதூர் இந்துக் குருமார் சங்கத் தலைவர் சிவஸ்ரீ பாஸ்கரன் குருக்கள் தெரிவித்தார்.

கோவில் கையளிக்கப்பட்டதைத் தொடர்ந்து எதிர்வரும் செவ்வாய்க்கிழமை மக்களின் பெரும் ஆதரவுடனும், இராணுவத்தினரின் ஒத்துழைப்புடனும் சிவஸ்ரீ பாஸ்கரன் குருக்கள் தலைமையில் பிராயச்சித்த அபிசேகம் வெகு சிறப்பாக நடந்தேறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## கல்லூரிக்கே.....

அதனை ஏற்றுக்கொண்ட மாகாணக் காணி ஆணையாளர் அக் காணித்துண்டை பாடசாலையின் தேவைக்காக விடுவிப்பதாக பட்டணமும் சூழலும் பிரதேசச் செயலாளருக்கு 2006ல் அறியத்தந்துள்ளார்.

எனினும் அதன்பின்னர் உரிய அதிகாரிகளினதும் பாடசாலையினதும் அசண்டையீனம் காரணமாக அக்காணி வரையறுக்கப்படாதிருந்த நிலையில் 2011ம் ஆண்டில் திடீரென கம்பி வேலியின் மூலம் அறிக்கையிடப்பட்டு யாராலும் உட்புக முடியாதவாறு தடுக்கப்பட்டுள்ளது.

அதனைக் கருத்திற்கொண்டுள்ள நகரசபை உறுப்பினர் கடிதமொன்றை மாவட்டச் செயலருக்கு வரைந்துள்ளார். அக்கடிதத்தில் பாடசாலைத் தேவைக்கு வழங்கப்படாது யாரும் உட்புகமுடியாத பகுதியாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ள அக்காணி பாடசாலையினால் பயன்படுத்தப்படாமல் விரயமாவதால் அதனைத் தவிர்த்து அக்காணியை புனித மரியாள் கல்லூரிக்கு வழங்க ஆவண செய்யும் படி கடிதம் மூலம் கோரியுள்ளார்.

## தம்பலகாமம் பிரதேச....

பணிப்பாளர் திரு.கு.திலகரெத்தினம், கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு.சீ.மதியழகன், வைத்திய அதிகாரி திரு.வே.விக்னராஜா, திருகோணமலை ஆரம்பப்பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு.சு.கணேசலிங்கம் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

இதனைத் தொடர்ந்து தம்பலகாமம் பிரதேசச் செயலாளர் திருமதி.ஜெயகௌரி ஸ்ரீபதியை கௌரவிக்கும் நிகழ்ச்சி இடம் பெற்றது. பட்டிமேட்டைச் சேர்ந்த மூதாட்டி திருமதி சுப்ரமணியம் திலகவதி அவர்கள் பொன்னாடை போர்க்க, தி.சாரதா வித்தியாலய அதிபர் திருமதி .யோ.உதயகுமார் அவர்கள் மாலை அணிவிக்க, கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர்.திரு.சு.பரமேஸ்வரன் அவர்கள் வாழ்த்து மடலை பிரதேசச் செயலருக்கு வழங்கினார்.

முன்னாள் அதிபர் திரு.புவனேந்திரன் அவர்கள் வாழ்த்துப் பாவைப் பாடினார்.

திருமதி. ஜெயகௌரி ஸ்ரீபதி அவர்களின் ஏற்புரையுரையை அடுத்து பட்டிமேடு கிராம அபிவிருத்திச் சங்க உபதலைவர் திரு.சு.பாஸ்கரலிங்கம் அவர்களின் நன்றியுரையுடன் முடிவுற்றன.

## வாராந்த வட்டிக்குத்....

நிலைக்குத்தள்ளும் வகையில் செயற்படும் நுண்நிதிக் கடன் நிறுவனங்களின் மீதான கட்டுப்பாடுகளை ஏற்படுத்த வேண்டிய தேவை எழுந்துள்ள நிலையில் இக்கட்டுப்பாடுகள் மாவட்டச் செயலகத்தால் அறிவிக்கப் பட்டுள்ளன.

நுண் நிதிக் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலையில் தற்கொலைகளும், சில சமூகச் சீர்கேடுகளும் நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உருவாக்கப்பட்டுள்ள புதிய நடைமுறையின் அடிப்படையில் அரசசார்பற்ற நிறுவனங்கள் வட்டி வசூலிக்கும் கடனை வழங்குவது தடைசெய்யப் பட்டுள்ளது. வட்டி வீதமானது ஆண்டுக்கு 12வீதத்தை விஞ்சாதவாறு இருப்பதும், மத்திய வங்கியின் ஒழுங்கு விதிகளும் பின்பற்றப்பட வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் செயற்படும் அனைத்து நிறுவனங்களும் மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்டவையாக இருக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மட்டக்களப்பில் 110ற்கும் மேற்பட்ட சிறுகடன் நிறுவனங்களும், 30ற்கும் மேற்பட்ட குத்தகை நிறுவனங்களும் இயங்குகின்றன.

இக் கூட்டத்தில் முன்னாள் முதலமைச்சரின் இணைப்பாளர் திரு.தேவராஜாவினால் கடன் வசூலிக்கச் சென்று பெண்களிடம் தவறாக நடந்து கொள்பவர்களின் பெயர் விபரங்கள் பகிரங்கமாக வாசிக்கப்பட்டன. அவ் விபரங்கள் கிடைத்தவுடன் அவை பிரசுரிக்கப்படும்.

## 19814 ஆசிரியர்....

தமிழ் ஆசிரிய நியமனங்களைப் பாதிக்கப்போகின்றது என்ற சந்தேகம் ஆசிரியர்களிடையே பரவியிருந்தது. அதனடிப்படையில் ஆசிரியத் தொழிற்சங்கம் ஒன்று தகவல்களை ஆசிரியர்கள் வழங்க வேண்டாம் எனக் கோரியிருந்ததாகவும் தெரியவந்துள்ளது.

எனினும் இருபத்தோராயிரத்து நூற்று அறுபத்தியேழு ஆசிரியர்களில் இன்னமும் ஆயிரத்து முந்நூற்று ஐம்பத்து மூன்று ஆசிரியர்களே தகவல்களை வழங்காமலிருப்பதாக கல்வி அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## மீண்டும் ஆஸி நோக்கி....

ரூபாய் கொடுத்ததாகவும் கூறியுள்ளனர்.

இதையடுத்து, அவர்கள் அந்தமானில் இருந்து இலங்கைக்கு விமானம் மூலமாக திருப்பி அனுப்பி வைக்கப்பட்டனர்.

இதேவேளை இலங்கையில் இருந்து படகுகள் மூலம் அவுஸ்திரேலியா சென்ற இரண்டு இலங்கையர்களுக்கு அந்த நாட்டில் பாதுகாப்பு அல்லது இணைப்பு வீசா வழங்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 12 மாதங்களுக்கு செல்லுபடியாகும் வகையில் இந்த வீசா அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு பிரதேசத்தைச் சேர்ந்த ஜீவா பாலசுந்தரம் மற்றும் சிவா ரவிச்சந்திரன் ஆகிய இரண்டு பேருமே இந்த வீசாவை பெற்றுள்ளனர். இவர்கள் இருவரும் கடந்த 2012ஆம் ஆண்டு மட்டக்களப்பில் இருந்து படகு மூலம் அவுஸ்திரேலியாவின் கொக்கோஸ் தீவுக்கு சென்றுள்ளனர்.

இலங்கையில் அவர்களுக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் காணப்பட்ட நிலையில், தங்களுக்கு அவுஸ்திரேலியாவுக்கு அகதிகளாக செல்ல நேர்ந்ததாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் இருவரும் தென்கிழக்கு குயின்ஸ்லாந்தில் குடியேற்றப்படவுள்ளதாக கூறப்படுகிறது.

## கிழக்கின் தமிழ்த்....

வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

இவ்வருடம் அப்போட்டிகள் பட்டிருப்பு கல்வி வலத்தில் நடைபெறும் என பட்டிருப்புக் கல்வி வலயப் பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகம் தெரிவித்துள்ளார்.

அதற்கான திட்டங்களைத் தீடிக்கொள்வதற்கான கூட்டம் எதிர்வரும் 11ம் திகதி பட்டிருப்பு கல்விவலயச் கேட்போர் கூடத்தில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.


## ஜெனீவாத் தீர்மானம்....

அந்தக் குற்றச்சாட்டுகள் தவறு என நிரூபிப்பதே சாலச் சிறந்ததாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஜெனீவாவில் வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளும் கொண்டுவரப்பட்டுள்ள தீர்மானமும் நாட்டுக்கு எதிரானது அல்ல, அவை இறுதிகட்ட போரின்போது குற்றமிழைத்ததாகக் கூறப்படும் தனிநபர்களுக்கு எதிரானவையே என அவர் கூறினார்.

நாட்டிலுள்ள அனைவரையும் குற்றவாளிகளாக ஜெனீவா தீர்மானம் காணவில்லை என்றும், போர் நிறுத்த காலமான 22.2.2002 முதல் போர் முடிவடைந்த 19.5.2009 வரையிலான பகுதியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள்தான் இதற்கான பதிலைச் சொல்ல வேண்டும் எனவும் ஹஸன் அலி கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# முட்டாள்கள் தின தோற்றம்

உலகம் முழுவதும் ஏப்ரல் 1 சர்வதேச முட்டாள்கள் தினமாக அனுசரிக்கப்படுகிறது அன்றைய தினத்தில் ஒருவர் மற்றொருவரை ஏமாற்றுவதும், மற்றவர்களைக் கிண்டலடிப்பதும், மற்றவர்களை முட்டாள்களாக ஆக்க நினைப்பதும், நடக்காத ஒன்றை நடந்ததாகச் சொல்வதும், மற்றவர்களை ஏமாற்றி அதிர்ச்சிக்குள்ளாக்குவதும், நக்கலடிப்பதும், பரிகாசம்செய்வதும், கேலி செய்வதும் வாடிக்கையாக உலகம் முழுவதும் நடந்தேறிக்கொண்டிருக்கிறது.



முட்டாள்கள் தினம் உருவானதற்கான பல கட்டுக்கதைகள் சொல்லப்படுவதுண்டு அவற்றில் சில:

ரோமர்களின் மூடநம்பிக்கையின்படி புளுாட்டோ என்ற கடவுள் பிராஸர்பினா என்ற யுவதியைக் கீழ் உலகிற்கு கடத்திச் சென்றதாகவும், அவள் அழுது தன் தாயை உதவிக்கு அழைத்தாகவும், அவள் தாயோ அவளின் அழுகை சப்தத்தைக் கேட்டு இல்லாத இடத்தில் தேடியதாகவும் இந்தத் தவறான தேடுதலே முட்டாள்கள் தினம் உருவாகக் காரணம் எனவும் சொல்லப்படுகிறது.

பைபிளின்படி நோவா (நூஹ் (அலை)) தான் முதல் முட்டாள் (நவூதுபில்லாஹ்) எனச்சொல்லப்படுகிறது. காரணம் வெள்ளப்பிரளயம் ஏற்பட்டு பூமி காய்வதற்கு முன்னால் நோவா ஒரு புறாவை அனுப்பி காய்ந்த, வறண்ட நிலத்தை தேடச் சொல்கிறார். ஈரமான பூமியில் காய்ந்த நிலம் எங்கே இருக்கும்? அதனால் தான் அவர் ஒரு முட்டாள் என்றும் அதை மையமாக வைத்தே முட்டாள்கள் தினம் அனுசரிக்கப்படுகிறது எனவும் சொல்லப்படுகிறது.

13 ஆம் நூற்றாண்டில் பிரிட்டிஷில் வாழ்ந்த ஜான் என்ற மன்னர் எங்கே படையெடுத்துச் சென்றாலும் அந்தப்பகுதி "பொதுச்சொத்தாக" ஆக்கப்பட்டுவிடும். கௌதம் என்ற பகுதியில் நாட்டிங்கம்ஷைர் என்ற ஊருக்குள் அவர் ப்டையெடுத்து வரும்போது அவ்வூர்வாசிகள் தங்களின் ஊரை மன்னர் அபகரித்துவிடக்கூடாது என்பதற்காக அவர்களை முட்டாள்களாக ஆக்க நினைத்து தண்ணீரில் நீந்துகின்ற மீனைப்பிடித்து தரையில் விடுவதும் பிறகு மீண்டும் நீரில் விடுவதுமான பல முட்டாள்தனமான காரியங்களைச் செய்கின்றனர் இதைக்கண்ட மன்னர் அவர்களைத் தண்டிக்கிறார் இது தான் ஏப்ரல் 1 அன்று முட்டாள்கள் தினம் உருவாகக் காரணம் எனச்சொல்லப்படுகிறது.

# சில பிரார்த்தனைகள்



குர் ஆனில் இருந்து எடுக்கப்பட்ட சில பிரார்த்தனைகள்

- எங்களுக்கு இவ்வுலகில் நற்பாக்கியங்களைத் தந்தருள்வாயாக! மறுமையிலும் நற்பாக்கியங் களைத் தந்தருள் வாயாக! இன்னும் எங்களை (நரக) நெருப்பின் வேதனையி லிருந்தும் காத்தருள்வாயாக! 2:201
- நீ எங்களுக்கு நேர் வழியைக் காட்டியபின் எங்கள் இதயங்களை (அதிலிருந்து) தடம்புறளச் செய்து விடாதே! இன்னும் நீ உன் புறத்திலிருந்து எங்களுக்கு (ரஹ்மத் என்னும்) அருளை அளிப்பாயாக! நிச்சயமாக நீயே பெருங் கொடையாளனாவாய்! 3:8
- உன்னிடமிருந்து எனக்காக ஒரு பரிசுத்தமான சந்ததியைக் கொடுத்தருள்வாயாக! நிச்சயமாக நீ பிரார்த்தனையைச் செவிமடுத்தருள்வோனாக இருக்கின்றாய். 3:38
- நாங்கள் (இவ் வேதத்தின் மீது) நம்பிக்கை கொண்டோம். எனவே, (இவ்வேதம் சத்தியமானது என்று,) சாட்சி சொல்வோருடன் எங்களையும் நீ பதிவு செய்து கொள்வாயாக! 5:83




# பிள்ளைகளைத் தனியாக தூங்கவிட வேண்டிய காலம்

பிறந்த நிமிடம் முதலே தாயின் வாசனையையும் தொடுதலையும் விரும்புகிறது குழந்தை. அம்மாவுடனே தூங்க விரும்புகிறது. அம்மா தன் அருகில் இல்லை என்பதை ஒரு சின்ன அசைவில் இருந்துகூட அது கண்டு கொண்டுவிடுகிறது. அடுத்த கணம் அது அழுது தன் கண்டுபிடிப்பை உறுதி செய்து கொள்கிறது. அம்மாவின் குரலை கேட்டபிறகே அழுகையை நிறுத்துகிறது.

தொடக்கம் முதலே இப்படி அம்மாவுடன் தூங்க விரும்பும் குழந்தைகள் 16, 17 வயது வரையில் இதைத்தொடர விரும்பும்போதுதான் பிரச்சினையாகிறது. இப்படிப்பட்ட "வளர்ந்த பிள்ளைகள்" எல்லா விஷயத்திலும் அம்மா பிள்ளையாகவே இருந்து இளம்வயதுக்கே உரிய தங்கள் முடிவெடுக்கும் ஆற்றலை இழந்து விடுவார்கள்.சில குழந்தைகள் தாய்ப்பால் குடித்து வயிறு நிரம்பியதும்



தூங்கி விடுவார்கள். ஆனால் அப்படி தூங்கிய ஐந்து நிமிடத்திற்கெல்லாம் ஒரு விரலை எடுத்து வாயில் வைத்து சப்பிக் கொண்டிருப்பார்கள். இது அனிச்சையாக நடந்தாலும், உண்மையில் தாயிடம் பால் குடித்துக் கொண்டிருப்பதாக அவர்கள் நம்பும் அந்த நம்பிக்கைதான் இப்படி விரலை சப்பச் செய்கிறது. இது அவர்களை தாயின் பாதுகாப்பு வளையத்திற்குள் நிம்மதியாக இருப்பதை உணர வைக்கிறது. இதுவே அவர்களின் மனவளர்ச்சிக்கும் அறிவு விருத்திக்கும் ஏதுவாகிறது.

சின்னக் குழந்தைகளை பெற்றோர் தங்கள் இருவருக்கும் இடையே படுக்க வைப்பது நல்லது. பல பெற்றோர்கள் இருவருமே வேலைக்கு போகிறவர்களாக இருப்பார்கள். இவர்களின் பிள்ளைகள் பகல் நேரங்களில் தாத்தா பாட்டியின் பராமரிப்பிலோ, அல்லது வீட்டோடு இருக்கும் வேலைக்காரிகளின் நேரடிப்பார்வையிலோதான் இருப்பார்கள். அதேநேரம் இரவு முழுக்க பெற்றோரின் அரவணைப்புக்குள் இருக்கும் வாய்ப்பு கிடைப்பதால் தங்கள் தனிமை ஈடு ...

தொடரும்...

# உழுந்து பாயாசம்


பாயசத்தில் சேமியா பாயசம், ரவை பாயசம், அரிசி பாயசம்னு செஞ்சுருப்பீங்க, .உளுந்து பாயசம் இது வழக்கமான பாயசத்தை விட வித்தியாசமான சுவையுடன் இருக்கும். உளுந்து உடம்புக்கு வலுவானதும்கூட. அதோடு இதுல புரோட்டீன் சத்தும் நிறைய இருக்கு.

### தேவையான பொருட்கள்

உருட்டு உளுந்து - 100 கிராம், பச்சரிசி - 1 மே.கரண்டி, தேங்காய் பால் - 1 லிட்டர், சர்க்கரை - 350 கிராம், உப்பு - 1 தே.கரண்டி, ஏலக்காய் தூள் - சிறிதளவு, முந்திரிப் பருப்பு - 10

### செய்முறை

உளுந்தையும், அரிசியையும் 2 மணி நேரம் ஊறவைக்கவும்.



பின்பு சிறிதளவு தண்ணீர் விட்டு கெட்டியாக அரைத்து வைத்துக்கொள்ளவும்.

பின்பு அதில் உப்பு, தேங்காய் பால் சேர்க்கவும்.

அடுப்பில் பாத்திரம் வைத்து அதில் அரைத்த உளுந்து, உப்பு, தேங்காய் பால் கலவையை ஊற்றவும்.

கெட்டியாக இருக்கும் அந்த கலவையில் 300 மில்லி தண்ணீர் ஊற்றி நன்கு கலக்கி 20 நிமிடம் அடுப்பில் வைக்கவும்.

அடிபிடிக்காதவாறு கலவையை அடிக்கடி கிண்டி விடவும்.

சிறிது நேரம் கழித்து கெட்டியாகி உளுந்து வாசம் வீசும்.

இப்போது சர்க்கரையை சேர்த்து இறக்கவும்.

முந்திரிப் பருப்பை துறுவி இறக்கி வைத்த பாயசத்தில் சேர்க்கவும்.

குறிப்பு: பாயசம் கெட்டியாக இருப்பதை விரும்பாதவர்கள் நிறைய தண்ணீர் சேர்த்துக்கொள்ளலாம். இனிப்பும் போதாது என்றாலும் சேர்த்துக்கொள்ளலாம்.

# ஆடைத் தெரிவு !!

ஆடை அணிவது முதலில் வசதிக்காக என்பது நினைவிருக்கட்டும். உடை உடலை கவ்விப் பிடிக்கும் அளவுக்கு இறுக்கமாக இருக்க



வேண்டாம். சிலருக்கு ஜீன்ஸ் போட்டால் அழகு, இன்னும் சிலருக்கு ஆடம் பரமான ஆடைகளை அணிவது மிக அழகாக இருக்கும். தத்தமது உடல் வாகுக் கேற்ப ஆடைகளைத் தேர்ந்தெடுப்பதே சிறந்ததாகும்.

# கன்னம், உதடு அழகுடன் மிளிர

கன்னங்கள் அழகாக இருந்தால் முகத்துக்கே தனி அழகுதான். ஒருசிலருக்கு கன்னங்கள் மிகவும் ஒட்டிப்போய் இருக்கும். பெரும்பாலும் நிறைய பெண்களுக்கு கன்னத்தில் பருக்கள் தொல்லை இருக்கும். இவர்கள் இந்த குறிப்புகளை பின்பற்றி வந்தால் நல்ல பலன் கிடைக்கும்!

- முதலில் அதிகாலையில் எழுந்து பழகும் பெண்களுக்கு இயற்கையாக சுத்தமான காற்று கிடைக்கிறது. இதனால் முகத்தில் ஒருவித பொலிவு கிடைக்கும்.
- மிதமான சுடுநீரில் சிறிதளவு உப்பு கலந்து பத்து நிமிடம் வாய்க்குள் வைத்து பின் கொப்பளிப்பது நல்லது. இப்படி தொடர்ந்து செய்வதால் கன்னத்தின் அழகு அதிகரிக்கும்.
- சந்தனம், மஞ்சள் போன்றவற்றை பொடியாக்கி முகத்தில், கை, கால் களில் தடவலாம். வறண்ட சருமத்தைக் கொண்டவர்கள் பால், வெண்ணை கலந்து குழைத்துப் பூச வேண்டும்.
- எண்ணைத் தன்மை கொண்ட சருமத்தை உடையவர்கள் வெள்ளரிக்காய் சாறு, எலுமிச்சம் பழச்சாறு, தக்காளிச்சாறு ஆகியவற்றில் ஏதாவது ஒன்றை கலந்து சிறிதளவு தேனும் சேர்த்து உடலில் பூசலாம்.



- முகப்பரு இருப்பவர்கள் வேப்பமரப் பட்டையை வெண்ணையில் அரைத்துத் தடவுவது நல்லது. மஞ்சளை, கறி வேப்பிலையுடன் சேர்த்து அரைத்து முகப்பரு இருக்கும் இடத்தில் தடவினால் முகப்பரு மற்றும் அதனால் ஏற்பட்ட வடுக்களும் மறையும். அதேபோல் துளசி சாற்றை தினமும் முகத்தில் தேய்த்து அரைமணி நேரம் கழித்துக் கழுவி விட்டால் முகப் பரு தொல்லை ஏற்படாது.
- சில பெண்களுக்கு முகத்தில் மற்றும் தேவையில்லாத இடத்தில் ரோமம் முளைக்கும். சிறிது மஞ்சளைக் குழைத்து முகத்தில் தடவி, ஒரு மணி நேரம் கழித்துக் கழுவி விட வேண்டும். இவ்வாறு ஒரு மாதம் செய்து வந்தால் ரோமம் கொஞ்சம் கொஞ்சமாக மறையும்.



அத்துடன் உதடுகளை முறையாக பராமரித்து வந்தால், மேக்கப் இல்லாமல், லிப்ஸ்டிக் மட்டும் போட்டு கொண்டாலே போதும், முகம் பளிச்சென இருக்கும்.

அதிக குளிரோ, அதிக வெப்பமோ எதுவானாலும் ஒரு சிலருக்கு உதடுகளில் பிளவுகள் ஏற்பட்டு காய்ந்து விடும். மேலும் சிலருக்கு உதடுகள் கறுத்தும், வெடிப்புகளும் ஏற்படும்.

- அவர்கள் பாலேட்டுடன் நெல்லிக்காய் சாறு கலந்து, உதடுகளில் தடவி வந்தால், கறுமை மறைந்து சிவந்த நிறம் உண்டாகும்.
- வெண்ணெயுடன் ஆரஞ்சு பழச்சாறு கலந்து, உதடுகளில் தடவி வந்தால், வெடிப்புகள் சரியாகி உதடுகள் மென்மையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 150வது ஆண்டில் புனித மரியாள் கல்லூரி

இன்றிலிருந்து 150 வருடங்களுக்கு முன் அதாவது, 1964ம் ஆண்டு சித்திரை மாதம் 4ம் திகதி மேன்மை தங்கிய ஆயர் சமேரியாவின் அழைப்பின் பெயரில் திருமதி. மேரி ஆன் விளனகான் திருகோணமலையிலே தமிழ் மொழி மூல, ஆங்கில மொழி மூல இரு பாடசாலைகளை ஆரம்பித்தார். இவ்வாங்கில மொழி மூலப் பாடசாலை புனித மரியாள் கல்லூரியென தற்பொழுது நாமம் தாங்கி நிற்கின்றது.

1964ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட புனித மரியாள் கல்லூரியானது, பல சவால்களுக்கு மத்தியில் முன்னேற்றமடைந்து, 1934ல் சிரேஷ்ட பாடசாலையாகத் தரமுயர்த்தப்பட்டது. 150 வருடங்களைக் கடந்த புனித மரியாள் கல்லூரியானது, பல்லாயிரக்கணக்கான மாணவிகளை நற்பிரஜைகளாகவும், தலைமைத்துவத்திலும், சமயப் பற்றிலும், தொழில் வாய்ப்பிலும் உருவாக்கி மேலோங்கச் செய்தது.

1963ம் ஆண்டு தை மாதம் 2ம் திகதி புனித மரியாள் கல்லூரி தமிழ்ப் பாடசாலை ஆங்கிலப் பாடசாலையுடன் இணைக்கப்பட்டது. 1964ல் சிங்களப் பகுதியும் ஆரம்பிக்கப்பட்டது. 1972ல் அப்போஸ்தலிக்க கார்மேல் சபைக் கன்னியர் திருகோணமலைக்கு வருகை தந்த 50வது வருட பொன் விழா கொண்டாடப்பட்டது.

மாணவர்களின் சிறந்த ஆளுமையையும், ஒழுக்கத்தையும் கூடவே மேலைத்தேய பாண்டுக்கென குழுக்களையும் ஆரம்பித்தது மட்டுமல்லாது, மாணவர்களின் ஆங்கில அறிவை விருத்தி செய்யவும், அவர்கள் ஆற்றலை வெளிப்படுத்தவும் ஆங்கிலப் பேச்சையும் (Elocution) ஆரம்பித்து வைத்த பெருமை அதிபர் அருட்செல்வி. லிட்வீனாவையே சாரும்.

அருட்சகோதரி. தெரேஸ் ராணியின் விடாமுயற்சியினால், பாடசாலையில் அதிகளவான கட்டடங்கள் உருவாகியதுடன், மாணவர்கள் ஆளுமையும், ஆற்றலும், தன்னம்பிக்கையும் உடையவர்களாக சமூகத்திலே திகழ்வதற்கு அரும்பாடுபட்ட சிறந்த அதிபராகவும் இவர் விளங்கினார்.

இவரைத் தொடர்ந்து வந்த அருட்சகோதரிகள் வசந்தமலர், பவளராணி என்போரும் பலவிதமான செயற்றிட்டங்களை முன்னெடுத்து பாடசாலையின் தரத்தை மேம்படுத்த அரும்பாடுபட்டுள்ளனர்.

தற்போது அதிபராகக் கடமையாற்றும் அருட்சகோதரி. நிரோஷா அவர்களும் "மாறி வரும் நவீன தொழிநுட்ப உலகில் பல்லினக் கலாச்சாரத்திற்கேற்ப, சிறந்த தொடர்பாடல் ஊடாக ஆன்மீகம், கௌரவம், தலைமைத்துவம், நடுநிலைமை போன்ற நல்விழுமியங்களுடன் கூடிய பொறுப்பும், ஆளுமையும் ஒருங்கிணைந்த மாணவ சமுதாயத்தை உருவாக்க அர்ப்பணித்தல்" என்னும் குறிக்கோளுக்கிணங்க மாணவர்களை உருவாக்க அரும்பாடுபட்டு செயற்பட்டுக்கொண்டிருக்கின்றார் என்பது தற்போது மாணவர்கள் கல்வியில் மட்டுமல்லாது ஏனைய துறைகளிலும் முன்னிலை வகித்து பரிசில்களைப் பெறுவதிலிருந்து அறியக் கூடியதாக இருக்கின்றது. அருட்சகோதரிகள் சேவை தொடர்ந்து புனித மரியாள் கல்லூரி இன்னும் சிறந்த பாடசாலையாக வளர வாழ்த்துகின்றேன். (திருமதி . உமாசங்கர் ஜெயந்தா - பழைய மாணவி)




# விபத்தில் இளைஞன் பலி



சாய்ந்தமருது பிரதான வீதியில் அஞ்சல் அலுவலகத்திற்கு முன்பாக கடந்த வியாழக்கிழமை பி.ப 4.00 மணியளவில் இடம்பெற்ற கோரவிபத்தில் இளைஞரொருவர் பரிதாபகரமாகப் பலியாகியுள்ளார்.

கல்முனையிலிருந்து மாளிகைக்காடு நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிலும், கல்முனை நோக்கிப் பயணித்த உள்ளூராட்சி மன்றத்திற்கு சொந்தமான திண்மக்கழிவகற்றும் ரக்டர் வாகனமொன்றும் நேருக்குநேர் மோதிக்கொண்டதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஆதம் வாவா வீதி, மாளிகைக்காடு பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயதுடைய அகமட் லெவ்வை மொகமட் யாரிஸ் எனும் இளைஞரே பலியானார். இவர் வைத்தியசாலையில் அனுமதிப்பதற்காக கொண்டு செல்லும்போதே உயிரிழந்துள்ளதாக சம்பவத்தினை நேரில் கண்டவர்களிடமிருந்து அறியக்கிடைத்தது.

இவ்விபத்தில் குறித்த இளைஞன் பயணித்த மோட்டார் சைக்கிள் முற்றாக சேதமடைந்துள்ளதுடன், உயிரிழந்தவரின் சடலம் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் வைத்தியசாலை அதிகாரியொருவர் உறுதிப்படுத்தியிருந்தார்.

(உதயகாந்)

## தற்கொலை முயற்சி

கைத்தொலைபேசியை தொடர்ந்து இயக்கிக் கொண்டிருந்த பாடசாலை மாணவியைத் தாயொருவர் கடிந்து கொண்டதால் அம் மாணவி தற்கொலைக்கு முயன்ற சம்பவம் ஒன்று திருமலை நகரப் பகுதியில் நிகழ்ந்துள்ளது.

ஸ்ரீசண்முகா இந்து மகளிர் கல்லூரியில் கணிதப்பிரிவில் உயர்தரத்தில் கற்கும் மாணவியொருவரே இவ்வாறு தனக்குத் தானே தீ மூட்டிக் கொண்டுள்ளார்.

உயிருக்கு ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள அவர் தொடர்ந்தும் அவசர கண்காணிப்புப் பிரிவில் வைக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## சர்வதேசச் செய்திகள்

### இந்தியாவின் முதலாவது "பீல்ட் மார்ஸல்" லின் வயது நூறு



இந்தியாவின் முதலாவது பீல்ட் மார்ஸல் தனது நூறாவது வயதில் கடந்த 3ம் திகதி நினைவு கூறப்பட்டுள்ளார்.

பாகிஸ்தானுடன் யுத்தம் செய்து வங்காள தேசம் என்னும் புதிய நாட்டை உருவாக்கிய இந்தியப்படைக்கும் தலைமை தாங்கிய ஜெனரல் சாம் மனேக்ஸா இந்தியாவின் முதலாவது பீல்ட் மார்ஸசல் என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும் அவரது மரணத்தின் போது இந்திய பாதுகாப்பு அமைச்சரோ அல்லது முப்படைத் தளபதிகளோ அங்கு பிரசன்னமாகாதிருந்ததுடன் அவருக்கான கொடுப்பனவுகளை முழுமையாகப் பெற்றுக்கொள்ள அவர் போராட வேண்டியிருந்ததாகவும் இந்தியத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

### விக்கிலீக்ஸ் எனப் பெயரிடத் தடை

பிறந்த தனது குழந்தைக்கு "விக்கிலீக்ஸ்" எனப் பெயரிட பெற்றோர் எடுத்த முயற்சியை ஜேர்மனிய அரசு தடுத்துள்ளது.

குழந்தையின் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு இந்தப் பெயரை வைக்க முடியாது என பெற்றோருக்கு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது

படப்பிடிப்பாளரும், ஊடகவியலாளருமான தகப்பனார் ஈராக்கில் இருந்து தப்பியோடித் தற்போது ஜெர்மனியில் வசித்து வருகின்றார்.

"விக்கிலீக்ஸ்" என்பது என்னைப் பொறுத்தவரையில் ஒரு பெயர் மட்டும் அல்ல. அதற்கும் அப்பால் அதற்கு அர்த்தம் உள்ளது. விக்கிலிக்ஸ் இந்த உலகத்தையே மாற்றியது என அக் குழந்தையின் தகப்பன் தெரிவித்துள்ளார்..

### மாயமான மலேசிய விமானம் கடத்தப்பட்டுள்ளதா?




மாயமான மலேசிய விமானத்தில் இருந்த ஒரு பயணி தான் ஒளித்து வைத்திருந்த ஐபோனில் இருந்து விமானம் இருக்கும் இடத்தை படம் பிடித்து தனது அமெரிக்க நண்பருக்கு குறுஞ் செய்தி அனுப்பியுள்ளதாக வந்த செய்தியை அடுத்து, உலகம் முழுவதும் பெரும் அதிர்ச்சி ஏற்பட்டுள்ளது.

மாயமான மலேசிய விமானத்தை அமெரிக்க ராணுவம் கடத்தி, டியாகோ கார்சியா என்ற தீவில் ஒளித்து வைத்திருப்பதாக கடந்த இரண்டு நாட்களாக செய்திகள் கசிந்து வந்தன.

இந்தத் தீவு இந்திய பெருங்கடலில் உள்ளது. அமெரிக்காவுக்கு சொந்தமான இந்த தீவில் அமெரிக்க போர்விமானங்கள் நிறுத்தப்பட்டுள்ளது.

பிலிப் வூட் என்பவர் அனுப்பிய எஸ்.எம்.எஸ் செய்தியில் "நாங்கள் அனைவரும் ஒரு ராணுவ அமைப்பால் கடத்தப்பட்டு, சிறை வைக்கப்பட்டுள்ளதாகவும், நான் எனது ஐபோனை மர்ம உறுப்பில் மறைத்து கொண்டதாகவும், மற்றவர்களின் போன்கள் எல்லாம் கைப்பற்றப்பட்டதாகவும், கூறியுள்ள அவர், மேலும் தன்னை ஒரு தனிமைச்சிறையில் வைத்துள்ளதாகவும், அந்த இடம் இருட்டாக உள்ளதாகவும் கூறியுள்ளார். மேலும் தனது உடலில் போதைபொருள் செலுத்தப்பட்டுள்ளதால் தன்னால் அதிக அளவு சிந்திக்க முடியவில்லை என்றும் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரிக்கே காணியை வழங்குங்கள்

## மாவட்டச் செயலரிடம் நகரசபை உறுப்பினர் நந்தகுமார் கோரிக்கை



புனித மரியாள் கல்லூரிக்கென ஒதுக்கப்பட்ட காணியை கல்லூரிக்கே வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என திருமலை மாவட்டச் செயலாளரிடம் திருமலை நகரசபை அங்கத்தவர் திரு.சி. நந்தகுமார் கோரிக்கை விடுத்துள்ளார்.

புனித மரியாள் கல்லூரியின் இடப்புறமாக, நெல்சன் படமாளிக்ககு முன்புறமாக அமைந்துள்ள வெற்றுக் காணியை அப்பாடசாலையின் விளையாட்டுத் திடலாகப் பயன்படுத்த அனுமதிக்குமாறு பாடசாலை நிர்வாகம் வடக்கு கிழக்கு மாகாணக் காணி ஆணையாளரிடம் 2006ம் ஆண்டு கோரியிருந்தது. 13



### மலைமுரசின் விளம்பரக் கட்டணம்

| அளவு | முன்புறம் | பின்புறம் |
|---|---|---|
| A 7 | 650.00 | 500.00 |
| A 6 | 1175.00 | 975.00 |
| A 5 | 2200.00 | 1900.00 |
| A 4 | 4150.00 | 3800.00 |
| A 3 | 7950.00 | 6950.00 |
| அளவு | பக்கம் 02 | பக்கம் 15 |
| A 7 | 350.00 | 200.00 |
| A 6 | 575.00 | 475.00 |
| A 5 | 1100.00 | 900.00 |
| A 4 | 1950.00 | 1500.00 |
| A 3 | 3450.00 | 2950.00 |

ஏனைய பக்கங்கள் - ரூ.18 சதுர அங்குலம்


# மாட்டிறைச்சித் தடை நீங்கியது



மாட்டிறைச்சி வெட்டுவதற்கும் விற்பதற்கும் விதிக்கப்பட்டிருந்த தடை திருகோணமலை மாவட்டத்தில் ஒன்பது பிரதேசச் செயலாளர் பிரிவுகளில் நீக்கப்பட்டுள்ளதாக மாவட்டக் கால்நடை வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.

வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டிருந்த தடையைத் தொடர்ந்து..... 13

# 19,814 ஆசிரியர் விபரங்கள் திரட்டப்பட்டுள்ளன

ஆசிரியர்களுக்கான தகவல் தளத்தை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் தற்போதுவரை பத்தொன்பதாயிரத்து எண்ணூற்றுப் பதினான்கு ஆசிரியர்களின் விபரங்களைத் திரட்டியுள்ளது.

ஆசிரியர்களின் தகவல் திரட்டப்படுவதால் இனிவரும் காலங்களில் தமிழ் ஆசிரியர்களுக்கு நியமனங்கள் வழங்கப்படப் போவதில்லை என்ற செய்தி வெளியாகியிருந்தது.

கிழக்கு மாகாண நியமனங்களில் இன விகிதாசாரத்தை அடிப்படையாகக் கொண்டு நியமனங்கள் வழங்கப்பட்டுவருவதால் இவ்வாறு ஆசிரியர்களின் தகவல்கள் திரட்டப்படுவது ......... 13

# கிழக்கின் தமிழ்த்தின விழா இம்முறை பட்டிருப்பில்

கிழக்கு மாகணத்தமிழத் தினப் போட்டிகள் இம்முறை பட்டிருப்பு கல்வி வலயத்தில் நடாதத்தப்படவுள்ளது.

மே மாதம் 10ம் மற்றும் 11ம் திகதிகளில் இப் போட்டிகளை அங்கு நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்தவருடம் தமிழ்த்தினப் போட்டிகளை தமிழத்தின விழாவாகக் கொண்டாடிய பெருமை மூதூர் கல்வி வலயத்தைச் சேர்ந்திருந்தது. அத்துடன் அப் போட்டிகள் திடீரென மேலும் ஒரு நாள் பின்தள்ளப்பட்ட போது சேனையூர் மக்களின் பெரும் ஆதரவுடன் அங்கு வருகை தந்தவர்கள் அனைவருக்கும் எவ்வித குறைபாடுகளும் இன்றிச் சேவைகள்....... 13

# மீண்டும் ஆஸி நோக்கிப் பயணம்

அவுஸ்திரேலியாவுக்கு செல்ல முயன்ற 26 இலங்கைத் தமிழர்கள் அந்தமானுக்கு அருகில் வைத்து இந்திய கடலோர காவற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் நடுக்கடலில் கடலோரக் காவற்படையால் தடுத்து நிறுத்தப்பட்டனர். அவர்கள் மீண்டும் இலங்கைக்கே திருப்பி அனுப்பப்பட்டனர்.

இலங்கையில் இருந்து சட்டவிரோதமாக படகில் அவுஸ்திரேலியா தப்பிச் செல்ல முயன்ற 26 தமிழர்களிடமும் அந்தமான் பொலிஸார் விசாரணை நடத்தினர்.

அவர்கள் அவுஸ்திரேலியாவுக்கு வேலை தேடிச் செல்வதாகவும், இதற்காக படகோட்டிக்கு பல லட்சம் 13



# ஜெனீவாத் தீர்மானம் குற்றமிழைத்தவருக்கே எதிரானது நாட்டுக்கு எதிரானதல்ல - மு.கா



ஜெனீவா தீர்மானத்தை இலங்கை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென ஆளும் கூட்டணியின் ஒரு அங்கமான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கோரியுள்ளது.

அந்தத் தீர்மானத்திக்கு முகம்கொடுத்து குற்றச்சாட்டுக்கு உள்ளானவர்களை நிரபராதிகள் என்று நிரூபிப்பதால் மட்டுமே அபாண்டமான குற்றஞ்சாட்டுபவர்களை மண்ணைக் கவ்வவைக்க முடியும் என அக்கட்சியின் பொதுச் செயலர் ஹஸன் அலி பிபிசி தமிழோசையிடம் தெரிவித்தார். அவ்வாறு செய்யாமல், விசாரணைக்கு ஒத்துழைக்க மாட்டோம் எனக் கூறுவது குற்றம் சாட்டுபவர்கள் சொல்வதெல்லாம் உண்மைதான் எனும் தோற்றப்பாட்டை ஏற்படுத்தக் கூடும் எனவும் ஹஸன் அலி கூறுகிறார்.

வக்கப்படும் குற்றச்சாட்டுகளை தைரியமாக எதிர்கொண்டு......... 13

# தம்பலகாமம் பிரதேசச் செயலருக்கு கௌரவிப்பு



பிரதேசச் செயலாளர் ஜெ.ஸ்ரீபதி

தம்பலகாமம் பட்டிமேடு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைமையில் தம்பலகாமம் பிரதேசச் செயலாளரைக் கௌரவிக்கும் விழா, கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு.சுப்ரமணியம் பரமேஸ்வரன் அவர்கள் தலைமையில் வெகுசிறப்பாக நடைபெற்றது. தொடர்ந்து விருந்தினர்களின் சிறப்புரைகள் இடம் பெற்றன. திரு.ந..விஜேந்திரன் திருகோணமலை வலயக்கல்விப் பணிப்பாளர், முன்னாள் வலயக்கல்விப்...... 13


விளம்பரம் செய்யுங்கள்

வியாபாரத்தைப் பெருக்குங்கள்

அழைபேசி - 075-2954733





Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org